

திருக்கோயில்
நவம்பர் - டிசம்பர் 1984 விலை ரூ. 4



## நம் முதல்வர் எம்.ஜி.ஆர். நலம் அடைந்தார்!
## இறையருட்குச் சால நன்றி!

"உளம்ஒன்று பிரார்த்தனையால், உலகர்எலாம்
கனாக்காணும் உதனின் ஓங்கி,
வளம்உறுபல் நலங்கள்எலாம் வாய்த்தல் திண்ணம்;
பலகோடி மக்கள் செய்த
அளவில்பக்திப் பிரார்த்தனையால் அரும்பெரும்நம்
முதல்வர் எம்.ஜி.ஆர், நலம் அடைந்தார்!
தளநாய கராய்ப்பதவி ஏற்றமர்ந்தார்!
இறையருட்குச் சால நன்றி!"

—ந. ரா. முருகவேள்

[முகப்பு]

அருள்மிகு
திருவண்ணாமலைக் கோயில் தோற்றம்

# திருக்கோயில்

ஆசிரியர் : ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

| மாலை : 26 | திருவள்ளுவர் ஆண்டு 2015, ரக்தாட்சி ஆண்டு, கார்த்திகை—மார்கழி நவம்பர், டிசம்பர் 1984 விலை ரூ. 4-00 | மணி : 11, 12 |
|---|---|---|

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

***திருக்கோயில்*** திங்கள் இதழின் சந்தாதாரர்களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்,

**ஆணையர் அவர்கள்,**
**அறநிலைய ஆட்சித்துறை,**
**சென்னை — 600 034**

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஜனவரி முதல் டிசம்பர் வரையுள்ள காலம், சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும்.

தனிப்பட்ட சந்தாதாரர்கள் ஒவ்வொருவரும் நேரடியாக ஆணையர் அலுவலகத்திற்கே பணம் அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நாளுக்கு நாள் உயர்ந்துவரும் தாள்விலை, அச்சகக் கட்டணம், அஞ்சல்தலைக் கட்டணம் காரணமாக, 1983 ஜனவரி முதல் ''திருக்கோயில்'' திங்கள் இதழின் ஆண்டுச்சந்தா உள்நாட்டிற்கு ரூ.15 லிருந்து ரூ.24 ஆகவும், இலங்கை மலேசியா முதலிய வெளிநாடுகளுக்கு ரூ.25 -லிருந்து ரூ.36 -ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

**ஆதலின், திருக்கோயில் இதழின் ஆண்டுச் சந்தா 1983 ஜனவரி மாதம் முதல், பின்வருமாறு நிர்ணயிக்கப்படுகின்றது:**

| | | |
|---|---|---|
| **உள்நாடு** | ரூ. | 24.00 |
| **வெளிநாடு** | ரூ. | 36.00 |

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும்பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் தெரிவித்து உதவினால்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும் பொழுது மணியார்டர் கூப்பனில், புதிய சந்தா என்பதைக் குறிப்பிடுமாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் (Pin Code) எண்ணுடன் தெரிவிக்குமாறும், கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப்போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## பொருளடக்கம்

துவயம் தித்திக்கும் திருவாய்மொழி
—திரு நாராயண. வேணுகோபால் நாயகர்

பிரார்த்தனையின் பெரும் பயன்
—திரு ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.

சிலப்பதிகாரக் காப்பிய மாந்தர்
—டாக்டர் ச. வே. சுப்பிரமணியம் எம்.ஏ., பிஎச்.டி.

திருவண்ணாமலைத் தீபச் சிறப்பு

பரஞ்ஜோதி முனிவர் பாடல் நலன்

குலோத்துங்கனின் கோயில்கள்
—திரு இரா. கலைக்கோவன் எம்.பி., பி.எஸ்., டி.ஓ.

முதல் முழக்கமும் முழுமுழக்கமும்
—திரு நா. வேணுகோபால் நாயகர் பி.ஏ.பி.எல்.

சேக்கிழார் செய்யுளின் தெய்வநலம்
—திரு ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.

வைணவம்
—திரு க. பத்மநாபன்

நம்மாழ்வார் அருளிய திருவிருத்தம்
(மூலமும் உரையும்)

சிவஞான முனிவர்
—ஆசிரியர்

நூலும் கவிதையும்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு

# துவயம் தித்திக்கும் திருவாய்மொழி!

திரு. நாராயண. வேணுகோபால் நாயகர்
வழக்கறிஞர்: நோட்டரி பப்ளிக்
செயலாளர்: ஸ்ரீ வைணவ மகாசங்கம்

## திருவாய்மொழியின் உயர்வு:

சடகோபரின் சரமப் பிரபந்தமான திருவாய்மொழி சாமவேதத்தின் சாகைகள் போன்று ஆயிரம் பாசுரங்களாகப் பரிணமித்தன. ஆயிரத்துக்குக் குறைய முடியாது. ஏன்?

''நாராயணனின் நாமங்கள் ஆயிரம்! தோள்கள் ஆயிரம்! திருக்கண்கள் ஆயிரம்! அவயவங்கள் ஆயிரம்! பள்ளியான அனந்தாழ்வாரின் பணாமுடிகளும் ஆயிரம்!''

அவன் உறுப்புகளுக்கு உவமையாகக் கூறும் புண்டரீகத்தின் (தாமரையின் அல்லிகள்) இதழ்கள் ஆயிரம். திருவாய்மொழி ஆயிரம் பாசுரங்கள் கொண்டது எனத் திகைக்க வேண்டாம்! திருவாய்மொழி சொல் தொடர் அந்தாதி மட்டுமல்ல, (அதாவது பாசுரத்தின் கடைசி சொல் அடுத்த பாசுரத்தின் முதல் சொல்லாக அமைவது) திருவாய்மொழி பொருள் தொடர் அந்தாதியும் கூட! ஒரு பத்தில் (பத்து-நூறு பாசுரங்கள் கொண்டது) தெரிவிக்கும் விஷயத்தைத் தொடர்ந்துவரும், அடுத்த பத்தின் பாசுரங்களில் உள்ள விஷயம்.

இப்படிச் சொல் தொடர்பும், பொருள் தொடர்பும் கொண்டு அருளப்பட்ட திருவாய்மொழி உலகிற்கு ஒரு புதுமை! ஆம், உலகிற்கு ஒரு புதுமை!! ஆன்ற தமிழ் மறைகள் ஆயிரமுமான திருவாய்மொழியின் சொல்பெற்று உயர்ந்தனவாம் அரங்கனின் கொற்றப் புயங்களும்.

## வைணவத்தின் ஆதாரவிழுது, துவயம்:

சகல வேத சாத்திரங்களையும் அடிப்படையாகக் கொண்டு, ஓங்கி சிரஞ்சீவியாகப் பரவி எழுந்துள்ளதே; வைணவ ஞானமாகிய ஆலமரம். வைணவ ஞானநூல்களே இதன் விழுதுகள். ஒவ்வொரு நூலும், வைணவ சமயமாகிய ஆலமரத்தைத் தாங்கும் விழுது. 'அர்த்த பஞ்சகமே' இந்த வைணவ ஞானமாகிற ஆல மரத்தின் அடிவிழுது. இந்த அர்த்த பஞ்சக அடிவிழுதின் அந்தரங்க உள்விழுதே ''துவயம்'' என்னும் மந்திர ரத்தினம். இந்த மந்திர ரத்தினமான துவய ஞானத்தையே பொருள் தொடை அந்தாதியுமான திருவாய்மொழியில் தொடர்ந்து பத்துக் கருத்துக்களாகப் பத்துப் பத்துகளிலும் பராங்குசர் அருளியுள்ளார்.

எந்தச் சமயக் கருத்தையும் பயின்றால் அதைப் பகுத்தறிவு பாராட்ட வேண்டும். மனச்சாட்சியும் போற்றி மகிழ வேண்டும். அதை எடுத்துரைத்தால் தர்க்கம் தலை வணங்க வேண்டும். மேதாவிலாசமும் மெச்ச வேண்டும். இவ்விதமாயின் அந்த ஞானத்தால் பக்திப் பயிர் செழித்து முத்திக் கனி பெருகும். இந்த அடிப்படையில் திருவாய்மொழியில் அருளப்பட்டுள்ள துவய ஞானத்தை ஆராய்வது வைணவர்களுடைய கடமை. ஏதோ நமக்குள்ளே மறைவாகப் பழங்கதைகள் பேசுவதில் ஓர் பயனுமில்லை. திருக்குருகூர் திவ்ய தேசத் திருப்புளியாழ்வாரின் திருநிழலிலிருந்து நம்மாழ்வார்,

'அத்தைத் தின்று அங்கே கிடக்கும்!'

என முழங்கியதே முதல் முழக்கம்.

திருவாய்மொழியில் பத்துப் பத்துக்களால் ஆன ஞானச் சுவை கொண்ட ஆயிரம் பாடல்களிலும் அருளிய துவய ஞானமே ''முழு முழக்கம்''.

துவய மந்திரத்தின் முழுவடிவமானது:

(1) ஸ்ரீமத் (2) நாராயண (3) சரணௌ (4) சரணம் (5) பிரபத்யே (6) ஸ்ரீ (7) மதே (8) நாராயண (9) ஆய, (10) நம!

இனி இம்முழு முழக்கம் முழுவதும் திருவாய்மொழியில் நம்மாழ்வாரின் முதிர்ந்த முழக்கமாகவே அமைந்துள்ளதைச் செவி ஏற்கலாம்.

அர்த்த பஞ்சக ஞானம், திருவாய்மொழியில் ஒரு பத்திலிருந்து வேறு எங்கோ ஒரு பத்துக்குத் தாவும். மறுபடியும் திரும்பித் தாவும். அப்படியன்று துவயம். ஒரு பத்தில் ஒரு கருத்தை வெளியிட்டு, அடுத்த பத்தும் அடுத்த கருத்தையே ஆற்றொழுக்காக அருளும்.

**கருத்து 1:**

## மலர்மகள் துணையே, மாதவன் அருள் தரும்

துவயத்தின் பத்துக் கருத்துக்களே திருவாய்மொழியில் பத்துப் பத்துக்களாக அமைந்துள்ளன. உலகில் பிறவி எடுத்துள்ள நாம் யாரைப் பற்றினால் உய்வு உண்டு? திருமகளோடு இணைந்து திருமாலாகச் சேவை சாதிக்கும் இறைவனையே பற்ற வேண்டும். பாப ரூபிகளான நம்மை இறைவன் வெறுத்தாலும், உடனிருந்து புருஷகாரம் (பரிந்துரை) புரிந்து காப்பாற்றுகின்றவள் திருமகளே! அவதார காலங்களிலே காகத்தையும் இரட்சித்தாளே! எனவே இலட்சுமிப் பிராட்டியார் இறைவனுடன் எப்போதும் கூடியிருத்தலையே ''ஸ்ரீமத்'' என்னும் துவயம் முதற்பதத்தால் தெரிவிக்கின்றது.

திருமகளுக்கு நாயகனாக இருக்கும் தன்மையை திருவாய்மொழியின் முதற் பத்திலே நம்மாழ்வார் ஆறு பாடல்களிலே அருளுகிறார். அவற்றுள் ஒரு பாசுரம்.

''பத்துடை அடியவர்க்கு எளியவன்!
பிறர்களுக்கு அரிய
வித்தகன்! மலர் மகள் விரும்பும்
நம் அரும் பெறல் அடிகள்!
மத்துறு கடைவெண்ணெய் களவினில்
உரலிடை யாப்புண்டு,
எத்திறம் உரலினோடு, இணைந்து
இருந்து ஏங்கிய எளிவே!'' (1-3-1)

திருமகள் கேள்வனாக இருக்கும் தன்மையை திருவாய்மொழியில் ஐந்து ஏனைய இடங்களில் நம்மாழ்வார் அருள்வது:

1) ''மாமலராள் மைந்தன்'' (1-5-9)
2) ''திருமகளார் தனிக்கேள்வன்''(1-6-9)
3) ''திருவின் மணாளன்'' (1-9-1)
4) ''பூமகளனார் தனிக் கேள்வன்''(1-9-3)
5) ''மைந்தனை மலராள் மணவாளனை'' (1-10-4).

**கருத்து-2:**

## ''உலகளந்த உத்தமனே உயிர்களைக் காப்பவன்''

இவ்விதமாகத் திருமகளோடு இனிதமர்ந்து செல்வனான ஸ்ரீமத் நாரயணன் சகல அசித்து, சித்துக்களையும் உடலாகக் கொண்டு திகழ்கின்றான். எனவே அவைகளைக் காப்பாற்றவல்லவன் அவனே. தன் உடலை அவனே தான் அல்லவா காப்பாற்ற வேண்டும்.

இதனையே துவயமும் ''நாராயணாய'' எனக் குறிக்கும். சகல அசித்து சித்துக்களையும் உடலாகக் கொண்டு அவற்றை இயக்கும் நாராயண தத்துவத்தை நம்மாழ்வார் திருவாய்மொழி இரண்டாம் பத்தில் மூன்று பாடல்களிலே அருளிச் செய்கின்றார். அவற்றுள் ஒரு பாசுரம்:

'நாரணன் முழுஏழ் உலகுக்கும் நாதன்!
வேதமயன்!
காரணம், கிரிசை, கரும, மிவைமுதல்வன்எந்தை!
சீரணங் கமரர் பிறர்பல ரும்தொழு தேத்த
நின்று,
வாரணத் தைமருப் பொசித்த பிரான்! என்
மாதவனே'

ஏனைய இரண்டு அருளிச் செயல்களாவன:

1) ''எம்மான் நாரணற்கு'' (2-1-7)
2) ''எம்பிரான் எம்மான் நாராயணனாலே''(2-7-1)

**கருத்து-3:**

## ''வண்புகழ் நாரணன் திண் கழல் சேரே!''

திருமகளோடு அவள் புருஷகாரத்தாலே (பரிந்துரையாலே) உலகை ரட்சித்துக்கொண்டு உலகுக்குநாதனாகவிளங்கும் நாராயணனுடைய திருவடித் தாமரைகள் இரண்டும் எல்லா உலகங்கட்கும் புகலிடமானவை! நாராயணனுடைய சர்வலோக சரண்யமான சரணாரவிந்த யுகளத்தை திருவாய்மொழி மூன்றாம் பத்தில் ஐந்து பசுரங்களில் மங்களாசாசனம் செய்தருள்கிறார் மகிழ்மாறன்! அவற்றுள் ஒரு பாசுரம்:

''ஓயும் மூப்பு பிறப்பு இறப்புப் பிணி
வீயுமாறு செய்வான் திருவேங்கடத்து
ஆயன்! நாண் மலராம் அடித்தாமரை
வாயுள்ளும் மனத்துள்ளும் வைப்பார்
கட்கே?!''

இத்திருவடிகளையே திருவாய்மொழியில் மேலும் நான்கு பாசுரங்களில் மங்களாசாசனம் செய்தருள்கின்றார்.

1) அங்கதில் அடியன் (3-4-3)
2) அவன் பாத பங்கயம் (3-6-4)
3) அன்று தேந்துடாவிய பெருமான் கனைகழல் (3-6-10)
4) மூவுலகும் தொழுது ஏத்தும் சீர்அடியான் (3-8-1)

**கருத்து-4:**

''வல்வினை கெடுப்பதூஉம்,
அவ்வினை கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் எம் அடிகளே!''

மந்திர சிரேஷ்டமான துவயம் -(1) ஸ்ரீமத் (2) நாராயண, (3) சரணௌ, எனத் தொடங்கி மறுபடியும் (4) சரணம் என்கிறது.

இதனால் ஸ்ரீமந் நாராயணனுடைய திருவடித் தாமரைகள், நமக்குத் தஞ்சமாக (பிராபகமாய்) இருக்கும் தன்மையைக் குறிப்பிடுகின்றது. அதாவது இறைவனுடைய இணையடிகள் நமக்கு இரக்க வேண்டாதவைகளில் பற்றை விருப்பு இல்லாதனவற்றை நீக்கி, விருப்பு ஏற்பட வேண்டியவைகளில் விருப்பு உண்டாக்கி உள்ளனவற்றைப் பெறுதல் செய்தலாகிற தன்மையை உடைய உபாயத்தன்மை சொல்லப்பட்டது. முதலில் வரும் 'சரணௌ' என்பது இணையடிகளையும், அடுத்துவரும் 'சரணம்' என்பது அல்லனவற்றை நீக்கியும் நல்லனவற்றைத் தந்தும் அருளும் உபாயமாக உள்ளதைக் காட்டுகிறது.

இதனை நம்மாழ்வார் நான்காம் பத்திலே பத்து பாசுரங்களால் வெளியிடுகிறார். இறைவனது திருவடிகள் உபாயமாக அமைந்து வல்வினை தீர்க்கும் கண்ணன் என்பதால் அல்லனவற்றைப் போக்கலும் தொழுதெழ வீற்றிருப்பரே என்பதால் நல்லவற்றைத் தந்து அருளுதலையும் கீழ்வரும் பாசுரத்திலே சாதிக்கின்றார் சடகோபர்!

''வல்வினை தீர்க்கும் கண்ணனை
வண் குருகூர்ச் சடகோபன்,
சொல் வினையால் சொன்ன பாடல்
ஆயிரத்துள் இவை பத்தும்,
நல்வினை என்று கற்பார்கள்
நலனிடை வைகுந்தம் நண்ணித்
தொல்வினை தீர எல்லோரும்
தொழுது எழ வீற்றிருப்பாரே''

இக்கருத்தையே மற்றும் ஒன்பது பாசுரங்களில் சுட்டிக் காட்டுதல்:

1) ''இலங்கை நகர் அம்பு எரி உயித்தவர்'' (4-2-8)
2) ''தொல் வினை தீர்'' (4-4-11)
3) ''வெய்ய நோய்கள் முழுதும்
வியன் ஞாலத்து வீயவே'' (4-5-2)
4) ''மேவிநின்று தொழுவார் வினை போக'' (4-5-4)
5) ''பிறந்தும், செத்தும், நின்று
இடறும் பேதமை தீர்ந்து ஒழிந்தேன்'' (4-7-7)
6) ''நோயே, மூப்பு, இறப்பு, பிறப்பும்
பிணியே என்று இவை ஒழிய'' (4-9-7)
7) ''வேட்கை எல்லாம் விடுத்து
கூட்டரிய திருவழக்கண் கட்டினன்'' (4-9-9)
8) ''அஃதே உய்யப் புகுமாறு'' (4-7-11)
9) ''உய்வு உபாயம் மற்று இன்மை தேறி'' (4-3-11)

**கருத்து-5:**

''வீடுடையானிடம் வீடு செய்ம்மினே''

''ஸ்ரீமந் நாராயண சரணௌ சரணம்'' எனத் தொடங்கும் துவய மந்திரத்தின் முதல் வாக்கியம் - அதாவது பூர்வ வாக்கியம்,

''பிரபத்யே'' என முடிகிறது. 'பிரபத்யே' என்கிற பதம், பக்தன் இறைவனிடம் மிக்க நம்பிக்கை கொண்டுள்ள துணிவைச்சொல்லுகிறது. இதனை மகாவிசுவாசம் என்பதுண்டு. பேறு தப்பாது என்று துணிந்திருக்கையுமாம். நம்பிக்கையும், பக்தியும், துணிவும், விசுவாசமும் இல்லாமல் எப்படி ஒருவன் இறைவனை அடைய முடியும்? அவன் அருளுக்கும் அவன் திருவடிகளே நமக்கு உபாயம் என்பதை ஐந்தாம் பத்தில் ஆறு பாசுரங்களால் அருளுகின்றார் ஆழ்வார். இதுவே பிரபத்யே என்பதை விளக்கும் முதல் பாடல்!

''ஆறு எனக்கு நின் பாதமே
சரணாகத் தந்து ஒழிந்தாய்
உனக்கு ஓர் கைம்மாறு நான் ஒன்றிலேன்
எனது ஆவியும் உளதே
சேறுகொள் கரும்பும் பெருஞ் செந்நெலும்
மலிதண் சிரீவர மங்கை
நாறு பூந்தண் துழாய்முடியாய்,
தெய்வ நாயகனே!'' (5-7-11)

இத்துணிவையே அதாவது விசுவாசத்தையே மேலும் ஐந்து பாசுரங்களில் அருள்கின்றார்.

1) ''தமியேனுக்கு அருளாய்!'' (5-7-2)
2) ''உன்னால் அல்லால்'' (5-8-3)
கழல்கள் அவையே சரணாகக் கொண்ட (5-6-3)
3)''நம்பெருமான் அடிமேல் சேமங்கொள் தென்
குருகூர்ச் சடகோபன்'' (5-9-11)
4) ''நாகணைமிசை நம்பி நான் சரணே!
சரண் நமக்கு (5-10-11)
5) ''நாடொறும் ஏக சிந்தையனாய்''

குருகூர்ச் சடகோபர் இந்தப் பாசுரங்களிலே மாறனைப்போல் சிந்தை, சொல், செயலால் துதிக்க வேண்டாம், சிந்தையே போதும் நமக்கு, திருமகளோடு கூடிய திருமாலின் அகில லோகத்தையும் காக்கும் சக்தி அறிந்து,

அவனுடைய திருவடிகளையே உபாயமாகப் பற்றிச் சரண் அடைய வேண்டும் என்பதையே இந்த துவயத்தின் முதல் வாக்கியம் வெளியிடுகிறது. ஆக இதுவரை விண்ணப்பித்ததால் துவய மந்திரத்தின் முதல் அல்லது பூர்வ வாக்கியம்:

(1) ஸ்ரீமத் (12) நாராயண (3) சரணௌ (4) சரணம் (5) பிரபத்யே!

என்னும் ஐந்து சொற்களையுடையது போலவே இதன் உத்திர வாக்கியம் அல்லது இரண்டாம் வாக்கியமும் ஐந்து சொற்களால் ஆகியுள்ளது. அதாவது:

(1) ஸ்ரீ (2) மதே (3) நாராயண (4)ஆய (5) நம! என்பதாம்.

இவ்விதம் இரண்டு வாக்கியங்களால் அமைந்துள்ளது பற்றியே இம்மந்திரம் துவயம் எனப்படுகின்றது. வடமொழியில் துவயம் என்றால் இரண்டு எனப்பொருள்.

இந்த உத்திர வாக்கியத்தின் திரண்ட பொருளாவது: சர்வ சுவாமியாக இருக்கின்ற, சர்வேச்வரனது திருவடிகளில் இயற்றும் கைங்கரியத்தைப் பிரார்த்திப்பதே. நாம் இறைவனிடம் அவனுக்குச் செய்யும் கைங்கரியம் புரிய வேணுமென்று, பிரார்த்திக்கவும் வேண்டுமா? 'உள்குவார் உள்ளிற்றெல்லாம் உடன் இருந்து அறிகின்றவனாயிற்றே இறைவன்'. எனினும் ஒரு குழந்தை தன்னுடைய நோய் தீரப்பெற்று''அன்னம்! தண்ணீர்!!'' என்று அவாவினால் தாயின் உள்ளம் உகப்பது போன்றே இறைவனுடைய திருவுள்ளமும் உகக்குமே!

**கருத்து-6:**

''நீயும் திருமகளும் நின்றாயால்''

இரண்டாம் வாக்கியத்தில் முதல் பதமாக உள்ளது. இது திருமகள், அத் திருமகளின் நாயகன் இவர்களுடைய நித்திய சம்பந்தத்தை வெளியிடுகிறது. கைங்கரியத்தைத் தந்தருளியதற்கு உறுப்பான திருமகள் அவளுடைய நாயகன் இவர்களுடைய அகலகில்லாத (பிரிவற்ற) உறவைக் காட்டுகிறது.

இவ்வுறவை-அகலாது இருக்கும் அதாவது திருமால், பிராட்டியின் அகலாது இருக்கும் இந்த உறவை ஆறாம் பத்தில் நான்கு பாசுரங்களால் நம்மாழ்வார் வெளியிட்டருள்கிறார்.

முதல் பாசுரம்:

''திருந்து வேதமும் வேள்வி யும்திரு
மாம களிரும் தாம், மலிந்
திருந்து வாழ்பொருநல்வ டகரை
வண்தொ லைவில்லி மங்கலம்,
கருந்த டங்கண்ணி கைதொ ழுதஅந்
நாள்தொ டங்கியிந் நாடொறும்,
இருந்தி ருந் தர விந்த லோசன!
என்றென் றேநைந்தி 'ரங்குமே''

இதனையே,

(1) ''அடிமை செய்வார் திருமாலுக்கே'' (6-5-11)

(2) ''இந்த நாண்மலராள் கொழுநன்'' (6-7-8)

(3) ''என் திருமார்வற்கு (6-8-10)

(4) ''கோவத் திருமா மகளோடுஉன்னை (6-9-3)

என்று சாதித்தருள்கிறார் சடகோபர்.

நம்பிள்ளையின் கடாட்சத்தினால் வடக்குத் திருவீதிப் பிள்ளைக்குத் திருக்குமாரராய் அவதரித்த பிள்ளை லோகசாரியரும் தாம் அருளிய முமுட்சுப்படியிலே இந்தச் சேர்த்தியின் பெருமையை வலியுறுத்துகின்ற விதம், ''இளைய பெருமாளைப் போலே இருவருமான சேர்த்தியிலே அடிமை செய்கை முறை-

''அடிமை தான் சிந்திப்பதும், ரசிப்பதும் அச்சேர்த்தியிலே''

**கருத்து-7:**

## "இணைப்பில் இயற்றும் கைங்கரியமே இனிக்கும்"

''ஸ்ரீயை அடுத்துள்ளது 'மதே' என்னும் பதம்''.

இருவருமான சேர்த்தியிலே நாம் புரியும் கைங்கரியம் இறைவனுக்குப் பரம மகிழ்ச்சியை உண்டாக்கும். இறைவன் எல்லையில்லாத இனிமையை அடைகின்றானாம். பிராட்டியும் கூடத் தவறி எதிர்த்துச் சொன்னால் மாயவன் மதிக்கமாட்டானாம்!

''தன்னடியார் திறத்தகத்துத்தாமரையா
ளாகினும் சிதகு ரைக்குமேல்,
என்னடியா ரதுசெய்யார் செய்தாரேல்
நன்றுசெய்தா ரென்பர்போலம்''
(பெரியாழ்வார் திருமொழி)

வீடணனைப் பற்றி எத்தனை கோள்கள் மூட்டினார்கள். கடற்கரையிலே இராமபிரானிடம். இவைகளுக்கு இசைந்தானோ! எனவே அந்த உதாரணத்தையே மறைமுகமாகக் காட்டுகிறார் மெய்ந்நாவர், மெய்யடியார் விட்டுசித்

தர்! இனி, இந்த அருளிச் செயலின் ஏனைய அடிகளையும் சேவிப்போம்.

''மன்னுடைய வீடணற்காய் மதிலிலங்கை
திசைநோக்கி
மலர்க்கண் வைத்த
என்னுடைய திருவரங்கற்கு அன்றியும்
மற்றொருவர்க்கு
ஆள் ஆவரோ! ''
பெரியாழ்வார் திருமொழி

இறைவன் பக்தனுடைய கைங்கரியத்தை ஏற்று ஆராத அமுதாகச் சேவை சாதித்தல்:

''சிந்திக்கும் திகைக்கும் தேறும்கை கூப்பும்
திருவரங் கத்துள்ளாய் என்னும்
வந்திக்கும் ஆங்கே மழைக்கண்ணீர் மல்க
வந்திடாய் என்னெற்றே மயக்கும்
அந்திப்போ தவுணன் உடலிடந்தானே
அலைகடல் கடைந்தவா ரமுதே
சந்தித்துன் சரணம் சார்வதே வலித்த
தையலை மையல்செய் தானே!
திருவாய்மொழி(7-2-5)

இறைவன் எய்தும் இன்பத்தையும் அவரது இனிமையையும் மேலும் திருவாய்மொழியில் அருள்வது:

(1) ''கன்னல் அமுதே?'' (7-1-2)
(2) ''கொடியேன் பருகு இன்னமுதே'' (7-1-7)
(3) ''அலைகடல் கடைந்த ஆரமுதே'' (7-2-5)
(4) ''திருமாலின் சீர்சிறப்பு, எதிர்காலம் பருகினும் ஆர்வனோ''(7-9-9).
(5) ''இவ்வேழுலகை இன்பம் பயக்க'' (7-10-1)

**கருத்து-8:**

'நாராயணன் மூர்த்தி''

சேர்த்தியிலே நாம் புரியும் கைங்கரியத்தை ஏற்று மகிழும் இறைவனை எல்லாப் பொருள்கட்கும் தலைவனாக விவரிக்கிறது அடுத்த பதமான ''நாராயண'' என்னும் பதம். ''எல்லோருக்கும் சுவாமியாக இருப்பவன் தானே கைங்கரியத்தை ஏற்று மகிழமுடியும்''. நாராயணன் உபய விழதிநாதன் என்பதை நம்மாழ்வார் எட்டாம் பத்தில் ஐந்து பாசுரங்களால் அருள்கின்றார்.

(1) ''அடியேன் பெரிய அம்மானே'' (8-1-3)
(2) ''விண்ணவர்கோன் எங்கள் கோனை'' (8-2-2)
(3) ''அமர்ந்த நாதனை'' (8-4-10)
(4) ''மூவுலகாளி'' (8-9-5)

ஒன்பதாம் திருமொழி 11வது பலச்சுருதி பாசுரத்தில் அருள்வது:

''நேர்பட்ட நிறைமூ வுலகுக்கும்
நாயகன் றன்னடிமை,
நேர்பட்ட தொண்டர் தொண்டர்
தொண்டர்-தொண்டன் சடகோபன்
சொல்
நேர்பட்ட தமிழ்மாலை யாயிரத்துள்
இவையு மோபத்தும்
நேர்பட் டாரவர், நேர்பட்டார்
நெடுமாற்கடி மைசெய்யவே''
(8-9-11)

**கருத்து-9:**

''தொண்டுக்கோலம்பூண்டு''

இவ்விதமாக எல்லாப்பொருட்கும் நாதனான இறைவனுக்கு நாம் நித்திய கைங்கரியம் புரிய வேண்டுமென்று அடுத்துள்ள

''ஆய'' என்னும் பதம் வெளியாகிறது. இறைவன் நித்தியம், திருமகள் நித்தியம், நமது ஆத்மாவும் நித்தியம். எனவே, இறைவன்பால் செய்யும் கைங்கரியமும் நித்யமாக இருத்தல் வேண்டும். இதனை அருளுகிறார் ஆழ்வார்.

பண்டை நாளாலே நின்திரு வருளும்
பங்கயத் தாள்திரு வருளும்
கொண்டுநின் கோயில் சீயத்துப்பல்
படிகால்
குடிகுடி வழிவந்தாட் செய்யும்,
தொண்ட ரோர்க் கருளிச் சோதிவாய்
திறந்துன்
தாமரைக் கண்களால் நோக்காய்,
தெண்டிரைப் பொருநல் தண்பணை
சூழ்ந்த
திருப்புளிங் குடிக்கிடந் தானே!
(9-2-1)

மற்றும் இதனை திருவாய்மொழியில் மேலும் ஆறு பாசுரங்களால் அருள்வது:

(1) நின் தீர்த்த அடிமை மற்றேவல் (9-2-2)
(2) தொடர்ந்த குற்றேவல் செய்து (9-2-3)
(3) கொடுவினையேனும் பிடிக்க (9-2-10)
(4) உறுவது இது என்று உனக்கு ஆட்பட்டு (9-4-4)
(5) ஆட்கொள்வானி நத்து (9-6-7)
(6) நானும் மீளா அடிமைப்பணி செய்யப் புகுந்தேன்(9-8-4)

''அற்றது பற்று எனில் உற்றது வீடு''

இரண்டாவதான கடைசியான வாக்கியத்திலே கடைசியாக உள்ளது 'நம' என்னும் மிக மிக முக்கியமான பதம். இதனையேபதினைந்து பாசுரங்கள்கொண்டு விவரிக்கின்றார் நம்மாழ்வார்.

'நம' என்றால் கைங்கரியத்துக்கிருந்த தடையாக இருப்பதைப் போக்குதலாம். கைங்கரியத்துக்கு விரோதமாக உள்ள அகங்கார மமகாரங்கள் அடியோடு ஒழிய வேண்டுமென்பதை 'நம' என்னும் பதம் குறிப்பிடுகிறது. 'நம' பதம்,

(1) சொரூப விரோதி
(2) உபாயவிரோதி
(3) புருஷார்த்த விரோதி

என்னும் மூன்றையும் கழிக்கவேண்டுமென்பதுடன், இறைவனுக்குச் செய்யும் கைங்கரியத்தால் நாம் மகிழ்வதும் நம் உயர்வை தெரிய வைப்பதும் அல்லாமல் அவன் உகப்பிற்காகவும் அவன் முக உல்லாசத்துக்காகவுமே கைங்கரியம் செய்யவேணும் என்பதை 'நம' பதம் முக்கியமாக வலியுறுத்துகின்றது.

இடர் கெடுவதாவது: கைங்கரியத்திற்கு இடர் கெடுவதும், நம் மனதின் உகப்பிற்காகக் கைங்கரியம் புரிதலைத் தவிர்ப்பதும் ஆகும். இலட்சுமணனான இளைய பெருமாளைப் போல், இராமபிரான் திருவுள்ளம் உகப்பதற்காகவே கைங்கரியம் புரியவேண்டும். அவன் நம்மை அனுபவிக்கின்றான் என்றும், நாம் அனுபவிக்கப்படுகிறோம் என்றும் வேற்றுமை கூடாது. நாம மந்திரத்தை வெளியிடும் திருவாய்மொழிப் பாசுரங்களைச் சேவிப்போம்!

''கெடும் இடராய எல்லாம்
கேசவா வென்ன நாளும்
கொடுவினை செய்யும் கூற்றின்
தமர்களும் குறுககில்லார்,
விடமுடை அரவில்பள்ளி
விரும்பினார் சுரும்பலற்றும்,
தடமுடை வயல் அனந்தபுரநகர்
புகுதுமின்றே! (10-2-1)

''புண்ணியம் செய்துநல்ல புனலொடு
மலர்கள்தூவி,
எண்ணுமி னெந்தைநாமம் இப்பிறப்
பறுக்குமப்பால்
திண்ணம்நாம் அறியச் சொன்னோம்
செறிபொழில் அனந்தபுரத்து
அண்ணலார் கமலபாதம் அணுகுவார்
,அமரராவார்''
(10-2-5)

''அவாவறச் சூழ்அரியை அயனை அரனை
அலற்றி
அவாவற்று வீடுபெற்ற குருகூர்ச் சட
கோபன் சொன்ன
அவாவிலந்தாதிகளால் இவையாயிரமும்,
முடிந்த
அவாவிலந் தாதியிப் பத்தறிந் தார்பிறந்
தார்உயர்ந்தே''
(10-10-11)

திருவாய்மொழியில் 'நம'ப் பதத்தை வெளியிடும் சுதியை பன்னிரண்டு குறிப்புக்களாவன:

(1) துயர் கெடும் கடிது (10-1-8)

(2) எழுமையும் ஏதம் சாரா (10-2-2)

(3) தீரும் நோய் வினைகள் எல்லாம்
(10-2-3)

(4) தீரும் நோய் வினைகள் எல்லாம்
உன்தன் திருவுள்ளம் இடர்கெடும்
தோறும் நாங்கள் வியக்க இன்புறு
தும் எம்பெண்மை ஆற்குறாம்
(10-3-9)

(5) பிணி தன்றும் சாரா பிறவி கெடுத்து
ஆளும் (10-4-7)

(6) பிறவித் துயர் கடிந்தோம் (10-4-3)

(7) விண்டே கழிந்த வினை ஆயின
எல்லாம் (10-4-9)

(8) அமரா வினைகளே (10-5-9)

(9) கடு நாகம் புகல் ஒழித்த (10-4-9)

(10) பிறவி கெடுத்தேன் (10-8-3)

(11) தடுமாற்ற வினைகள் தவிர்த்தான்
(10-8-5)

(12) அந்தி தொழும் சொல்லு (10-8-7)

இவ்விதமாக ஸ்ரீமதே நாராயணய நம என்னும் கடைசி வாக்கியம் முடிவுபெறுகிறது.

(1) ஸ்ரீமந் (2) நாராயண (3) சரணௌ (4) சரணம் (5) பிரபத்யே (6) ஸ்ரீ (7) மதே (8) நாராயண (9) ஆய (10) நம''

என்னும் இருவாக்கியங்களில் உள்ள ஞான அமுதைத் திரட்டி அருளுகின்றார் நம்மாழ்வார் ஒரே பாசுரத்திலே.

''அகல கில்லேன் இறையும், என்
அலர்மேல்மங்கை யுறைமார்பா
நிகரில் புகழாய் உலகம் மூன்றுடையாய்
என்னை ஆள்வானே
நிகரில் அமரர் முனிக்கணங்கள்
விரும்பும் திருவேங் கடத்தானே
புகலொன் றில்லா அடியேனுன்
அடிக்கீ ழமர்ந்துபுகுந்தேனே'' (6-10-11)

பகுத்தறிவும், மனச்சாட்சியும் சாட்சி சொல்ல, தர்க்கமும் மேதாவிலாசமும் மெச்சும் படியாக அமைந்துள்ள இந்த துவயமந்திரமே சிறந்ததாகும்.

(1) ஏனைய ஞான நூல்களில் தேகத்தாலே பேறு என்றும், (2) திருமந்திரத்தால் ஆத்மாவாலே பேறு என்றும் அடையமுடியாத இந்த வழிகளைக் காட்டி நம்மைப் புயப்படுத்தாமல் சுலபமான வழியைக் காட்டி பிராட்டியாலே பேறு என்று நம்மை மகிழ்விப்பது துவயமே யாகும். திருமந்திரத்தில் பிராட்டியைப் பற்றிய பேச்சு வெளிப்படையாக இல்லை. சரம சுலோகத்திலோ பிராட்டியைப் பற்றிய பேச்சு அணுவளவும் இல்லை. எனவே பிராட்டியைப் பற்றியே கூறும் இரண்டு வாக்கியங்களாலான தூய மந்திரமே நமக்கு வழிகாட்டும் இரு விழிகள்.

துவயம் வாழ்க! வெல்க!

---

# ஈடு : பெயர்க் காரணம்

வடக்குத் திருவீதிப் பிள்ளை என்பவர் எழுதியருளிய திருவாய்மொழி முப்பத்தாறாயிரப்படி (36) வியாக்கியானத்துக்கு ஈடு என்று பெயர்.

தெள்ளியதா நம்பிள்ளை செப்பும் நெறிதன்னை
வள்ளல் வடக்குத் திருவீதிப்-பிள்ளை
நாடறிய மாறன் மறைப்பொருளை நன்குரைத்தது
ஈடு, முப்பத்தாறா யிரம்.

இங்ஙனம் 'ஈடு' என்னும் பெயர் அமைந்ததற்குப் பின்வருமாறு பல விளக்கங்கள் அறிஞர்களாற் கூறப்படுகின்றன. (1) ஈடு-இடுதல், அணியப்பெறுதல்: அஃதாவது உடலின் மேல் அணிந்து கொள்ளப்படுவது என்னும் பொருளில் கவசம் என்பதனைக் குறிக்கும். கவசமானது உடலைக் காப்பது போன்று இம்முப்பத்தாறாயிரப்படி வியாக்கியானமும், கற்போராலும், எழுதுவோராலும், வேற்று மக்களாலும், தன்னிலையில் திரிந்து மாறுபட்டு விடாதபடி, திருவாய்மொழியின் பொருளைப் பாதுகாத்துக் கொண்டு விளங்குதலின், ஈடு என்று சிறப்புப் பெயரினைப் பெறுவதாயிற்று.

(2) ஈடு-இடுதல், எழுதுதல். நம்பிள்ளை என்னும் வைணவசமயப் பெருந்தகையார், நாடோறும் தம் காலட்சேபத்தில் அருளிச் செய்துக் கொண்டு வந்தனவற்றை, அங்ஙனமே வடக்குத் திருவீதிப் பிள்ளை ஏட்டில் எழுதி வைத்துப் போற்றிக் காத்தனராதலின், இதனை ஈடு என வழங்கினர் எனலும் பொருந்தும்.

(3) ஈடு-ஒப்பு பிரம சூத்திரத்திற்கு இராமாநுசர் செய்தருளிய ஸ்ரீபாஷ்யம் விளக்கும் ஆழ்பொருள்கள் அனைத்தும் விளங்கும் பொருட்டுச் சுதரிசன பட்டர் என்பவர் இயற்றிய **36,000** கிரந்தங்களை உடைய சுருதப்பிரகாசிகை என்னும் நூலுக்கு ஒப்பாகும்படி இயற்றப் பட்டதனால், இஃது ஈடு எனப் பெயர் பெறுவதாயிற்று எனவும் கொள்ளலாம்.

(4) திருவாய்மொழியின் சிறந்த பொருள் நலங்களை மக்களனைவரும் மகிழ்ந்து ஈடுபடும்படி செய்து வருவதாகலின், ஈடு எனப் பெயர் ஏற்பட்டது எனினும் அமையும்.

''மாறன் மறைப் பொருளை
ஈடுபடும்—படியிறே அருளிச் செய்தது''

என்பது பிள்ளை லோகஞ்சீயர் வியாக்கியான சூக்தி (உபதேச ரத்தின மாலை-44)

ஆசிரியர்.

# பிரார்த்தனையின் பெரும் பயன்

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.,

**முன்னுரை :**

உலகத்தில் பல்வேறு சமயங்கள் நிலவு கின்றன. அவைகள் ஒன்றோடொன்று இனத்தாலும், மொழியாலும், நடைமுறைப் பழக்கங்களாலும், கொள்கைகளாலும், அவற்றைப் பின்பற்றுவோர் வெவ்வேறு திறத்தினராக இருப்பதினாலும், ஒன்றோடொன்று வேறுபட்டுத் தோன்றல் இயல்பு. அவ்வாறு ஒன்றோடொன்று சமயங்கள் வேறுபட்டனவாகத் தோன்றினும், அவைகள் அனைத்தும் ஒன்றில் ஒரே கருத்துடையனவாக ஒன்றுபட்டு நிற்கின்றன. அஃதாவது இறைவனை உண்மையான அன்புடன் மன மொழி மெய்கள் ஒருமைப்பட்டுப் பிரார்த்தனை செய்வதன் மூலம் பெறுதற்கரிய பெரும் பயன்களை எல்லாம், நாம் எளிதில் பெறலாம் என்று எல்லாச் சமயங்களும் ஒருமுகமாகக் கூறுகின்றன

**பிரார்த்தனை:**

பிராத்தனை-ஜபம் - தியானம் - வழிபாடு-Prayer வேண்டுதல் முதலியன அனைத்தும், ஒரே பொருளுடைய வெவ்வேறு சொற்களாகும். உலகத்தில் உள்ள எல்லாப் பொருள்களும் தனித்தனியே ஒரு குறிப்பிட்ட ஆற்றலைப் பெற்றுள்ளது. ஆனால் உண்மை அன்பால் செய்யப்படும் பிரார்த்தனையின் பயனுக்கும் ஆற்றலுக்கும் எல்லையேயில்லை. அதனினும், மேலான ஆற்றல் எதுவுமே இல்லை. ''பிரார்த்தனையினால் நாம் அடையலாம் என்று கருதுகின்ற நலங்களைவிட, நாம் நம் கற்பனையின் மிகுதியினால் கனவு காண்கின்ற அளவினும்கூட, அதிகமான வியக்கத்தக்க அதிசயங்களும் அற்புதங்களும் எல்லையற்ற நலங்களும் விளைகின்றன என்பது திண்ணம்''. இதனையே ஆல்ஃப்ரெட் டென்னிஸன் என்னும் ஆங்கிலக் கவிஞர்,

> "More things are wrought by prayer
> Than this world dreams of"
>
> -Alfred Tennyson.

என்று குறிப்பிட்டுப் பாடியிருக்கின்றார். இஃது ஏதோ ஒரு வெறும் கற்பனையன்று. மிக மேலான மெய்யுணர்வாளர்கள் ஆகிய அருட்பெரும் சான்றோர்களின் உண்மையான அனுபவமாகும்.

**திருவள்ளுவர்:**

கோடிக்கணக்கான மக்கள் கணவனும் மனைவியுமாகத் திருமணம் செய்து கொள்ளுகின்றனர். ஆனால் அவர்களில் ஒருவர்-இருவர் ஆகிய மிகச் சிலர் மட்டுமே, உண்மையில் காதலின்பத்தை உணரவும், அடையவும் செய்கின்றனர்.

> ''மலரினு மெல்லிது காமம் சிலர்அதன் செவ்வி
> தலைப்படு வார்''

என்பது திருவள்ளுவர் அருளிய திருக்குறளாகும். பொறிபுலன்களால் நுகரப்படும் எளிய அற்பமான காதலின்பத்தையே, கோடிக்கணக்கான மக்களில் ஒருவர் இருவர் மட்டுமே உணரமுடியும் என்று, திருவள்ளுவர் அறுதியிட்டு உறுதியாகக் கூறுகின்றார்.

பல கோடிக்கணக்கான உலக மக்களில் இறைவனை உள்ளவாறு உணர்ந்து, அவன்பால், அளவிலாப் பக்தியும் அன்பும் கொண்டு பல காற் பழகி, 'அவன் அருளாலே அவன்தாள் வணங்கி' என்று மணிவாசகர் பாடுவதற்கு ஏற்ப இறைவனின் திருவருள் கைவரப்பெற்று, அவனை அன்புடன் பிரார்த்தனை செய்தால், எல்லா நலன்களையும் அடைவதற்கு ஐயம் உண்டோ? அதுவும், தனித்தனியே செய்யப்படும் பிரார்த்தனையிலும், திரளான மக்கள் பலர் திரண்டு கூடி, 'உம் அன்பினொடு, எம் அன்பு செய்து' என்று திருஞானசம்பந்தர் பாடுவதற்கு ஏற்பக் கூட்டுவழிபாட்டு முறையில், பிரார்த்தனை செய்வார்களாயின், அதன் பயனாக மிகமிக வியக்கத்தக்க அளப்பரும் அதிசயங்களும் அற்புதங்களும் நிகழ்தல் திண்ணமேயன்றோ!

**பிரார்த்தனை என்பது யாது?**

பிராத்தனை என்பது உள்ளத்தையும் உணர்வையும் இறைவனை நோக்கி உயர்ந்து எழுமாறு செய்வதும், இறைவன்பால் நேசம் கொண்டு அவரிடம் உரையாடுவதும் (Small still voice within) அவர்தம் மெல்லியகுரலொலியை உணர்ந்து ஒழுகுவதுமே, பிரார்த்தனையாகும்.

பிரார்த்தனை என்பது, இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே இருவழிப் பாதை

ஒன்றினை ஏற்படச் செய்கின்றது. சுவர்க்க உலகத்தினோடு நாம் பேசித் தொடர்பு கொள்ளும் நெறியினை நமக்கு வகுத்தளிக்கின்றது.

நாம் அன்புடன் நினைந்து துதித்து பிரார்த்தனை புரியும்போது, நம்மை இறைவன் கவனிக்கின்றார்; நம்மைத் தமது பாதுகாவலில்ஈர்த்து அமர்த்தி வைத்து, ஏற்றுக்கொண்டு அருள்கின்றார். நமது தந்தையாக விளங்கும் இறைவன்பால், நாம் தொடர்பு கொண்டு தியானித்துப் பிரார்த்தனை புரிந்து, உரையாடினால், அவர் நமக்கு இரங்கி, ஏற்ற இனிய நல்ல மறுமொழிகளைத் தந்து அருள்புரிகின்றார். நாம் ஏதும் அறியாமலே நம் உள்ளத்தே போந்து புகுந்து, நல்லனவும் தீயனவும் பகுத்துக்காட்டி உணர்த்துகின்றார்! இதனையே, நம் திருநாவுக்கரசர் பெருமான்,

''நான்ஏதும் அறியாமை என்னுள் வந்து,
நல்லனவும் தீயனவும் காட்டா நின்றாய்''

என்று குறிப்பிட்டருள்கின்றார். பிரார்த்தனையானது நம் உள்ளத்திற்கு அமைதியையும் உணர்விற்கு ஆற்றலையும், உடலுக்கு நலத்தையும் விளைவிக்கின்றது.

இறைவனிடம் நம்மை முழுதாக ஒப்படைத்து அடைக்கலம் புகுதலும், இறைவனின் அருளைப் பெற விரும்பி அவனரப் போற்றித் துதித்தலும், அவர் நமக்குச் செய்து போதருகின்ற அளவில்லாத உதவிகளுக்கு நன்றி தெரிவித்துப் பணிதலும், நம்முடைய குற்றங்களையும் பாவங்களையும் மன்னித்துப் பொறுத்தருளுமாறு மனங் கரைந்து உருகி மன்றாடிஇரத்தலும், அவர்தம் திருவுள்ளம் வகுக்கும் வண்ணம் அறநெறி சிறிதும் பிறழாமல், மனமொழி மெய்கள் தூய்னவாய் மன்னுயிர்களுக்கு உதவியாகுமாறு வாழ்க்கையை ஏற்றபெற்றி அமைத்துக் கொள்ளுதலும் பிறவுமே, பிரார்த்தனை ஆகும்.

பிரார்த்தனை என்பது மனித வாழ்க்கைக்கு மிகமிக இன்றியமையாத ஒன்று. உடல் நலத்திற்கு உணவு தேவை; அதுபோல நம் உயிர் நலத்துக்குப் பிரார்த்தனை மிகவும் தேவை. தண்ணீர் நமது தாகத்தைத் தணித்து நம் உடலுக்கு நன்மைகள் புரிகின்றது; அதுபோலப்பிரார்த்தனை நமது ஆன்மதாகத்தைத் தணித்து, நமது உயிர்க்கு நன்மைகள் பல விளைவிக்கின்றது. வாழ்விற்குக் காற்று மிகமிக வேண்டப்படுவது; மூச்சுக் காற்று இல்லாமற் போனால், நாம் ஒருசில கணங்களும் வாழ்தல் கடினம்; அங்ஙனமே நமது ஆன்மிக வாழ்விற்குப் பிரார்த்தனை என்பது பெரிதும் வேண்டுவதொன்றாக உள்ளது. மூச்சுவிடுதல் இயல்பாக நிகழமுடியாமற் போகுமாயின், நாம் பெரிதும் திக்குமுக்காடிப் போவோம்; அவ்வாறே பிரார்த்தனை என்பதனை நாம் நம் வாழ்க்கையிற் கடைப்பிடிக்காதொழிந்தால் நமக்கு வாழ்க்கையில் இடையறாத பல அல்லல்களும், தொல்லைகளும், கவலைகளும் நேர்ந்து கொண்டேயிருக்கும். இவ்வுலகில் தொல்லைகளும் கவலைகளும் இன்றி, நாம் இன்புற்று வாழ்வதற்கு உரிய ஒரே ஒரு நேரிய வழி, 'தனக்குவமை இல்லாதான் தாள்சேர்தல்' ஆகிய பிரார்த்தனை புரிதலேயாகும்.

நமது உடலிற்படியும் அழுக்குகளை, நீராடிக் குளித்துப் போக்கிக் கொள்கின்றோம்; அவ்வண்ணமே நாம் நமது உள்ளத்தைப் பற்றியுள்ள பலவகை மாசுகளையும் இறைவனைத் தியானித்துப் பிரார்த்தனை புரிவதன் மூலம் போக்கிக்கொண்டு மகிழ்வுடன் வாழலாம். உடலுக்கு நேரும் பிணிகளை மருந்துண்டு தீர்த்துக் கொள்கின்றோம்; அம்முறையில் உயிரைப் பற்றியுள்ள மலப்பிணிகளைப்பிரார்த்தனை புரிவதன் வாயிலாகவே, நாம் தீர்த்துக் கொள்ளுதல் இயலும்.

**தொல்காப்பியம்:**

உணவும் நீரும் காற்றும் நீராடலும் மருந்தருந்துதலும் உடல்வாழ்விற்குப் பல வகை நலங்களை விளைவித்தலைப் போல, நமது உயிர் வாழ்விற்குப் பிரார்த்தனை மிகப் பெரிதும் இன்றியமையாததாகப் பெருநலங்களைப் புரிகின்றது. அதுபற்றியே, இற்றைக்குச் சற்றேறத்தாழ ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்னரே,

''வழிபடு தெய்வம் நிற்புறங் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழிச் சிறந்து
பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே''

என்ற நூற்பாவில், ஆசிரியர் தொல்காப்பியர் பிரார்த்தனை பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

பிரார்த்தனை இன்றியமையாததொன்று என்பதும்; அதுமனிதரையன்றித் தெய்வத்தைக் குறித்து நிகழ்தல் வேண்டும் என்பதும்; பிரார்த்தனை செய்வோரைத் தெய்வம் காத்தருளும் என்பதும்; பிரார்த்தனையின் பயனாகப் பழிதீர் செல்வங்கள் பற்பலவற்றை எய்தலாம் என்பதும்; பிரார்த்தனை செய்வோர் மட்டுமேயன்றி அவர்தம் வழிவழியாக வரும் உற்றார் உறவினரும்கூட, பிரார்த்தனையின் பயனாகச் சிறப்புற்றுப் பொலிந்து இன்புற்று வாழ்வார்கள் என்பதும்; நுண்ணிதின் எண்ணியுணரும்படி ஆசிரியர் தொல்காப்பியர் இந்நூற்பாவினால் விளக்கியிருத்தல் காணலாம்.

**அலெக்சிஸ் காரெல்:**

பிரார்த்தனை என்பது, ஒருவன் தோற்றுவிக்கக்கூடிய மிகமிகச் சிறந்த வன்மைமிக்க ஒரு பேராற்றல் ஆகும். இவ்வாற்றல், நிலத்தின் ஈர்ப்பு ஆற்றல் எங்ஙனம் உண்மையானதோ அங்ஙனம் உண்மையானதாகும். ஒரு மருத்துவன் என்ற முறையில், எல்லாப் பிற மருத்துவங்களும் பயனற்றுத் தோல்வியுற்றுவிட்ட பிறகு, பிரார்த்தனை என்னும் அமைதியான முயற்சியின் மூலம், பிணியினின்றும் கவலையினின்றும் மீட்டுவித்து உயர்த்தப் பெற்ற மனிதர்கள் பலரை, யான் கண்டிருக்கின்றேன்.

ரேடியம் என்னும் கதிரியைப் போல, வழி பாடு என்பது, தன்னில் இருந்து ஒருவன் தோற்றுவிக்கக் கூடிய ஒளிமிகுந்த ஆற்றலின் ஒரு பிறப்பிடம் ஆகும். வழிபாட்டின்கண் மனிதர்கள் தங்களுடைய ஓர் எல்லைக்குட் பட்ட ஆற்றலினை மிகுதிப்படுத்திக் கொள் வதற்கு, எல்லா ஆற்றல்களுக்கும் தாயகமான எல்லையற்ற பரம்பொருளைத் துதித்துப் பிரார்த்தனை புரிந்து, அதனோடு தொடர்பு கொள்ள முயல்கின்றார்கள்.

பிரார்த்தனை செய்யும்பொழுது, இவ் வுலகத்தைப் படைத்த குறைவிலா நிறைவாகிய இறைவனின் ஆற்றலோடு, நம்மை நாம் தொடர்புபடுத்திக் கொள்ளுகின்றோம். அப் பேராற்றலின் ஒரு பகுதியை நம்முடைய தேவைக்கு ஏற்பப் பகிர்ந்து அளிக்குமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

வேண்டிக் கொள்வதனாற்கூட, நம்மு டைய மனித வாழ்வின் குறைபாடுகள் நிறை வெய்துகின்றன; நாம் புத்தாற்றலும் புத் துயிர்ப்பும் பெறுகின்றோம். உள்ளார்ந்த அன்புமேலீட்டால், நாம் கடவுளைத் துதித்துப் பிரார்த்திக்கும்பொழுது, நாம் நம்முடைய உடலையும் உயிரையும் புதிய சிறந்த நிலைக்கு மாற்றிக் கொள்கின்றோம்.

''எந்த ஓர் ஆணோ, பெண்ணோ, ஏதா யினும் சில நலங்களைப் பெறாமல், ஒரு கண மேனும் பிரார்த்தனை புரிதல் என்பது, நட வாத செயலாகும். ஒரு கண நேரமேனும் உண்மையாக பிரார்த்தனை புரிவோர், தாம் விரும்பும் நலங்களை அடைந்தே தீருவர்'' என்று உலகப் புகழ்வாய்ந்தவரும், நோபல் பரிசு பெற்றவருமான அலெக்சிஸ் காரெல் (Alexis carrel) என்பவர் கூறுகின்றார்.

இவ்வாறே, பிரார்த்தனையால் பெரும் பயன் அடையலாம்; உண்மையான பக்தர்களின் உள்ளம் ஒன்றிய பிரார்த்தனையை இறைவன் செவிசாய்த்துக் கேட்டு அருள்புரிகின்றான் என் பதனை, இறை நம்பிக்கை இல்லாமலிருந்த அறிவியற் பேரறிஞர்கள் பலர், இறைவன் பக்தர்களின் பிரார்த்தனைக்குச் செவிசாய்த்து மனமிரங்கி அருள்புரிகின்றான் என்பதனைத் தம் வாழ்க்கையில் கண்டுணர்ந்து போற்றிக் குறிப்பிட்டிருக்கின்றனர். அதனைப் பின்வரும் அறிவியல் அறிஞரின் வரலாறு மெய்ப்பிக்கும், அதுவருமாறு:

**மார்கோனி;**

அண்மைக்காலத்தில் வாழ்ந்திருந்து மறைந்த அறிவியல் அறிஞர்களில் குக்லிஎல்மோ மோர்ச்செசா மார்க்கோனி (Guglielmo Morchesa Marconi) என்பவர் ஒருவர். இத்தாலிய நாட் டைச் சார்ந்த இவர், சிறந்த மின்பொறி அறிஞர்; இயற்கைப் பொருள்நூல் ஆராய்ச்சி வல்லுநர்! கி.பி. 1874 முதல் 1937 வரை வாழ்ந் திருந்தவர். இவரது கண்டுபிடிப்புகளில் மிகவும் தலைசிறந்தது, கம்பியில்லாத் தந்தி (Wireless Telegraphy) ஆகும். மார்க்கோனி அவர்கள் கம்பியில்லாத் தந்தியைக் கண்டுபிடித்தபோது, அவர்தம் நண்பர்கள் சிலர், அவருக்கு ஒரு விருந்தளித்து அவரைப் பெரிதும் பாராட்டிப் புகழ்ந்தனர். ''மனிதன் முயன்றால் எதனை யும் சாதித்துவிடலாம். முயற்சியினால் முடி யாதது எதுவும் இல்லை; கடவுள் என்பதும், பிரார்த்தனை என்பதும், பிறவும் தேவையில் லை'' என்ற கருத்தின்போக்கில், மார்க்கோனி யின் நண்பர்கள், அவரைப் பெரிதும் புகழ்ந்து பேசினர். ஆனால் மார்க்கோனி அவர்களோ, நண்பர்களின் பாராட்டுக்கு நன்றிமொழி பகருங் கால், பின்வருமாறு குறிப்பிட்டார்:

''நான் மிகவும் சிறியவனாக இருந்தபோது என் பெற்றோர்கள் தினந்தோறும் காலை மாலை வேளைகளில், பைபிள் படித்துப் பிரார்த்தனை செய்யுமாறு, என்னை வற் புறுத்துவர், அதன் சிறப்பையும் பயனையும் உணர இயலாத நிலையில், சிறு வயதினனாக இருந்த யான், அவர்களின் வற்புறுத்துதலுக் காகப் பயந்து, பைபிள் படித்துப் பிரார்த்தனை செய்வது போல நடிப்பேன். அப்போதெல்லாம் என் பிஞ்சு மனத்திற்குள், ''இங்கே ஓர் அறை யில் இருந்து கொண்டு பைபிளைப் படித்துச்

---

* " Prayar is the most powerful energy one can generate. It is a force as real as terrestrial gravity. As a physician, I have seen men, after all other therapy had failed, lifted out of a disease and melancholy by the serene effort of prayer.

Prayer like radium is a source of luminous, self-generating energy. In prayer, human beings seek to augment their finite energy by addressing themselves to the infinite source of all energy:

When we pray, we link ourselves with the inexhaustible motive power that spins the universe: we ask that a part of this power be apportioned to our needs.

Even in asking, our human deficiencies are filled and we arise strengthened and repaired. Whenever we address God in fervent prayer, we change both soul and body for the better.

It could not happen that man or woman could pray for a single moment without some good result".

-Dr. Alexis Carrel

சில வரிகளை ஒப்பித்தால், அங்கே நெடுந் தொலைவில் பரமண்டலத்தில் உள்ள பரம பிதாவாகிய ஆண்டவனுக்கு, ஒருகால் அவன் இருந்தாலும்கூட, எங்கே? எப்படி கேட்கப் போகிறது?'' என்று எனக்குள் முணுமுணுத்துக் கொள்வேன்.

**கம்பி இல்லாத் தந்தி:**

ஆனால் இன்று கம்பியில்லாத் தந்தி யினைக் கண்டுபிடிக்க நேர்ந்ததன் மூலம், என் வாழ்க்கையிலேயே ஒரு பெரும் ஐயம், தீரப் பெற்றேன், கம்பியில்லாத் தந்தியின மூலம், ஒருவர் பேசுவதை, எத்தனை ஆயிரம் மைல் களுக்கு அப்பால் இருந்தாலும் மற்றொருவர் கேட்டு உணர முடியும் என்பது, இப்போது நமக்குத் தெளிவாகத் தெரிகின்றது. இங்ஙனமே ''பக்தன் ஒருவன் உண்மையான அன்புடன் தன் உள்ளம் திறந்து, தன் குறைகளை எவ் வளவு மெல்லிய குரலில் முறையிட்டுக் கொண் டாலும், அவைகளை இறைவன் நன்றாகச் செவிமடுப்பான். பக்தனின் முறையீடுகள் இறைவனுக்கு நன்றாகக் கேட்கும். பக்தனின் வேண்டுதல்களைச் செவிமடுக்கும் இறைவன், நிச்சயமாக மனமிரங்கிப் பக்தர்களுக்கு அருள் புரிகின்றான் என்னும் உண்மையையும், இப் போது நான் நன்றாகத் தெளிவுற உணருகின் றேன். நெடுங்காலமாக யான் கொண்டிருந்த ஒரு பெரிய ஐயப்பாடு, எனக்கு இப்போது தீர்ந்து விட்டது. நம்முடைய குறைகளையும் துயரங்களையும் இறைவனிடம் மண்டியிட்டு முறையிட்டுப் பிரார்த்தனை செய்து கொள்வது ஒரு போதும் வீண்போவதில்லை. நிச்சயமாகப் பயனளிக்கின்றது. கம்பியில்லாத் தந்தியைக் கண்டுபிடிக்க நேர்ந்ததன் மூலம் நான் என் வாழ்க்கையில் இவ்வுண்மையை நன்றாக உணர்ந்து கண்டுகொண்டேன்''.

இளஞ்சிறுவன் எனஇருந்தேன்; எந்தையார்
நாள்தோறும் என்னைப் பைபிள்
உளங்கெழும ஓதுகென்பார்; ஓதிலையேல்
உணவில்லை என்று ரைப்பார்;
அளந்தறியாத் தொலைவிலுள்ள ஆண்டவன்
முணுமுணுப்பை அறியான் என்பேன்;
தெளிந்துணர்ந்தேன் கம்பியில்லாத் தந்திஇஃதால்
செவிமடுப்பன் தேவன் என்றே!

**முடிவுரை:**

இவ்வாறு மிகச் சிறந்த அறிவியற் பேரறிஞ ராகிய மார்க்கோனி அவர்கள் கூறியிருப்பது இறைவனை நோக்கி முறையிட்டுக் கொண்டு, நாம் செய்யும் பிரார்த்தனையின் சிறப்பையும் பயனையும் நமக்கு நன்கினிது தெளிவுற உணர்த்துவதாகும்.

உ

# சிலப்பதிகாரக் காப்பிய மாந்தர்

திரு டாக்டர் ச. வே. சுப்பிரமணியம், M.A.,Ph.D.,
இயக்குநர்: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
டி.டி.டி.ஐ., தரமணி, சென்னை-600 113.

**முன்னுரை**

சிலப்பதிகாரக் காப்பியம் நாடகத் தன்மையுடன் உருவாக்கப்பட்டதால் அதன் கதை மாந்தரை அமைத்து ஆக்கும் திறனும் நாடக உத்தி புலப்படுத்தல் உண்டு. பாத்திர வரவு, பாத்திர அறிமுகம் எதிர்மாந்தர் நிலை போன்றன இந்நிலையில் சிந்திக்கத்தக்கன. மேடை நாடகத்தின் கட்டியங்காரன் போன்று காப்பியக் கவிஞரே இவற்றை உணர்த்துவது கதை கூறும் சூழலில் இயல்பு எனினும் பாத்திரங்கள் தாமே உட்புகுந்து தம்மை அறிவித்து அறிமுகப்படுத்தித் தொடரும் தெருக்கூத்துப் பாங்கும் காணப்படக்கூடும்.

காட்சி மேடைக்கு மாந்தர் வருவதனை நாடகப்பாங்குடன் ஒருசில விடங்களில் அறிவிக்கின்றார் அடிகள். ஆய்ச்சியர் குரவை நடன-நாடகத் தன்மையுடன் அமைதற்கு ஏற்பவும் வாய்ப்பாகவும் இவ்வுத்தி அங்குப் பொருந்துவது சுட்டத்தக்கது. மாதரியின் அரங்கத் தோற்றம் இந்நிலையினது.

மாலை வெண்குடைப் பாண்டியன் கோயிலிற்
காலை முரசங் கனைகுர லியம்பு மாகலின்
நெய்ம்முறைநமக் கின்றாமென்
றையைதன் மகளைக் கூஉய்க்
கடைகயிறு மத்துங் கொண்டு
இடை முதுமகள் வந்து தோன்றுமன் *(17:5-10)*

கதையில் பாத்திரத்தின் உட்புகுதல் சுட்டப்படும் இந்நிலை காதைத் தொடக்கத்தில் மட்டுமன்றி இடையிலும் வருதல் கூடும். சேரன் கங்கைக் கரைப் பாசறையில் இருக்கும் அரங்கில் மாடலன் புகுதலும் வஞ்சியின் அரசவையில் காணப்படும் அரங்கில் நீலன் முதலியோர் உட்புகுதலும் இத்தகையன.

பாடுதுறை முற்றிய கொற்ற வேந்தன்
ஆடுகொண் மார்போ டரசுவிளங் கிருக்கையின்
மாடல மறையோன், தன்னுடன் தோன்றி....
*(27 : 46—48)*

இருநிலம் ஆள்வோன்
வேத்தியன் மண்டப மேவிய பின்னர்
நீலன் முதலிய கஞ்சுக மாக்கள்
மாடல மறையோன் தன்னுடன் தோன்றி.....
*(28:78-81)*

சாரணர் தோன்றுதல் *(10: 163)*, மதுரைமா தெய்வம் வந்து தோன்றல் *(23-16)*, வனசாரிணி தோன்றுதல் *(11:173)*, எரிக்கடவுள் தோன்றுதல் *(21:49)* எனப் பிற பாத்திர வரவும் சுட்டப்படல் உண்டு. முன்வகைகளில், ஏற்கெனவே அறிமுகப்பட்ட பாத்திர வரவு அமைய, இவற்றில் அறிமுகம் வருகையும் இணைகின்றன.

சிலப்பதிகாரத்தின் பாத்திர அறிமுகம் வகைமை காட்டி வருகின்றது. ஒவ்வொரு காதையிலும் ஒவ்வொரு புதிய பாத்திரத்தை அறிமுகப்படுத்துகின்றார் அடிகள். ஒரே விதமாக எல்லாப் பாத்திரத்தையும் அறிமுகப்படுத்தாது பலவகையாகச் செய்வதில் சிறப்புப் புலப்படுகிறது. காப்பியத் தலைவியை அவன் பெறப்போகும் தெய்வ இயல்பைக் குறிப்பாகச் சுட்டிக் காட்சிப்படுத்துகின்றார். அவள் தோழியாகிய தேவந்தியை ஒருநீண்ட கதை கூறியே தருகின்றார். எவ்வித அறிமுகமுமின்றிக் காப்பியக்களனில் புகுந்து பேசும் வண்ணம் மாங்காட்டு மறையோனை வழங்குகின்றார். மாதரியைப் புறநிலையில் கவிஞரும் அகநிலையில் கவுந்தியும் அறிமுகம் செய்கின்றனர். எதிர்த் தலைவனான பொற்கொல்லனை முதன்முறை காட்டும்போதே அவன் தீய இயல்பு புலப்பட அமைக்கின்றார்.

அறிமுகமின்றியே பேசி, பின்பு கோவலன் கேள்விக்கு விடையாக ஊரும்பேரும் பிறவும் கூறும் மாங்காட்டு மறையோன் நிலை கூத்தமைதி காட்டுவது எனலாம். தாமே தம்மை அறிமுகப்படுத்தும் சூழல் புதுப் பாத்திரத்திற்கு மட்டுமின்றி ஏற்கெனவே வந்த பபத்திரத்திற்கும் அமையக்கூடும் என்பதனைக் கண்ணகியின் வழக்குரைக் களன் காட்டுகின்றது. வாயில் காப்போனுக்குத் தானே தன்னை அறிமுகப் படுத்தித் தெரிவிக்கக் கூறுகிறாள்.

வாயிலோயே
இணையரிச் சிலம்பொன் றேந்திய கையள்
கணவனை இழந்தாள் கடையகத் தாளென்
றறிவிப் பாயே யறிவிப் பாயே (20:26-26)

தொடர்ந்து மன்னனின் 'யாரையோ நீ' எனும் கேள்விக்கும் தன்னறிமுகம் வழங்குகின்றாள் (20:50-63). அறிமுகமும், வந்த காரணமும், வழக்குரைத் தொடக்கமாகவும் அப்பேச்சே அமைதல் சிறப்பு.

துன்பியல் நாடகங்கள் எதிர்மாந்தரை இன்றியமையாதுடையன. சிலம்பில் பாத்திரமாக வரும் பொற்கொல்லன் எதிர்மாந்தனாக அமையினும் உருவமற்ற ஊழ் எதிர் ஆற்றல் எனக் கொள்வது இயல்பு, ஊழின் கருவியாக அமையும் பொற்கொல்லனைப் பெயர் சுட்டாது, செய்யும் தொழில் சுட்டியே கொண்டு செல்லும் பொதுமை ஆசிரியனின் உத்திநிலையைப் புலப்படுத்தும். கொல்லன் என்பதால் பொன்விடை மட்டுமின்றி, கொல்லும் இயல்பும் வாய்ப்பாகிப் பொருந்துகின்றது. ஒரு காதையில் மட்டும் வந்து மறையினும் கவிஞரின் பாத்திரப் படைப்புத் திறன் காட்டி நினைந்தனத முடித்து நீங்குகின்றான்.

இவனைப் போலன்றி ஊழ்வினையின் செயற்பாடு காப்பியமெங்கும் இழையோடுகின்றது. கோவலனின் வாழ்வோடிணைந்து வருவதாக ஊழ் அமைகின்றது. யாழிசை மேல் வைத்துத் தன் ஊழ்வினை வந்துருத்தலால் (7:52.4) மாதவியைப் பிரிந்து, ஊழ்வினையே புகார் நீங்கவும் (10:4) மதுரையடையவும் (20:59) காரணமாகிப் பண்டை ஊழ்வினையாலே கொலைப்பட்டு (16:217) அமைகின்றான். மதுராபதி விளக்கம் தருவதில் இம்மறைநிலை வெளிப்படுகின்றது. கோவலனுக்கு மட்டுமின்றி மன்னனுக்கும் மதுரைக்கும் ஊழ்வினை விளைவதையும் மதுராபதி உரை வழங்கும்.

தோழிநீ யீதொன்று கேட்டி யெங்கோமகற்
கூழ்வினை வந்தக் கடை (23:27-28)

உரைசான் மதுரையோ டரசு கேடுறு மெனும்
உரையு முண்டே நிரைதொடியோயே
(23:136-137)

பலர் இறப்பும் மறைவும் அமையினும் முற்பிறப்பு வினைவிளக்கம் கோவலனுக்குமட்டுமே தரப்படுகின்றது. காப்பியத் தலைமை மாந்தனோடே காப்பிய எதிர்மை ஆற்றலும் இணைந்த இந்நிலை தனித்தன்மையுடையது.

நாடகம் பல்வகையான கூற்றுகளை இன்றியமையாதது. தனிப்பாடல் நாடகத் தனிமொழியால் அமைய, நெடும் பாடல் பல்லோர் பேச்சு விரவுவதைக் காட்டக்கூடும்; நெடுங்கதை கூறும் காப்பியம் பல்வகையான பேச்சுகட்கு இடம் வழங்க வாய்ப்புத் தருகின்றது. பல்லோர் பேசும் கலந்துரை, இருவரிடையேயுள்ள உரையாடல், பலர் அல்லது பிறர் முன்உரைக்கும் ஒருமொழி, யாருமில் விடத்துப் பேசும் தனிமொழி, பிறர் கேட்கா வண்ணம் உரைக்கும் பக்கமொழி, தன்னுள் நினைக்கும் உள்மொழி, உருவம் புலப்படாக் கூற்றான அசரீரி எனப் பேச்சு பல்கி அமைதல் கூடும். பல்வகையான நோக்கங்கட்காகஇவை நாடக நிலையில் பயன் கொள்ளப்படுகின்றன. பேசுவோர், பேச்சின் இயல்பு ஆகிய அடிப்படையில் இப்பன்மை தோன்றுகின்றது.

அடியார்க்கு நல்லார் சொல் மூன்று வகைப்படும் எனவும், அவை உட்சொல், புறச்சொல், ஆகாயச்சொல் எனவும் கூறுவன இந்நாடக உரை பற்றியன. இவை முறையே நெஞ்சொடு கூறல், கேட்போர்க் குரைத்தல், தானே கூறல் என விளக்கப்படுவதும் சுட்டத்தக்கது. சிலம்பின் நாடக அமைப்பில் இத்தகு பேச்சு வகைகள் அமைவதோடு, அவை பாத்திர இயல்பு புலப்படுத்தியும் வருகின்றன.

உரையாடல்கள் காப்பியமெங்கும் பலவாக அமைகின்றன. அவை சுருங்கியும் நீண்டும் அமையும் இயல்பின. ஒரு சில சொற்களில் சுருங்கியமையினும் பாத்திரப் பண்பு விளக்கி நிற்பதால், கண்ணகி, தேவந்தி உரையாடல் சுட்டத்தக்கது. தேவந்தி தான் தன் கணவனைப் பெறக் கோட்டம் வழிபாடுகொண்டிருப்பாளாகையால், அறுகு சிறுபூளை நெல்லொடு தூவிச் சென்று 'பெறுக கணவனோடு' எனக் கண்ணகிக்கு உரைக்க, கண்ணகி 'பெறுகேன்' (9:44) என்று ஒரு சொற் பதில் வழங்குகிறாள். இப்பேச்சில் தெய்வம் தொழாது கணவன் தொழுதெழும் பெண்மையும், அவள் கோவலனைத் தற்காலிகமாகப் பெறினும் முழுமையாகப் பெறமாட்டாள் எனும் குறிப்பும் வெளிப்பட ஏதுவாகின்றது. அவ்வாறே தேவந்தி சோமகுண்டம் முதலிய துறை மூழ்கிக் காமக்கோட்டம் தொழுது இம்மை மறுமை இன்பம் பெறுவோம் எனக் கூறிய போதும் 'பீடன்று' (9-64) என மறுத்தலில் அவள் பண்புச் செம்மை வெளிப்படுகின்றது.

உரையாடல் வாயிலாகவே காப்பியத்தில் கண்ணகியின் வளர்ச்சியை அடிகள் காட்டுகின்றார் எனலாம். மணமாகிக் கணவனுடனுறையும்போது, அவன்பேச அவள் பேசப் பேச்சற்று 'வாய்ச் சொற்கள் என்ன பயனும் இல' என்ற நிலையினளாகத் தென்படுகிறாள். கணவன் பிரிந்த காலத்தும் அவன் பெற்றோரிடம் 'வாயன் முறுவல்' (16:80) காட்டும் பேசாமடந்தையாகவே அமைகிறாள். தேவந்தியிடம் மட்டுமே இவ் இருசொல் நிலையுடன் கனாத் திறமுரைக்கும் காதையில் நெடியவுரையாற்றுகின்றாள். (9:45-54). கணவன் மாதவி பால்சென்று மீண்டுவந்தபோது, 'சிலம்புள கொண்ம்' (9:73) என நகைமுகங்காட்டி ஊக்கம் தரும் வண்ணம் உரையாடுமளவுக்கு வளர்ச்சியுறுகின்றாள். அவனுடன் இணைந்து மதுரை செல்லும்போது வழிச் செலவின் துன்ப மிகுதியால் 'மதுரை மூதூர் யாது' (10:41) என வினவும் முதல் கேள்வி நிலை வருகின்றது. தெய்வமுற்ற சாலினி உரை கேட்டு, 'பேதுறவு மொழிந்தனள் மூதறிவாட்டி, (12:54) என விமரிசித்தல் உருவாகின்றது. மனம்விட்டுப் பேசும் நிலைக்கு இது விரிந்து வளர்ந்ததைக் கொலைக்களச் சூழல் காட்டுகின்றது. உணர்வுகள் மனத்தகத்தே புதைந்து வெம்மையுறா நிலையில் விரிவுக்கு முன்னே வெளிப்பட்டு, சுமை குறைக்கவும் தன்னையுணர்த்தவும் இது வாய்ப்பாகின்றது.(16:71-83). பேசாமடந்தை வழக்குரைக்கும்நிலைக்கு ஆளாகிய வளர்ச்சிப் படிநிலைகளை இவ்வுரையாடல்கள் காட்டுகின்றன எனலாம். இந் நிலையில் உரையாடலே உத்தியாகின்றது.

பேச்சும் மாற்றமுமாக இருவரிடையே அமையும் உரையாடல் போலன்றிக் கூற்றொன்றே கொண்டு அமைவதாக ஒருமொழி (Monologue) அமைகின்றது. இன்னொருவரின் மறுபேச்சையோ பதிலையோ எதிர் நோக்காத மேடைப்பேச்சுப் போன்ற அறிவுரை, உறுதி வெளிப்படுத்தும் வஞ்சினம் போன்றன இம்முறையில் வெளியிடப்படுகின்றன. இன்பச் சூழலும் இதைத் தரக் கூடும் என்பது கோவலனின் குறியாக் கட்டுரையில் (2:38-80) உலவாக் கட்டுரைத் தன்மையால் வெளிப்படுகின்றது. காட்சி விளக்கச் சூழலிலும் இது அமையலாம் என்பதை, விஞ்சை வீரன் காதலிக்குரைத்த புகார்ச் சிறப்பும், மாதவி யாடற் றன்மையும் (6:7-27, 35-70), விளக்குகின்றன. ஆசிரியர் குரலே காப்பியமெங்கும் அமைந்து சலிப்புத் தட்டாவண்ணம் இத்தகு ஒருமொழிகளமையக் கூடும் என்பதை மாங்காட்டு மறையோன் பாண்டியனைப் புகழும் உரையும் காட்டும் (11:15-29). புறப்பாடலின் படர்க்கை வாழ்த்துத் தன்மை இங்கு அமையும் மாதவியின் மலர்க்கடிதம் மறுத்துக் கோவலன் பேசுவதும் (8:74-110) மாடலன் கோவலனின் பழம் பெருமைகளை உரைப்பதும் (15:20-94), அடைக்கலச் சிறப்பறிவுறுத்த கவுந்தி கதை கூறியதும் (15:125-200), இத்தகு உரைகளாம். காவலன் தேவி உயிரோடிருப்பதாகக் கருதிக் கண்ணகி கூறும் வஞ்சினம் (21), இவ்வகையில் சிறப்புடைப் பகுதியாகும்.

யாருமில் சூழலில் தன்னை வெளிப்படுத்தும் தனிமொழிகள் (Soliloquy) காப்பியத்தில் இல்லெனினும், உட்சொல் எனப்படும் மனத்தில் நினைக்கும் நிலை (Interior Monologue) அமைகின்றது. இது பாத்திரத்தின் தன்னியல்பைவிளக்குவதாகவும், பிறிதொரு பாத்திரத் தன்மையை விளக்குவதாகவும் அமைவதால் உத்தியாகின்றது. பொற்கொல்லன் கோவலன் கையில் பொற்சிலம்பு கண்டு திட்டம் போடும் உள்ளத்து நினைவில் இப்பாங்கு அமைகின்றது.

கரந்தியான் கொண்ட காலணி யீங்குப்
பரந்து வெளிப்படா முன்ன மன்னற்குப்
புலம்பெயர் புதுவனிற் போக்குவ னியான்

(16:127-129)

மாதரியைக் கவிக்குரல் அறிமுகப்படுத்தியபின் கவுந்தியின் உட்சொல் அவள் பண்புவிளக்கம் தருவதும், திட்டம் அமைப்பதும் இவ்வகையினது.

ஆகாத் தோம்பி யாப்பய னளிக்கும்
கோவலர் வாழ்க்கையோர் கொடும்பா டில்லை
தீதிலன் முதுமகள் செவ்விய ளளியள்
மாதரி தன்னுடன் மடந்தையை யிருத்துதற்
கேத மின்றென வெண்ணின ளாகி

(15: 120-124)

இவற்றின் வேறாக, அரங்கின் பிறர் கேட்காது, அவையோர் கேட்கும் வண்ணமாக அமைவது பக்கமொழி; கோசிகன் உரை இந் நிலையினதாக அமையாத போதும் மேற் குறிப்பிட்ட வகைகளிலும் அடங்காது. கோவலனை அறியும் உத்தியாக அமைவதால் காப்பியப் போக்கில் தேவைக்கூறாகின்றது. வெயிலில் வாடிய மாதவிக் கொடியை நோக்கி அவனுரைத்த சொற்கள் கோவலனோடு உரையாட்டுத் தொடங்க வாய்ப்பளிக்கின்றன. (13: 48-55). கொலைப்படும் சூழலில், கோவலன் கேளாது 'இலக்கணமுறைமையின் இருந்தோன் ஈங்கிவன் கொலைபடு மகனலன்' (16:162-163) எனப் பொற்கொல்லன் கேட்கும் வண்ணம் ஊர் காப்பாளர் கூறுவதும் ஓரளவு இங்கு இணைகின்றது.


அசரீரி பெரும்பாலும் தெய்வக்குரலாகவும் விரிச்சி போன்று இன்னார் எனத் தெரியாத நிலையிலும் அமைவது. சரீரம் உருவமில்லாது குரல்மட்டும் கேட்கும் இதன் வருகை அருகியே சிலம்பில் அமைகின்றது. கண்ணகி கதிரவனை நோக்கிக் கேட்ட கேள்விக்கு வரும் பதில் குரல் இத்தகையது எனலாம்.

பாய்திரை வேலிப் படுபொரு ணீயறிதி
காய்தரிச் செல்வனே கள்வனோ வென்கணவன்
கள்வனோ வல்லன் கருங்கயற்கண் மாதராய்
ஒள்ளெரி யுண்ணுமிவ் வூரென்ற தொருகுரல்
(18 50-53):

என்றனன் வெய்யோன் (19-1)

கோவலன் கள்வனல்லன் என்று மன்னன்முன் நிருபிக்கும் முன்பு ஆயமடமகளிர்க்குத் தெரிவித்தலாக இவ்வுரை அமைகின்றது. வாழ்த்துக் காதையில்கடவுள் நல்லணி காட்டிய கண்ணகி, வரந்தரு காதையில் இத்தகு குரலாக அமைகின்றாள். மன்னர்தம் நாட்டு வேள்வியில் வரவேண்டும் எனக்கண்ணகி தெய்வத்தை வேண்டியதற்கு விடையாகத் 'தந்தேன் வரமென்றெழுந்தது ஒரு குரல்' (30: 164) என அமைப்பார் இளங்கோ.

தொல்காப்பியர் பல்வகையான பாத்திரக் கூற்றுகளைப் பற்றிப் பேசும்போது, நற்றாய், தந்தை, தமையன் போன்றோர் உரைகொண்டெடுத்து மொழியப்படுதலல்லது கூற்றாக வராது என்பர் (1441). தனிப்பாடலின் அகப்பொருள் நிலைக்குரிய இதனை நாடகத்திற்கும் இணைத்துக் கருதல் இயலலாம். சிலம்பு இத்தகுகொண்டு மொழிதலை(Reported Speech) அருகித் தருகின்றது. பழைய நிகழ்வுகளைப் பின்பு எடுத்துக் கூறும்போது இத்தகு நிலை சிறிய அளவில் அமைகின்றது. மாதவி 'இணையடி தொழுதேன் வருந்துயர் நீக்கு' எனவும் 'கண்மணி யனையாற்குக் காட்டுக' எனவும் கூறியதாகக் கோசிகன் உரைத்தல் (18:73-75), வயந்தமாலை வடிவில் வந்த வனசாரிணி மாதவியின் பேச்சாகச் சில கூறல் (11:176-178, 180-183), கோவலனுக்கும் கண்ணகிக்கும் உற்றதைக் கேட்ட மாதவியின் உரையையும் (27:75-77) கவுந்தியின் கூற்றையும் (27-82), மாதவியின் பேச்சையும் (27:104-106), மாடலன் சேரனுக்கு எடுத்து மொழிதல், பகைப்புறத்துச் சேரன் சிறைகொண்ட வடவாரிய மன்னரைப் பற்றிச் சோழனும் பாண்டியனும் விமரிசித்ததை நீலன் எடுத்து மொழிதல் (28:90-93, 98-107) என இவை பல சூழலில் அமைகின்றன.



# திருவண்ணாமலைத் தீபச் சிறப்பு

**முன்னுரை:**

நமது அருமைத் தமிழ் நாட்டிற்குப் பெருமைதரும் எண்ணற்ற பல திருத்தலங்களுள், திருவண்ணாமலை மிகவும் தலைசிறந்ததொன்றாகும். பஞ்ச பூதத் தலங்களுள், நெருப்புத் தலம் எனவும், ஆறு ஆதாரத் தலங்களுள் மணிபூரகத்தலம் எனவும், இதனைப் பெரியோர்கள் விதந்து கூறுவர். சிவபெருமான் சோதிப் பிழம்பாய் வெளிப்பட்டு நின்ற தலம் எனச் சமய இலக்கியங்கள் இதனைப் பெரிதும் புகழ்ந்துகூறும். இவ்வரலாற்றுக்கேற்ப நில நூல் அறிஞர்களும் (Geologists) இம்மலை நெருப்பினால் அமைந்தது நெருப்புத்தன்மை உடையது ( Igneous Rock ) என்று ஆய்ந்து கூறுகின்றனர்.

**திருவண்ணாமலைச் சிறப்பு:**

திருவண்ணாமலையை, அப்பர் சம்பந்தர் மாணிக்கவாசகர் என்னும் சைவ சமய குரவர்கள் தமது திருப்பாடல்களில் போற்றித் துதித்துள்ளனர். திருப்புகழ் பாடிய அருணகிரிநாதர் இத்தலத்திலேயே தோன்றி வாழ்ந்து அருள் பெற்று விளங்கியவராவர். குகைநமச்சிவாயர், குருநமச்சிவாயர் முதலிய அருட்பெருஞ் சான்றோர்களும் இங்கு வாழ்ந்து இத்தலத்தைப் போற்றியிருக்கின்றனர். இங்கு ஈசானியமடம் என்பது அமைந்து சிறந்து விளங்கி வருகின்றது. குன்றக்குடி ஆதீனத்தின் முதற் பெருங்குரவராகிய தெய்வசிகாமணிதேசிகர் இந்தத் தலத்திலேயே தோன்றியவராவர். உலகப் புகழ் பெற்ற எழுத்தாளர்களாகிய சாமர்செட்மாம் ( Somerset Maugham ) பால் பிரண்டன் ( Paul Brunton ) முதலிய மேலை நாட்டுப் பேரறிஞர்கள் பலரும் வியந்து போற்றி மகிழ்ந்த சிறப்புடைவராகிய ரமண மகிரிஷி அவர்கள் வாழ்ந்து அமைத்த ரமணாசிரமமும், இத்தலத்திற்கு ஒரு பெரும் சிறப்பை அளிப்பதாகத் திகழ்ந்து வருகின்றது. சேஷாத்திரி சுவாமிகள் என்பவரும் இங்குத் தவம் செய்து அருள் பெற்றார். சேரர், சோழர், பாண்டியர் இரட்டிரகூடர், ஒய்சளர், துளுவர் முதலிய அரசர்கள் பலர், திருவண்ணாமலைக் கோயிலுக்குத் திருப்பணி செய்துள்ளனர். இத்தலத்தில் மொத்தம் 360 தீர்த்தங்களும், 2400 இலிங்கங்களும் உள்ளன என்பர். கோயிற் பரப்பும், கோபுரச் சிறப்பும் கண்டு களிக்கத்தக்கவை.

**நினைக்க முத்தி :**

திருவண்ணாமலையின் தன்னிகரற்ற பெருஞ் சிறப்பினை, நம் சமயச் சான்றோர்கள் பெரிதும் வலியுறுத்தியுள்ளனர். பிறக்க முத்தி தருவது திருவாரூர்; தரிசிக்க முத்தி தருவது சிதம்பரம்; இறக்க முத்தி தருவது காசி; ஆனால் நினைத்த அளவிலேயே முத்தி தருவது திருவண்ணாமலை என்பது; நம் பண்டைப் பெரியோர்களின் நம்பிக்கை.

''துவக்கற அறிந்து பிறக்கும் ஆரூரும்,
துயர்ந்திடாது அடைந்துகாண் மன்றும்,
உவப்புடன் நிலைத்து மரிக்கும் ஓர் பதியும்,
ஒக்குமோ நினைக்குமநின் நகரே?''

என இத்தலத்தின் சிறப்பினைத் துறைமங்கலம் சிவப்பிரகாசர் திறந்தெரிந்து புகழ்ந்து பாடித் துதித்து மகிழ்ந்துள்ளார்.

**கார்த்திகைத் தீபவிழா:**

இத்துணைச் சிறப்பு வாய்ந்த திருவண்ணாமலைக் கோயிலில் நிகழும் விழாக்களுள், 'கார்த்திகைத் தீப விழா' என்பது, நமது தமிழக விழாக்களிலேயே தன்னிகரற்ற ஒரு பெருஞ் சிறப்பு விழாவாகத் தொன்றுதொட்டு நிகழ்ந்து

வருகின்றது. தமிழகத்திலுள்ள எல்லாக் கோயிலிலுமே கார்த்திகைத் தீப விழாக் கொண்டாடப்படுகின்றதாயினும், திருவண்ணாமலைக்கே அவ்விழா மிக்க சிறப்புடையதாகத் திகழ்கின்றது. தமிழகத்தின் பலபாகங்களிலும் இருந்து பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் ஆண்டுதோறும் மிக்க அன்புடன் திரண்டு, இவ்விழாவைத் தரிசித்து மகிழ்கின்றனர். புகழ்மிக்க இப்புனித விழாவைப் பற்றிப் பல குறிப்புக்கள், எத்துணையோ பற்பல நூற்றாண்டுகட்கு முற்பட்ட நமது பழந்தமிழ் இலக்கியங்களிலும், அமைந்து காணப்படுகின்றன. அவற்றை இங்கு ஒரு சிறிது இயன்ற அளவு ஆராய்ந்து மகிழ்வோம்.

**திருஞானசம்பந்தர்:**

தமிழகத்தின் சமய மறுமலர்ச்சி இயக்க வரலாற்றிற் சிறப்பிடம் பெற்றுத் திகழும் திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் என்னும் இரு பெருஞ் சான்றோர்களும், தமிழ் மக்கள் பல வகைத் திருவிழாக்களை கொண்டாடி மகிழ்ந்தற்குப் பெரிதும் ஆக்கமும் ஊக்கமும் அளித்தனர் எனலாம். திருநாவுக்கரசர் திருவாரூரில் நிகழ்ந்த திருவாதிரை விழாவினைப் பெரிதும் வியந்து போற்றி ''முத்துவிதானம் மணிப்பொற் கவரி'' என்று தொடங்கும் திருப்பதிகம் பாடிச் சிறப்பித்துள்ளார். திருஞானசம்பந்தப் பெருமான், நமது சென்னைத் திருமயிலைத் திருப்பதிகத்தில், திங்கள்தோறும் முறை முறையே நடைபெறும் வெவ்வேறு திருவிழாக்களைக் கிளந்தெடுத்துக் கூறியிருக்கின்றார். அதன்கண்

''வளைக்கை மடநல்லார்
மாமயிலை வண்மறுகில்
துளக்கில் கபாலீச் சரத்
தான்தொல் கார்த்திகைநாள்
தளந்தேந் திளமுலையார்
தையலார் கொண்டாடும்
விளக்கீடு காணாதே
போதியோ பூம்பாவாய்''

எனவரும் திருப்பாடல், கார்த்திகை விழாவைப் பற்றிக் குறிப்பிட்டு, அதனைத் ''தொல்கார்த்திகை நாள்'' என்றும் விதந்து போற்றுகின்றது. இன்றைக்கு ஏறத்தாழ 1300 ஆண்டுகட்கு முற்பட்ட திருஞானசம்பந்தர் தாமே, இதனைத் 'தொல் கார்த்திகை நாள்' எனக் குறிப்பிடுவாராயின், கார்த்திகை விழாவின் தொன்மையும் பெருமையும் இனையவென்று எண்ணியுணரலாம்.

**ஔவைப் பிராட்டியார்:**

கார்த்திகை விழாவிற் பெண்கள் வீடுகள் தோறும் வரிசை வரிசையாக மிகப் பல விளக்குகளை ஏற்றி வைத்து மகிழ்வர். எனவே, இதனைப் பெண்களுக்குச் சிறப்பாக உரிய விழா எனக் கூறலாம். 'மனைக்கு விளக்கம்' எனத் திகழும் மடவார்கள். இங்ஙனம் விளக்கேற்றி வைத்து விழா அயர்தல் மிகவும் பொருத்தமேயாம். கார்த்திகை விழா பெண்களுக்கு உரியதாதலையும், அவ்விழாவிற் பெண்கள் வரிசை வரிசையாக விளக்கேற்றி வைத்து வழிபட்டு மகிழ்தலையும், ''தையலார் கொண்டாடும் விளக்கீடு'' என்னும் தேவாரத் தொடர் புலப்படுத்துகின்றது. பெண்களுக்கு உரிய இவ்விழாவின் சிறப்பினைப் பெண்ணின் நல்லார் ஆகிய ஔவைப் பிராட்டியார்,

''வானம் ஊர்ந்த வயங்கொளி மண்டிலம்
நெருப்பெனச் சிவந்த உருப்பவிர் அங்காட்டு
இலையில மலர்ந்த முகையில் இலவம்
கலிகொள் ஆயம் மலிபுதொகைபு எடுத்த
அஞ்சுடர் நெடுங்கொடி பொற்பத் தோன்றிக்
கயந்துகள் ஆகிய பயந்தபு கானம்''

அகநானூறு, 11.

எனவரும் பாடற் பகுதியில், உவமையாகக் கூறி மகிழ்கின்றார். 'வெப்பம் மிக்க பாலை நிலக் காட்டின்கண் சிவந்த இலவம் பூக்கள் மலர்ந்திருத்தல், மகளிர் பலரும் மகிழ்ந்து கூடி ஒளிமிக ஏற்றிவைத்த விளக்குகளின் நீண்ட பல வரிசைகளைப்போல உள்ளது' எனபது இப் பாடற் பகுயின் கருத்து.

பாலை நிலத்தைப் பற்றிப் பாடுங்காலும், ஔவைப் பிராட்டியார் தம்மைப் போன்ற பெண்பாலார்க்குரிய கார்த்திகை விழாவினை இயைபுபடுத்திப் பாடியிருப்பது மிகவும் பாராட்டுதற்குரியது. 'தையலார் கொண்டாடும் விழா' இது என்பதனைப் 'கலிகொள் ஆயம் மலிபு தொகுபு எடுத்த' என்னும் தொடர் புலப்படுத்தி நிற்கின்றது. ''ஆரவாரம் மிகுந்த மகளிர் கூட்டம் மிகிழ்ந்து திரண்டு ஏற்றிவைத்த'' என்பது இத்தொடரின் பொருள். சிவந்த இலவம் பூக்கள் மலர்ந்திருத்தலுக்கு, அழகிய ஒளி விளக்குகளின், நீண்ட வரிசையின் பொலிவினை, உவமையாகச் சுட்டி, 'அம் சுடர் நெடுங்கொடி பொற்ப' என ஔவைப் பிராட்டியார் அருளிச் செய்துள்ளமை பெரிதும் பொருத்தமாகக் காணப்படுகின்றது.

**நக்கீரர்:**

இங்ஙனமே, தெய்வநலங் கமழும் இவ்விழாவின் சிறப்பினைத் தெய்வவுணர்விற் சிறந்து திருமுருகாற்றுப்படை பாடியருளிய ஆசிரியர் நக்கீரர், தமது பாடல் ஒன்றிற் குறிப்பிட்டுள்ளார். ''அந்திமாலைச் செக்கர் வானத்தில் வெண்ணிறக் கொக்கினங்கள் வரிசையாகப் பறந்து செல்லும் காட்சி, முருகப் பெருமான் தமது சிவந்த மார்பில் அணிந்துள்ள முத்து

மாலையைப் போல விளங்குகின்றது' என்னும் கருத்து அமைய,

''நெடுவேள் மார்பின் ஆரம் போலச்
செவ்வாய் வானம் தீண்டிமீன் அருந்தும்
பைங்காற் கொக்கினம் நிரைபறை யுகப்ப''

—அகநானூறு, 120

என அருளிச் செய்யும் இயல்பினராகிய ஆசிரியர் நக்கீரர், தம் தெய்வ உணர்வின் மாட்சிமை தோன்ற,

''மழைகால் நீங்கிய மாக விசும்பில்
குறுமுயல் மறுநிறம் கிளர மதிநிறைந்து
அறுமீன் சேரும் அகல்இருள் நடுநாள்
மருகுவிளக் குறுத்து மாலை தூக்கிப்
பழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய
விழாவுடன் அயர வருகதில் அம்ம!''

அகநானூறு, 141.

என்னும் வரிகளில், இவ்விளக்கீட்டு விழாவின் இயல்பினை இனிது பாடி இன்புறுத்துகின்றார். விளக்கீட்டு விழா, கார்த்திகை மாதத்துக் கார்த்திகை நாளில் பௌர்ணமியை ஒட்டிநிகழும் என்பதனை, ''மதி நிறைந்து அறுமீன் சேரும், அகல் இருள் நடுநாள்'' என்னும் தொடரால், ஆசிரியர் நக்கீரர் புலப்படுத்தியிருத்தல் அறிந்து இன்புறற்பாலது.

**பாலைபாடிய பெருங்கடுங்கோ:**

இவ்வாறே பெருங்கடுங்கோ என்னும் சங்க காலச் சான்றோரும், கார்த்திகை விழாவின் சிறப்பினைப் தமது கவிதைகளிற் புகழ்ந்து போற்றுகின்றார். இவர் சேரமான் மரபினர். பாலத்திணை பாடுதலின் வல்லவர். ஆதலிற், ''சேரமான் பாலைபாடிய பெருங்கடுங்கோ'' எனவும் இவர் வழங்கப் பெறுவர். ''முள்முருக்கு கோங்கு அதிரல் கபாதிரி மரவம் முதலிய சிறந்த பூக்கள் பலவும் மலர்ந்து மணங்கமழ்ந்து இலங்கும் காட்டின் இயல்பு, பரவுக்கடன் பூண்டோரால் புலநிற நறுமலர்கள் தூவி வழிபடப் பெறும் தெய்வத்தின் திருக்கோயிலைப் போலத் திகழ்கின்றது'' என்னும் கருத்து அமைய,

''மராஅ மலரொடு விராஅய்ப் பராஅம்
அணங்குடை நகரின் மணந்த பூவின்
நன்றே கானம் நயவரும் அம்ம!''

—அகநானூறு, 99.

எனப் பாடியருளுதலால், இப்பெருந்தகையும் நக்கீரர் போலத் தெய்வ வுணர்வின் மிக்க சிந்தையை யுடையவர் எனத் தெரிகின்றது. இவர் தமது பாடல்களில் இரண்டு இடங்களில், கார்த்திகை விழாவினைக் கவின்மிகச் சுட்டுகின்றார்.

''அருவி யான்ற உயர்சிமை மருங்கிற்
பெருவிழா விளக்கம் போலப் பலவுடன்
இலையில மலர்ந்த இலவமொடு
நிலையுயர் பிறங்கல் மலைஇறந் தோரே''

—அகம், 185.

''கண்டிசின் வாழியோ குறுமகள் நுந்தை
அறுமீன் பயந்த அறஞ்செய் திங்கள்
செல்சுடர் நெடுங்கொடி போலப்
பல்பூங் கோங்கம் அணிந்த காடே''

—நற்றிணை, 202

தலைவன் கடந்து சென்ற மலையின்கண் சிவந்த இலவம் பூக்கள் மலர்ந்திருக்கும் காட்சியும், காடுகளிற் கோங்க மலர்கள் பூத்துத் திகழும் பொலிவும், பாலை பாடிய பெருங்கடுங்கோவுக்குக் கார்த்திகை விழாவின் விளக்கு வரிசைகளை நினைவூட்டுகின்றன. கார்த்திகை மாதத்தினை ''அறுமீன் பயந்த அறஞ்செய் திங்கள்'' என்றும், கார்த்திகை விழாவினைப் ''பெருவிழா'' என்றும், பாலைபாடிய பெருங் கடுங்கோ பாராட்டியுரைத்திருத்தல் போற்றுதற்குரியது.

தமிழ்நாடு முழுவதும் கார்த்திகை விளக்கீட்டு விழா நிகழ்கின்றதாயினும், திருவண் ணாமலையில் ஏற்றப்படும் தீப விளக்கமே மிகப் பெரிதும் சிறப்புடையதாதலைக் குறிக்கும் நிலையில், ''அருவி யான்ற உயர்சிமை மருங்கிற் பெருவிழா விளக்கம்'' எனப் பெருங்கடுங்கோ மொழிந்தருளியிருப்பது, மிகவும் பொருத்தம் அமைந்து கா ணப்படுகின்றது. இங்ஙனமே இவர் பாடியதற்கு ஏற்பத் திருவண் ணாமலையில் அருவிகள் நிறைந்திருந்தமை, ''மண்ணார்ந்தன அருவித் திரள மழலைம்முழவு அதிரும் அண்ணாமலை'' எனத் திருஞானசம்பந்தர் தேவாரம் கூறுமாற்றானும் உணரப் பெறும்.

**முத்தொள்ளாயிரம்:**

இவ்வாறு நாடு முழுவதும் மகிழ்ந்து கொண்டாடப்படும் பெருவிழாவாகப் பண்டை நாளிற் கார்த்திகை விழா விளங்கியது என்பதனை,

''குடத்துள் விளக்கேபோல் கொம்பன்னார் காமம்
புறப்படா பூந்தார் வழுதி-புறப்படின்,
ஆபுகும் மாலை அணிமலையில் தீயேபோல்
நாடறி கௌவை தரும்''

எனவரும் முத்தொள்ளாயிரச் செய்யுள் கொண்டும் உணரலாம். தமிழகத்தில் வேறு எந்த மலையின்மீதும் தீபம் ஏற்றி வைத்துப் போற்றும் சிறப்பும் வழக்கமும் இல்லையாதலின்,

இதன்கண் ''அணிமலையில் தீ' எனத் திருவண்ணாமலைக் கார்த்திகைத் தீபமே சுட்டப் பெற்றதென்று தெளியலாம். ''நாடறி கௌவை தரும்'' என்றதும் இவ்வுண்மையைச் செவ்வி தின் வலியுறுத்தும்.

**பழமொழி நானூறு:**

இங்ஙனம் திருவண்ணாமலைக் கார்த்திகைத் தீபம் நாடறிந்த ஒரு பெரு நிகழ்ச்சியாக, மக்கள் அனைவராலும் அறியப்பட்டுக் கொண்டாடப்பெறும் நிலையில் நிகழ்ந்து வந்தமை பற்றியே, ''குன்றின் மேல் இட்ட விளக்கு'' என்னும் தொடர் ஒரு பழமொழியாகவும் தமிழ் நாட்டில் வழங்கிவரத் தலைப்பட்டுவிட்டது.

''கன்றி முதிர்ந்த கழியப்பன் ளாள்செயினும்
என்றும் சிறியார்கண் என்னானும் தோன்றா
தாம்;
ஒன்றாய் விடினும் உயர்ந்தார்ப் படுங்குற்றம்
குன்றின்மேல் இட்ட விளக்கு ''

எனமுன்றுறையரையனார் என்னும் சங்ககால முதுபெரும் புலவர், தாம் இயற்றிய பழமொழி நானூறு என்னும் சிறந்த நூலின்கண், பாடியிருத்தலும் ஈண்டு நுனித் துணர்ந்து நோக்கத் தக்கது. தொன்றுதொட்டு நாட்டு மக்கள்அனைவரும் அறிந்துணர்ந்து உடன்பட்டு நின்றதொரு சிறந்த உண்மை மிக்க செய்தியே மக்களிடையிற் பழமொழியாக வழங்கத்தலைப்படுமாதலின், குன்றின்மேல் விளக்கிடுதல் ஆகிய விதிருவண்ணாமலைக் கார்த்திகைத் தீப நிகழ்ச்சியின் சிறப்பும் தொன்மையும் பிறவும், இனைய வென்று எண்ணியுணரலாம்.

**களவழி நாற்பது:**

கார்த்திகை விளக்கீட்டு விழாவைப் பற்றிய குறிப்புப் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான, களவழி முநாற்பது என்பதன் கண்ணும் வந்துள்ளது. கோச்செங்கணான் என்னும் சோழவேந்தன், கணைக்கால் இரும்பொறை என்னும் சேர மன்னனொடு பொருது அவனைச் சிறையில் இட்டபொழுது, பொய்கையார் என்னும் புலவர், சோழனின் வெற்றித் திறத்தினைப் புகழ்ந்து பாடிச் சேரமானைச் சிறை மீட்டனர். என்பர். இக் கோச்செங்கணானே பெரியபுராணம் கூறும் கோச்செங்கட் சோழ நாயனார் ஆவர். இவரை,

''இருக்கிலங்கு திருமொழிவாய் எண்டோள்
ஈசற்கு
எழில்மாடம் எழுபதுசெய் துலகம் ஆண்ட
திருக்குலத்து வளச்சோழன்...''

எனத் திருமங்கையாழ்வார் புகழ்ந்து போற்றினர். இவ்வரசர் 'கழுமலம்' என்னும் இடத்திற் கணைக்கால் இரும்பொறையோடு நிகழ்த்திய போரில், போர்க்களத்திற் பலவிடங்களிலும் செக்கச் செவேலென இரத்தத் துளிகள் சிந்திச் சிதறிக் கிடந்த காட்சி, கார்த்திகை விழாவில் ஏற்றி வைக்கப்படும் அளவில்லாத ஒளிவிளக்குகளைப் போன்றிருந்தது' எனப் பொய்கையார் பாடுகின்றார். சிவபக்தியிற் சிறந்த கோச்செங்கட் சோழர்கட்குத் திருக்கார்த்திகை விழாவைப் பற்றிய செய்தியை உவமையாக பாடுதல் மிகவும் மகிழ்வளிக்கும் எனக் கருதியே, பொய்கையார் இங்ஙனம் அழகுறப் புகழ்ந்து பாடினர் போலும்.

'ஆர்ப்பெழுந்த ஞாட்பினுள் ஆள்ஆள்
எதிர்ந்தோடித்
தாக்கி எறிதர வீழ்தரும் ஒண்குருதி
கார்த்திகைச் சாற்றிற் கழிவிளக்கைப்
போன்றனவே:
போர்க்கொடித் தானைப் பொருபுனல்
நீர்நாடன்
ஆர்த்துஅமர் அட்ட களத்து''

எனக் களவழி நாற்பது என்னும் நூலின்கண், ''கார்த்திகைச் சாற்றிற் கழிவிளக்கைப் போன்றன'' எனவரும் உவமையும் நாம் உணர்ந்து மகிழ்வதற்குரியது.

**சீவக சிந்தாமணி:**

இனி, இவைகளேயன்றிச் சீவகசிந்தாமணி என்னும் சிறந்த சமண சமயப் பெருங்காப்பியத்தின் கண்ணும், திருவண்ணாமலைக் கார்த்திகைத் தீப விழாவைப் பற்றிய குறிப்பொன்று வருகின்றது.

''தார்பொலி தரும தத்தன்
தக்கவா றுரைப்பக் குன்றிற்
கார்த்திகை விளக்கிட் டன்ன
கடிகமழ் குவளைப் பைந்தார்
போர்த்ததன அகலம் எல்லாம்
பொள்ளென வியர்த்துப் பொங்கி
நீர்க்கடல் மகரப் பேழ்வாய்
மதனன்மற் றிதனைச் சொன்னான்''

மலைபோன்ற மார்பில் ஒருவன் செங்குவளை மலர்களால் தொடுக்கப்பெற்ற மாலையை அணிந்திருந்தமை, திருவண்ணாமலைக் குன்றின் மீது கார்த்திகையின் போது ஏற்றிவைக்கப்படும் விளக்குகளைப்போன்றிருந்தது என்பதுகருத்து. இதனாற் பிற சமயத்தவர்களும் கார்த்திகை விளக்கீட்டு விழாவினைச் சிறப்புற மதித்துப் போற்றியமை புலனாகும்.

சிவபிரான் சோதியாய்ச் சுடராய்ச் சூழொளி விளக்காய்த் திகழ்பவன். ஒளிகளுக்கெல்லாம் மூலகாரணன் சிவபெருமானேயாவன். சூரியன் சந்திரன் அக்கினி ஆகிய ஒளியுடைய பொருள்

களெல்லாம், தம்முடைய ஒளியை இறைவனிட மிருந்தே பெறுகின்றன.

''சோதியே! சுடரே! சூழ்ஒளி விளக்கே!
சுரிசூழற் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள்வெண் நீற்றாய்!
பங்கயத்து அயனும்மால் அறியா
நீதியயே! செல்வத் திருப்பெருந் துறையில்
நிறைமலர்க் குருந்தம்மே வியசீர்
ஆதியே! அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே!''

எனத் திருவாசகமும்,

''ஒளிவளர் விளக்கே! உவப்பிலா ஒன்றே!
உணர்வுசூழ் கடந்தோர் உணர்வே!''

எனத் திருவிசைப்பாவும்,

''நாயகன் கண் நயப்பால்
நாயகி புதைப்ப எங்கும்
பாய்இருள் ஆகி மூடப்
பரிந்துல கினுக்கு நெற்றித்
தூயநேத் திரத்தி னாலே
சுடர் ஒளி கொடுத்த பண்பில்
தேயமார் ஒளிகள் எல்லாம்
சிவன் உருத் தேசே யாகும்''

எனச் சிவஞான சித்தியாரும், இறைவனே எல்லாவகை ஒளிப் பொருள்களுக்கும் ஒளிதரும் பேரொளிப் பிழம்பாகப் பிறங்கி நிற்றலை விளக்குதல் காணலாம்.

**கார்த்திகையின் முதன்மை :**

இவ்வுண்மையயினை விளக்குவதே, கார்த்திகை விளக்கீட்டு விழா ஆகும். கார்த்திகை நட்சத்திரம் அக்கினியை அதிதேவதையாக உடையது என்பர். அதனால் அஃது ''எரி'' (பரிபாடல்.11) எனவும், ''அழல்'' (புறம் 229) எனவும் வழங்கப்படும் நட்சத்திரங்களுள் கார்த்திகை மிகவும் சிறப்புடையதொன்று. ஒரு காலத்தில் கார்த்திகையை முதலாகக் கொண்டே நட்சத்திரங்க்ள் கணக்கிடப்பட்டு வந்தன என்றும், வராக மிகிரர் என்னும் வானநூற் புலவரின் காலத்திற்குப் பின்னர்த்தான் (கி.பி. 6 ஆம் நூற்றாண்டு) அசுவினியை முதலாகக் கொண்டு கணக்கிடும் முறை வழக்கத்திற்கு வந்துவிட்டது என்றும், அறிஞர்கள் யாவரும் இனிது கூறுவர்.

புத்தர்பிரான் தோன்றியருளிய விசாக நாளை, அசுவினி முதலாகக் கணக்கிட்டுப் பதினாறாவதாகக் குறிப்பிடாமல், 27 நாண் மீன்களுள் முன்னுள்ள பதின்மூன்றுக்கும் பின்னுள்ள பதின்மூன்றுக்கும் இடைநிலைப்பட்ட பதினான்காம் நாண்மீனாகக் குறிப்பிட்டு,

''இருதிள வேனில் எரிகதிர் இடபத்து
ஒருபதின் மேலும் ஒருமூன்று சென்றபின்
மீனத் திடைநிலை மீனத் தகவயின்
போதித் தலைவனோடு பொருந்தித்
தோன்றும்''

என மணிமேகலையிற் சீத்தலைச் சாத்தனார் பாடிச் செல்லுதலால், வராக மிகிரர்க்கு மிக முற்பட்ட அவர்தம் காலத்தில், கார்த்திகையே நாண்மீன்களுள் முதலாவதாகக் கொள்ளப்பெற்றிருந்த செய்தி தெளியப்படும். இவ்வாற்றாற் கார்த்திகையின் முதன்மையை உணரலாம்.

இங்ஙனம் காத்திகை முற்காலத்தில் முதல் நாண்மீனாகக் கணக்கிடப் பெற்றமைக்குக் கார் நாற்பது என்னும் நூலும் சான்று பகர்கின்றது.

''நலமிகு கார்த்திகை நாட்டவர் இட்ட
தலைநாள் விளக்கில் தகையுடைய வாகிப்
புலமெலாம் பூத்தன தோன்றி; சிலமொழி!
தூதோடு வந்த மழை''

வராக மிகிரர்க்கு முற்பட்ட பழங்காலத்தில் நாண்மீன்கள் கார்த்திகையை முதலாகக் கொண்டு கணக்கிடப்பெற்று வந்தமை பற்றியே கார்த்திகை மாதத்துக்கார்த்திகைநாண்மீனைத் ''தலைநாள்'' என மதுரைக் கண்ணங்கூத்தனார் சிறப்பித்துரைப்பாராயினர். அன்றியும் இதன்கண் அவர் ''நலமிகு கார்த்திகை'' என விதந்து ஓதிய சிறப்பும் உணரற்பாற்று.

**அரும்பெருஞ்சோதி:**

இறைவன் பேரொளிப் பிழம்பாகப் பிறங்கும் பெற்றியை அறிவுறுத்தும் வகையில் நிகழ்த்தப்பெறும் திருவண்ணாமலைக் கார்த்திகைத் தீப விழாவின் சிறப்பினை நினைவு கூர்ந்தே, மாணிக்கவாசகர் தாம் திருவண்ணாமலையில் அருளிச் செய்த திருவெம்பாவையினை ''ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ் சோதி'' எனத் தொடங்கியருளினார் போலும்! வட இந்தியாவில் முதலிற் சமண சமயச் சார்புடைதாக விளங்கிப் பின்னர், இந்து சமயத்தினர் என்போர் அனைவராலும் தழுவிக் கொள்ளப்பெற்ற தீபாவளி (தீபம் ஆவளி: விளக்கு வரிசை)த் திருநாள் தமிழ்நாட்டில் நெடுங்காலமாகத் தொன்றுதொட்டு நிகழ்ந்துவரும் '' ''கார்த்திகை விளக்கீட்டு விழா'' வைப் போன்ற தொன்றேயாகும்.

துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் என்னும் பெருங் கவிஞர், தாம் திருவண்ணாமலையின் மீது பாடியருளிய சோணசயில மாலையிண்கண், 'பிறவிக் கடலைக் கடந்து முத்தியாகிய கரையிற் சேரவிரும்புவோர், வழிதெரியாமையால் ஏற்படும் திகைப்பு நீங்கித் தமது தவவொழுக்கம் ஆகிய கப்பலை மேற்

கொண்டு செலுத்தி உய்யும் பொருட்டு, ஒரு கலங்கரை விளக்கைப்போல உயர்ந்தெழுந்து ஒளிதந்து விளங்குகிறது, 'திருவண்ணாமலைக் கார்த்திகைத் தீபம்' என்னும் கருத்து அமையப் பாடுகின்றார்.

(1) பிறவி-கடல்

(2) முத்தி-கரை

(3) உலகியல் ஒழுக்கம்-வழிதெரியாத திகைப்பு

(4) தவஒழுக்கம்-கப்பல்

(5) திருவண்ணாமலை-தீபத்தம்பம்

(6) கார்த்திகைத் தீபம்-கலங்கரைவிளக்கு

என அமையும் முறையில், அழகிய இனிய உருவகம் செய்து, சிவப்பிரகாசர் பாடியிருக்கும் திறம், வியந்து மகிழ்தற்குரியது.

''பவக்கடம் கடந்து முத்தியங் கரையிற்
பட்ர்பவர் திகைப்பற நோக்கித்
தவக்கலம் நடத்த உயர்ந்தெழும் சோண
சயிலனே கயிலை நாயகனே''

**முடிவுரை:**

இறைவன் ஒளிவடிவமாகத் திகழுகின்றான் என்னும் கொள்கை, எல்லாச் சமயத்தாரும் ஏற்றுக் கொள்ளத்தக்க சிறந்ததொரு பேருண்மையே யாகும். ஒளியை விரும்பாதார் உலகத்தில் உளரோ? ஆதலின் ''கார்த்திகை விளக்கீட்டு விழா'' யாவருமே கொண்டாடி, இறைவனை வழிபட்டு உய்யத் தகுந்ததொரு சிறந்த விழாவாகும் என்பதிற் பிழையில்லை. எனவே, கார்த்திகைத் திருநாளில் ஒளிவடிவமாகத் திகழும் இறைவனை, உலகுயிர்கள் எல்லாம் இடர் திர்ந்து நலம் பெறற் பொருட்டு, மனமொழி மெய்களால் வணங்கி வழிபட்டு மகிழ்வோமாக! **

— — — — —

# பரஞ்சோதிமுனிவர் பாடல் நலன்

**தலபுராணங்கள்:**

தலபுராணங்கள் என்பன, அமிழ்தினும் இனிய நமது தமிழ்மொழியில், ஒரு சிறப்பியற் கூறாக ஏராளமாக விளங்கி வருகின்றன. அவைகள் தமிழ் மக்களின் சமய வாழ்க்கைக்குப் பெரிதும் துணை புரிகின்றன. ஒரு சிலர், அவற்றின் அருமை அறியாமல் எள்ளி இகழ்ந்து பழித்துப் புறக்கணிப்பது உண்டு.

''சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும், வேத
சிரப்பொருளை மிகத்தெளிந்தும் சென்றால், சைவத்
திறத்தடைவர்; இதிற்சரியை கிரியா யோகம்
செலுத்தியபின், ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்''

என்பது சிவஞானசித்தியார். இதன்கண் புராணங்களைச் 'சிறப்புடைய புராணங்கள்' என்றது, ஆழ்ந்து சிந்தித்தற்குரியது.

**சிறப்புடைய புராணங்கள் :**

புராணங்களுக்குச் சிறப்பாவது, மிக உயரிய அரிய தத்துவ நுட்பங்களை எளிய, இனிய பாமர மக்களும் இனிது அறிந்து தெளிந்து சுவைத்து மகிழும்படி, பல அழகிய கதைகள் படிவாகச் சொல்லுதல்.

ஆசிரியர் அருள்நந்திசிவம் மிகச் சிறந்த பெரும் சான்றோர். அவர் உண்மைக்குப் புறம்பான எதையும் கூற இசையார். இத்தொடருக்குப் பின்வருமாறு பொருள் கொள்ளலாம். அஃதாவது, புராணங்கள் எல்லாமே சிறப்புடையன அல்ல. அவற்றைத் திறன் தெரிந்து நாம் போற்றல் வேண்டும். அவற்றில் ஒரு சிலவே, உண்மையில் சிறப்புடையனவாகும். கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற் புராணம் போன்றவை, மிகச் சிறந்த கருத்துச் செறிந்த உயரிய சிறந்த புராணங்கள் ஆகும். அவற்றையே நாம் போற்றி உணர்ந்து பயிலுதல் வேண்டும் என்னும் கருத்தும், இத்தொடருக்கு உண்டு.

**அடைமொழிகள்:**

கவிஞர் பெருமக்கள் வழங்குகின்ற அடைமொழிகள் பொதுவாக இருதிறப்படும். ஒரு சில அடைமொழிகள், ஒரு பொருளை அதன் இனமாகிய பிற பொருள்களினின்றும் பிரித்துக் காட்டும்; செந்தாமரை, வெண்தாமரை-தயிர்க்குடம்-மோர்க்குடம், நெய்க்குடம் என்பன போல. வேறு சில அடைமொழிகளோ, அங்ஙனம் ஒரு பொருளைப் பிறவற்றினின்று பிரித்துக் காட்டாமல், தாம் அடுத்துவரும் பொருளின் இயல்பு, இத்தன்மைத்து என்பதை மட்டுமே விளக்கி, நிற்கும்; வெண்திங்கள் செஞ்ஞாயிறு என்பனபோல; 'வெண்திங்கள்' என்றால் 'கருந்திங்கள்' என்பது ஒன்று உண்டு எனக் கருதுதல் ஆகாது. 'செஞ்ஞாயிறு' என்றால் 'கருஞாயிறு' என்பது உண்டு என்று பெறப்படாது.

இவ்விருவகை அடைமொழிகளையும் முறையே பிறிதின் இயைபு நீக்குதல் (அந்நிய யோக வியவச் சேதம்) எனவும்; இயைபின்மை நீக்குதல் (அயோக வியவச் சேதம்) எனவும் பெயரிட்டுச் சேனாவரையர், சிவஞான சுவாமிகள், 'பிரயோக விவேகம்' இயற்றிய சுப்பிரமணிய தீட்சிதர் என்னும் செந்தமிழ்ச் சான்றோர்கள் விளக்கியுள்ளனர்.

'சிறப்புடைய புராணங்கள்'' என்னும் அடைமொழித் தொடர், பிறிதின் இயைபு நீக்குதலாகவேனும், அன்றி இயைபின்மை நீக்குதலாகவேனும் ஏற்றவாறு நாம் பொருள் கொள்ளும் வகையில் அமைந்துள்ளது. இஃது அருள்நந்திசிவாசாரிய சுவாமிகள் அவர்களின் அருமை பெருமைகளையுணர்த்த வல்ல சான்றுகளுள் ஒன்றாகும். அருள்நந்தி சிவாசாரியர் ஒப்புயர்வற்ற சமயநெறிச் சான்றோர் ( Spiritualist ) மட்டும் அல்லர்; ஒரு சிறந்த பகுத்தறிவு நெறிப் பண்பாளரும் (Rationalist) ஆவர் என்னும் அரும்பெறல் உண்மையினை, இச்சிறந்த அடைமொழித் தொடர், நமக்குத் தெற்றெனப் புலப்படுத்தி நிற்கின்றது.

### புராணங்களுக்குச் சிறப்பு :

புராணங்களுக்குச் சிறப்பாவது, மிக நுண்மைத் தன்மை (சூக்குமம்) வாய்ந்த கருத்துக்களை யாவரும் உணரும்படி, பருமை மிக்க (ஸ்தூல) வடிவில் வைத்து விளக்குதலும், அருவமும் கடினமுமான செய்திகளை விளக்க, அவற்றிற்கு ஓர் உருவம் கொடுத்து எளிய இனிய கதைகளாக்கிக் கூறுதலும்; மனித வாழ்வியல் உண்மைகளையும் அனுபவங்களையும் சுவைமிக்க அழகிய கவிதைகளில் அரிய முறையில் அறிவுறுத்தலும் ஆகும்¹.

இச்சிறப்பியல்பில் இந்தியப்புராணங்கள் மிகவும் தலைசிறந்து விளங்குகின்றன. அவைகள் செழித்தோங்கிப் பரந்து விரிந்து, சிறந்த அழகுடனும், நிறைந்த பொருள் வளத்துடனும் மிளிர்கின்றன. அவைகளை நாம் உணரஉணர அவற்றின் ஒளிமிக்க கனவுகளும், உயரிய இனிய கற்பனைகளும் நம்மனோர்க்கு, வியப்பும் விம்மிதமும் விளைவித்து, அவற்றிற்கு அழகிய உருவம் கொடுத்த, நம் முன்னோர்களின் நுண்மாண்நுழை புலத்தினை வெளிப்படுத்துகின்றது.

### திருவிளையாடற் புராணம்:

சிறப்புமிக்க புராணங்களுள் ஒன்றாக, நம் தமிழ்ச் சைவச் சான்றோர்களால் மதித்துப் போற்றப் பெறுகின்ற திருவிளையாடற் புராணத்தினை பெரும்பற்றப் புலியூர்நம்பி, வேம்பத்தூரார், அனதாரியப்பர், பீமநாதபண்டிதர் முதலிய அறிஞர்கள் பலர் இயற்றியுள்ளனராயினும், அவற்றுள் எல்லாம், பல்லாற்றானும் தலைசிறந்து திகழ்வது, பரஞ்சோதி முனிவர் இயற்றியருளிய திருவிளையாடற்புராணமே யாகும் இதனைக் கவிதைச் சுவைக்குப்போற்றலாமே யன்றி, வரலாற்று உண்மைகளை ஆராய்வதற்குச் சான்றாகக் கொள்ளுதல் இயலாது என்பது, ஆராய்ச்சி அறிஞர்களின் துணிபு ஆகும்.

ஆதலின் பரஞ்சோதி முனிவர் அருளிய திருவிளையாடற்புராணத்தின் பாடல் நலன்களைச் சுவைத்துணர, இங்கு அதன் பாடல் ஒன்றையும், அதுபற்றிய அரிய நிகழ்ச்சி ஒன்றையும் பற்றி நினைவுகூர்வோம்.

### நாவலர் நாட்டார் ஐயா

இவ் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்திருந்து மறைந்தருளிய தமிழ்ப் பெருஞ் சான்றோர்களின் வரிசையில் குறிப்பிடத்தக்க பெரும் சிறப்புக்கு உரியவராகப் பிறங்கியருளியவர்களுள், நம் பெருமதிப்பிற்கும் வணக்கத்திற்கும் உரிய நாவலர் நாட்டார் ஐயா (1984-1944) அவர்களும் ஒருவர் ஆவர்! அவர்களுடைய பல்வேறு சிறப்புக்களையும் ஒருங்கெடுத்துக் கூறல், எவர்க்கும் அரிது. அவர்களின் அளவற்ற அருட்பெருந் தண்ணளிகளுக்கு உரியனவாகும் பேறு, எனக்கு எவ்வாறோ இறையருளால் எளிதாக வாய்த்தது!

### கரந்தைப் புலவர் கல்லூரி:

அவர்கள் கரந்தைப் புலவர் கல்லூரியின் மதிப்பியல் தலைவராக விளங்கி வந்தார்கள். ஆதலின் எப்போதேனும் ஒருசில மாதங்களுக்கு ஒருமுறை கல்லூரிக்கு எழுந்தருளி, ஒவ்வொரு வகுப்பையும், சில மணித்துளிகள் பார்வையிடுவார்கள். அவர்களால் நீண்டநேரம் பேசுதல் இயலாது. ஒரு சில சொற்கள்தான் பேசுவார்கள். அப்பொழுது, வகுப்புக்களில் நடக்கும் பாடங்களையொட்டிச் சில வினாக்களை

---

1. "The puranas contain the truth dressed up in myths and stories, to suit the weak understanding of the majority. The hard task of interesting the multitdues in metaphysics is achieved in India"

—**Dr. S. Radhakrishnan,**
Indian Philosophy

2 "Indian mythology is richer, vaster, very beautiful, and full of meaning. I have often wondered what manner of men and women they were who gave shape to these brightest dreams and lovely fanciles, and out of what gold mine of thought and imagination they dug them".

—**Sri Jawaharlal Nehru,**
The Discovery of India, p.66.

"However admirable as a work of art, the Tiruvilaiyadal Purana is not distinguished for historical accuracy."

—Page, 53

"The historical value of the Tiruvilaiyadal Purana, is not altogether a safe ground to build historical theories on". —Page, 57.

"I mean no disparagement to the Purana as a literary work. So charming is tts diction and so great its powers of clear description that for years together I have been in the habit of reading a few stanzas of it every day." —Page,57

—**Prof. Manonmaneeyam Sundaram Pillai,** M.A.,
The Age of Tirugnana Sambanda (1915)

எழுப்பி, மாணவர்கள் விடைதெரியாமல் விழிக்கும் போதெல்லாம், சில சொற்களில் விளக்கவுரை நிகழ்த்துவார்கள். அதன் அருமை பெருமைகளைப் பல மாணவர்கள் அறிவதில்லை. ஆனால் எப்படியோ அவைகள், என் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்து, இன்றளவும் எவ்வளவோ பெரிய அரும்பெரும் பயன்களை விளைவித்து வருகின்றன.!

**வரகுணனுக்குச் சிவலோகம் காட்டிய படலம்:**

ஒரு சமயம் இடைநிலை வகுப்பின் முதலாண்டில் ( Preliminary First Year ) பயின்றுகொண்டிருந்தபொழுது, அவர்கள் எங்கள் வகுப்பிற்கு எழுந்தருளினார்கள். அப்பொழுது திருவிளையாடற்புராணத்தில் ''வரகுணனுக்குச் சிவலோகம் காட்டிய படலம்'' என்னும் பாடம், நடந்து கொண்டிருந்தது. அதன்கண்,

''கிளர்ந்தகாலினால், அங்கியை
நிமிர்த்து, மேற்கிடைத்து,
வளர்ந்த பிங்கலை-இடை-நடு,
வழிவரும் மதியின்
விளைந்த இன்னமுது உண்டு; நம்
விடையவன் வடிவம்,
குளம்தனிற் குறித்து, அவன்உருக்
கொண்டவர் இவர்காண்!''

என்னும் ஒரு பாடல் வருகின்றது. யோகநெறி கடைப்பிடித்து, அதன் பயனாகச் சாரூபம் என்னும் பதமுத்தி பெற்றவர்கள், சிவலோகத்தின் ஒருபகுதியில் இருப்பதனை, வரகுண பாண்டியனுக்குத் திருநந்திதேவர் காட்டுகின்றார். அதனை அப்பாடல் உணர்த்துகின்றது. மிகச் சிறந்த அழகிய, சைவசித்தாந்த நுண்பொருள் அமைந்த அப்பாடலின் 'பொருள் யாது?' என ஒருசில மாணவர்களை, நாட்டார் ஐயா அவர்கள் வினவினார். ஆனால் அந்தோ! அதற்குச் சரியான விடையினை மாணவர்கள் எங்ஙனம் கூறுதல் இயலும்? அதனால் அதன் நுண்பொருபொருளை, ஐயா அவர்களே ஒருசில சொற்களில் விளக்கியருளினார்கள்.

**பொருள் நலம்:**

[''மேல்எழுந்த பிராணவாயுவினால், மூலாதாரத்தில் உள்ள நெருப்பினை மேலே எழுப்பி, மேற்சென்று, வளர்ந்த வலது நாடிக்கும், இடது நாடிக்கும், நடுவில் உள்ள சுழுமுனை நாடியின் வழியாகச் சொரிகின்ற, சந்திரமண்டலத்தின் அமுதினை அருந்தி; நம்முடைய விடைக்கொடியும் ஊர்தியும் உடைய சிவபெருமானைத் தமது நெற்றியில் (புருவநடுவில்) தியானித்து, அதன் பயனாக யோகநெறிக்குரிய சிவசாரூபம் என்னும் பதமுத்தி பெற்ற யோகநெறியாளர்கள், ஆகிய இவர்களைக் காண்க'']

என்பது இதன் பொருள். யோகநெறி கடைப்பிடிப்பவர்கள், சிவசாரூபம் என்னும் பதமுத்தி பெறுவார்கள் என்பதனைச் சிவஞான சித்தியார், எட்டாம் சூத்திரம் கூறுகின்றது. (பாடல் எண். 273).

**குறிப்புரை:**

[கிளர்ந்த - மேல்எழுந்த; காலினால்-பிராணவாயுவினால்; அங்கியை - மூலாதாரத்திலுள்ள நெருப்பினை; நிமிர்த்து-மேலே எழுப்பி; மேற்கிடைத்து-மேற்சென்று, பிங்கலை-வலதுநாடி; இடை-இடது நாடி; நடு-இவ்விரண்டிற்கும் நடுவேயுள்ள சுழுமுனையின்; வழிஉகும்-வழியாகச் சொரிகின்ற; மதியின்-சந்திரமண்டலத்தில்; இன்னமுது-அமிழ்ததாரைகளை; உண்டு-அருந்தி; விடையவன்-சிவபெருமான்; குளம்-நெற்றி (புருவநடு); அவன்உரு-சிவபெருமானின் சாரூபம்ஆகிய பதமுத்தி.]

**'குளம்' எனும் சொல்:**

இப்பாடலில் வரும் ''குளம்'' என்னும் சொல், நெற்றி அல்லது புருவநடுவைக் குறிக்கும் என்பதை, ஐயா அவர்கள் விளக்கியருளினார்கள். அப்பொருள் மாணவர்களின் மனத்தில் நன்றாகப் பதிவதற்காகப் பொருத்தமான ஒருமேற்கோட் பாடலையும் எடுத்துக் கூறினார்கள்.

**பிரபுலிங்கலீலை:**

'பிரபுலிங்கலீலை என்னும் வீரசைவப் பெருநூலில், அல்லமாப்பிரபு, விமலை என்பவள் சிவபெருமானைப் பூசித்து, அப்பூசையின் ஒரு பகுதியாக, அவரை மகிழ்விக்க நடனக்கலையின் நுட்பத் திறமெல்லாம் விளங்க, ஆடி வழிபடுகின்றாள். அந்நிலையில் அவளுடைய நலனத்திற்கு ஏற்ப, மத்தளம் (தண்ணுமை) வாசிப்பவராக மாறுவேடம் கொண்டு அல்லமாப்பிரபு வருகின்றார். 'கொண்ட கோலத்திற்கு ஏற்ப நடித்தல்' 'முறைமையாதலின், அவர் ஒருமத்தளக்காரன்போல, மாறுவேடம் புனைந்து, தம்மை மறைத்துக் கொண்டு வருகின்றார். மத்தளக்காரர்கள் தம் நெற்றியில் (புருவ நடுவில்), ஒருசிறிது பெரிய அளவில் கறுப்புப் பொட்டு வைத்துக் கொண்டிருப்பார்கள். அவ்வாறே அல்லமாப்பிரபுவும் வைத்துக் கொண்டிருந்தார்.

**அல்லமாப்பிரபு:**

அல்லமாப்பிரபு வேறு, சிவபெருமான் வேறு அல்லர். சிவபெருமான் களத்தில் (கழுத்தில்) ஆலாலம் என்னும் நஞ்சின் அடையாளமாகக் கருமை நிறம் உடையவர். ஒன்றனை மறைக்க விரும்புபவர்கள், எல்லோரும் காணும் படியாக, வெளிப்படையான களம் என்னுமிடத்திலுள்ள ஒரு பொருளை, எடுத்துக் குளத்தினில் போட்டு மறைத்துவிடுவார்கள்! அந்நிலையில் அல்லமாப் பிரபுவும், தம் களத்தில் இருந்த கறுப்பினைக் குளத்தில் போட்டு விட்டார். அதாவது, கழுத்தில் உள்ள ஆலால நஞ்சு உண்டதனால் ஏற்பட்ட கறுப்பினைக் குளமாகிய நெற்றியில் (புருவநடுவில்) எடுத்துப் போட்டுப் பொட்டாக அணிந்து கொண்டார் என்பது கருத்து. ''களத்தில் இருப்பதைக் குளத்தில் போடு'' என்பது ஓர் உலகியற் பழமொழி. இதனைத் துறைமங்கலம் சிவப்பிரகாசர், பின்வருமாறு அழகுறக் குறிப்பிடுகின்றார்.

''களத்திடை இருப்பின் உண்மை
காண்குவர் என்ன, ஆலம்
குளத்திடை வாங்கி வைத்த
கொள்கைபோல் திலதம் தீட்டி,
ஒளித்தனி மதிதன் பாங்கர்
உரோணியோடு ஒருபெண் கூட்டி,
அளித்துற வைத்தது என்ன,
அணிமணி செவிக்கு அணிந்தான்!''

—பிரபுதேவர் வந்த கதி, 8.

என்னும் பாட்லை, நாட்டார் ஐயா அழகுற எடுத்துக்காட்டி விளக்கினார். ஐயா அவர்கள் விளக்கிய பொருளின் நுட்பத்தினை, மற்ற மாணவர்கள் எவ்வாறு உணர்ந்தனர் என்பது எனக்குத் தெரியாது.

**கையறு நிலைக் கவிதை;**

ஆனால், நாற்பது (40) ஆண்டுகள் கழிந்தும், அப்பாடலும், பொருள் விளக்கமும் என்னுள்ளத்தில் பசுமையாகப் பதிந்துள்ளது. அதனால், ஐயா அவர்கள் மறைந்தபொழுது, 'கையறுநிலைக் கவிதை'ஆக, யான் இயற்றிய பாடலில், பின்வருமாறு அந்நிகழ்ச்சியைக் குறிப்பிட்டுள்ளேன்.

''குளம்என்னும் சொல்லினுக்கு நெற்றியெனப்
பொருள்கூறிக், குணக்குன் றே!எம்
உளங்கொளற்கா 'அல்லமனா உருமாறிச்
சிவபெருமான், ஒண்பொட் டொப்பக்
களங்கொண்ட கறையினையே குளஞ்சேர்த்
என்னும்நற்பா மேற்கோள் காட்டி, [தான்
வளங்கெழும விரித்துரைத்தாய்! மகிழ்வுரைகள்
தெளித்தநீ, மறைந்தாய்! அந்தோ!''

என்னும் பாடல், 1944ஆம் ஆண்டு 'தமிழ்ப் பொழில்' இதழில் வெளிவந்துள்ளது.

**முடிவுரை:**

இதுகாறும் கூறிவந்தவாற்றால் பரஞ்சோதி முனிவரின் பாத்திறனும், திருவிளையாடற்புராணக் கவிதைச் சிறப்பும், அதனை அழகுற எடுத்து விளக்கிய நாவலர் ஐயா அவர்களின் அளப்பரிய பெரும்புலமை மாட்சியும், பிறவும் இனிது விளங்கும். **

# குலோத்துங்கனின் கோயில்கள்

திரு இரா. கலைக்கோவன், M.B.B.S., D.O.,
திருச்சி - 620 018.

## குலோத்துங்கன் :

சோழப் பேராட்சியில் வேங்கி இரத்தத்தைக் கலந்த பெருமை முதலாம் குலோத்துங்கனுக்கே உரியது. வீர இராசேந்திரன் காலமானதும் சோழப் பேரரசின் அரியணைக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத மாமன்னனாக முடிசூட்டிக் கொண்டவன் குலோத்துங்கன். வேங்கி மன்னனான இராசராச நரேந்திரனுக்கும், சோழ இளவரசி அம்மங்கைக்கும் மகனாய்ப் பிறந்த இப்பெருவேந்தன் 'சுங்கம் தவிர்த்த சோழனென்றும்' 'பண்டித சோழனென்றும்' பாராட்டப்பெற்றவன். இப்பெருமகன் ஆழ்ந்த இறைப்பற்று கொண்டிருந்தமையால், தன் காலத்தில் சோழப் பேராட்சிக்கு உட்பட்ட இடங்களில், பல அழகுக் கோயில்களைக் கட்டுவித்தான். மேலைக் கடம்பூரிருக்கும் கரக்கோயில், திருப்பனந்தாளுக்கு அருகில் இருக்கும் சூரியனார் கோயில், சோழபுரத்தில் இருக்கும் கைலாசநாதர் கோயில் போன்றவை, அவற்றுள் குறிப்பிடத்தக்க சிலவாகும்.

## சோழபுரம் கயிலாசநாதர் கோயில்

குலோத்துங்கனால் எடுப்பிக்கப்பட்ட சோழபுரத்துக் கைலாசநாதர் கோயில், ஒரு அழகான கற்றளியாகும். முதற் பராந்தகன் காலத்தில் வீரநாராயண புரம் என்றும், முதலாம் இராசேந்திரன் காலத்தில் இளைச்சிக்குடி என்றும் அழைக்கப்பட்ட இன்றைய சோழபுரத்தின் கிழக்குப் பகுதியில், கிழக்கு நோக்கிய நிலையில், இக்கோயில் அமைந்துள்ளது. பெரும்பாலும் மூடியே இருக்கும் இத்திருக்கோயிலைக் காண, சில கிலோமீட்டர் தொலைவில் வசிக்கும் சிவாசாரியரை அழைத்து வந்தால்தான் முடியும். மக்கள் வருவதே அருகிப்போன நிலையில், 'எப்போதும் திறந்து வைத்து என்ன செய்வது' என்று நொந்துகொள்ளும் சிவாச்சாரியாரின் கூற்றிலும் உண்மையில்லாமல் இல்லை. அன்போடு கோயிலைச் சுற்றிக் காண்பித்து விளக்கங்களும் தந்த அப்பெரியவர் இக்கோயிலின் துன்பமான நிலைமையை எடுத்துரைத்த போது, நெஞ்சு நெகிழ்ந்தது. பொதுமக்களின் அரவணைப்பு இல்லாமல் போவதால், இது போன்ற பழம்பெரும் கோயில்கள் கூட காலச் சுழலில் வாடிப்போகும் கொடுமையை என்னென்பது!

## கோயிற் பகுதிகள் :

இத்தலத்தின் மையக் கோயில், மாடக் கோயில் போன்ற உயர்த்தப்பட்ட அமைப்புடன் விளங்குகிறது. வெளித் திருச்சுற்றில் மேற்குப் பகுதியில் பிள்ளையார், முருகன், யானைத்திருமகள் போன்ற தெய்வங்களின் சுற்றாலைக் கோயில்கள் காணப்படுகின்றன. வடக்கில் மையக்கோயிலை ஒட்டிச் சண்டேசுவரருக்கான கோயிலும், அதையடுத்து கிழக்கு நோக்கிய நிலையில் அம்மன்கோயிலும் அமைந்துள்ளன.

சிவபூரணி அம்மன் என்ற திருப்பெயருடன் விளங்கும் அம்மன் திருக்கோயிலின் முன்மண்டபம், மிகப் பிற்பட்ட காலத்து அமைப்புடன், வண்டிக்கூடு, போன்ற கூரையுடன் விளங்குகிறது. கருவறையும், உள்மண்டபமும் கருங்கல் திருப்பணி. முன்மண்டபத்தில் சனீசுவரர் திருமேனியும் இலிங்கத் திருமேனியும் நிறுவப்பட்டு இருப்பது வியப்பைத் தருகிறது. ஆகம வழக்கத்துக்கு மாறான இந்நிறுவனங்கள் எப்படி ஏற்பட்டன, எப்போது ஏற்பட்டன என்பது அங்கிருந்த யாருக்கும் தெரியவில்லை. கருவறையின் புறச்சுவர்களில் தேவகோட்டங்கள் இருக்கின்றன. ஆனால் அவற்றுள் தெய்வத் திருமேனிகள் இல்லை. இரண்டுதள விமானத்தில் சாலைகளும், கர்ணகூடுகளும் உள்ளன. வட்டமானசிகரம். இக்கோயிலின் கருவறையும், உள்மண்டபமும் ஒரு காலத்திலும்; முன்மண்டபம் ஒரு காலத்திலுமாய்க் கட்டப்பட்டிருக்க

வேண்டும். மையக்கோயிலின் கட்டட அமைப்புடன் இக்கோயில் அமைப்புமுறை எவ்விதத்திலும் பொருந்துவதாய் இல்லாமையின், மையக் கோயில் கட்டப்பட்டுப் பல ஆண்டுகளுக்குப் பிறகே தேவியின் இக்கோயில் கட்டப்பட்டிருத்தல் கூடும் என்று துணியலாம்.

**திருச்சுற்று :**

வடகிழக்குப் பகுதியில் பிள்ளையாருக்கான சிறுகோயில் ஒன்றும், வடகிழக்கு மூலையில் பைரவர் கோயிலும், ஆடவல்லான் அம்பலமும் காணப்படுகின்றன. ஆடவல்லான் அம்பலத்தைச் சுற்றி உள்திருச்சுற்று அமைந்துள்ளது.

மையக்கோயில் மாடக்கோயில் போன்ற அமைப்புடன் காணப்படுகிறதே தவிர, மாடக் கோயில் அல்ல. துணைத்தளமும், தாங்குதளமும் உயர்த்திக் கட்டப்பட்டிருப்பதால், மிக உயரமான நிலையில், பல படிக்கட்டுகளில் ஏறிச் செல்வதுபோல் இக்கோயில் அமைக்கப்பட்டுள்ளது. கோயிலின் முன்நீட்டல் சிறுமண்டபமாய் அமைந்துள்ளது. இதன் தென்புறமும் வடபுறமும் ஏறிச்செல்லப் பக்கத்திற்குப் பதின்மூன்று படிகள் உள்ளன. தரைமட்டத்தில் இம்மண்டபத்திற்கு முன்நந்தியும், பலிபீடமும் உள்ளன. இம்முகமண்டபத்தைக் கடந்ததும் மகாமண்டபம் கம்பிக் கதவுடன் அமைந்துள்ளது.

**சிற்பத்திறன் :**

உள்மண்டபத்து வாயிலின் இருபுறமும் வாயிற் காப்போர் காணப்படுகின்றனர். இங்குப் பல செப்புத் திருமேனிகள் காணப்படுகின்றன. இவற்றுள் பல பிற்காலத்தைச் சேர்ந்தவை. சிவகாமி அன்னையின் செப்புத்திருமேனி ஒன்று மட்டும் தான் சோழர் காலத்ததாகக் கருதப் படுகிறது. தலையில் கரண்ட மகுடமும், கழுத்தில் கண்டிகை, சரப்பள்ளி முதலியனவும் கொண்டு அதிக அணிகளும், ஆடம்பரமும் இன்றி, எளிமையும் அழகுமாய் வார்க்கப்பட்டிருக்கும் இச்செப்புத் திருமேனியின் வலக்கை அலவன் முத்திரையில் அமைந்துள்ளது. இடக்கை தொங்கும் கரமாக உள்ளது. தாமரைத் தளத்தில் அமைக்கப்பட்டிருக்கும் இவ்வழகுப் படிமம் காண்போரைக் கவர்ந்திழுத்து கருத்திழக்க வைக்க வல்லது.

கருவறையில் இறைவன் கைலாசநாதராய் லிங்கத்திருமேனியராய் எழுந்தருளியுள்ளார். கருவறையின் புறச்சுவர்களில் தென்புறம் பிள்ளையாரும், தென்திசைக் கடவுளும் காணப்படுகின்றனர். மேற்கில் திருமாலும், வடக்கில் நான்முகனும், கொற்றவையும் காணப்படுகின்றனர். சிற்பங்கள் கவனிப்பின்மையால் கலைப் பொலிவை இழந்த நிலையில் காணப்படுகின்றன.

மையக் கோயிலின் விமான அடித்தளத் தளம், அதாவது தாங்குதளம் அழகிய வடிப்புக்களுடன் உள்ளது. தாமரை வடிப்பு, அல்லி வடிப்பு இரண்டும் அழகுபட அமைக்கப்பட்டுள்ளன. இவற்றுக்கு மேலே யாளிவரிமானம் அமைந்துள்ளது. இவ் வரிமானம் கூடும் முனைகளில் சிறு கூடுகளில், அழகிய சிற்றுருவச் சிற்பங்கள் காணப்படுகின்றன. அரைத்தூண்களும், பலகையும் அழகுபட வடிக்கப்பட்டுள்ளன.

**விமானம் :**

விமானம் ஒருதள விமானமாக உள்ளது. சாலைகளும் கர்ணகூடுகளும் அமைந்துள்ளன. சிகரம் எண்பட்டை வடிவில் அமைந்துள்ளது. இக்கோயிலில் பல உதிரிச்சிற்பங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் தென்திசைக் கடவுளின் சிற்பம் ஒன்று. இச்சிற்பத்தின் சடாமண்டலம் எனப்படும் விரிந்த முடியமைப்பும், இட்டு காலைக் குத்திட்டு, வலதுகாலைக் கீழ்நீட்டி அமர்ந்திருக்கும் உத்குடிகாசனக் கோலமும், புதுமையும் சிறப்புமாய் உள்ளன. யோகநிலையில் இருக்கும் இந்த அமைப்புமுறை மிகஅருமையாகவே நம் கோயில்களில் காணப்படுகிறது. மலர்ந்த முகமும் அற்புதமான உடலமைப்பும் கொண்டு விளங்கும் இச்சிற்பத்தில் வலது முன் கை காக்கும் கரமாய் வடிக்கப்பட்டுள்ளது. இடது முன்கை தளத்தின் மீது ஊன்றியுள்ளது. இடது பின்கையில் மான் காட்டப்பட்டுள்ளது. வலது பின்கையில் இருப்பது தீச்சுடர் போல உள்ளது. இந்த அழகிய சிற்பம் இக்கோயிலில் கவனிப்பாரின்றிக் காணப்படுவது துன்பத்தைத் தருகிறது. பழங்கதைகள் பேசுவதில் மட்டு தீராத ஆர்வம் காட்டும் நம்மவர்கள், பழமைகளைப் போற்றிப் பாதுகாப்பதில் ஆர்வ. கொள்ளாதிருப்பது ஏனென்பதுதான் விளங்காத புதிராய் உள்ளது.

**கல்வெட்டு :**

இக்கோயிலின் எப்பகுதியிலும் கல்வெட்டுக்கள் காணப்படவில்லை. கல்வெட்டுக்கள் இருந்து அழிந்தனவா, அல்லது வெட்டப்படவேயில்லையா என்பது புரியாத புதிராக உள்ளது. அரசு ஆவணங்களிலும், கல்வெட்டுப் புத்தகங்களிலும் இக்கோயில் குறிக்கப்படாமையே இங்கிருந்து கல்வெட்டுக்கள் எக்காலத்தும் படியெடுக்கப்படவில்லை என்பதற்குப் போதிய சான்றாகும்.

**காசிவிசுவநாதர் கோயில்**

இக்கோயிலுக்குச் சற்றுத் தள்ளி இதே ஊரிலிருக்கும் காசிவிசுவநாதர்கோயில் மக்களால் புறக்கணிக்கப்பட்டநிலையில் அழிந்து கொண்டிருக்கிறது. இக்கோயிலின் கோபுரமற்ற நுழைவாயிலில் நுழைந்ததும் மையக்கோயிலை

காணலாம். இக்கோயிலின் மகாமண்டபம் சுவர்கள் இடிந்து, கூரையின்றிச் சிதிலமாய்க் காணப்படுகிறது. கருவறையில் இறைவன் காசிவிசுவநாதர் என்ற பெயரில் லிங்கத் திருமேனியராய் எழுந்தருளியுள்ளார். கருவறையின் புறச்சுவர்களிலுள்ள தேவகோட்டங்களின் வடபுறம் நான்முகன் வடிவம் உள்ளது. மேற்குப் புறத் தேவகோட்டம் வெறுமையாக உள்ளது. தென் கோட்டத்தில் அமைந்திருந்த தென் திசைக் கடவுளின் படிமம் அக்கோட்டத்திற்குக் கீழே மண்ணில் புதைந்த நிலையில் உள்ளது. விமானம் ஒருதள அமைப்புடையது. இதன் கழுத்தும் சிகரமும் செங்கல்லால் கட்டப்பட்டுள்ளது. தென்மேற்கு மூலையில் பிள்ளையார் வடிவம் உள்ளது. வடமேற்கு மூலையில் கழுத்துவரை மண்ணில் புதைந்த நிலையில் யானைத் திருமகளின் சிற்பம் காணப்படுகிறது.

அழகிய தாங்குதளம், தாமரை, கண்டம், அல்லி, வடிப்புக்குளுடன் அமைந்துள்ளது. இத்தாங்கு தளத்தில் ஒரு கல்வெட்டு காணப்படுகிறது. 'புகழ் சூழ்ந்த புணரி' என்ற முதற் குலோத்துங்கனின் மெய்க்கீர்த்தியுடன் காணப்படும் இக்கல்வெட்டு, அம்மன்னனின் முப்பத்தெட்டாம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்டுள்ளது. வீரநாராயணபுரத்து ஊரவையார், இக்கோயிலுக்காகச் சிலரால் வாங்கப்பட்ட நிலங்களின் வரிகளைக் குறைத்த செய்தியைக் கூறும் இக்கல்வெட்டில், இக்கோயில் குலோத்துங்க சோழீச்சரம் என்ற பெயரில் குறிப்பிடப்பட்டுள்ளது. வீரநாராயணபுரம் மிழலை நாட்டு, வடகரை விருதராச பயங்கர வளநாட்டைச் சேர்ந்த பகுதி என்று இக்கல்வெட்டு தெரிவிக்கிறது'.

விருதுராச பயங்கரன்' என்பது முதலாம் குலோத்துங்கனின் சிறப்புக்குரிய பட்டப்பெயர்களுள் ஒன்று என்பது இங்கு நினைவு கூரத்தக்கது. இக்கோயிலில் கா னப்படும் இந்த —ஒரே கல்வெட்டினாலும், இதில் காணப்படும் 'குலோத்துங்க சோநீழீச்சரம்' என்ற பெயராலும், இக்கோயில் முதற்குலோத்துங்கன் காலத்தில் கட்டப்பட்டதாகக் கொள்வதில் தவறேதும் இருக்கமுடியாது. கட்டடஅமைப்பிலும், தெய்வ வடிவங்களின் இடஅமைப்பிலும், கலை அமைதியிலும், கைலாசநாதர் கோயில் இக்கோயிலைப் பெருமளவு ஒத்திருப்பதால், அதனையும் முதற் குலோத்துங்கன் காலத்துக் கோயிலாகக் கொள்ளலாம்.

## முடிவுரை:

முதற்குலோத்துங்கனால் அழகுறக் கட்டப்பட்ட இவ்விரண்டு கோயில்களும் இன்றிருக்கும் நிலை கொடுமையானது. ஒன்று அழிந்து கொண்டிருக்கிறது, இன்னொன்று அழிவின் பாதையில் அடியெடுத்து வைத்திருக்கிறது. கலையுணர்வும் இறைப்பற்றும்கொண்ட பேரரசரால் எழுப்பப்பட்டு, கனிந்த நெஞ்சமும் நிறைந்த வள்ளன்மையும்கொண்ட பொதுமக்களால் புரக்கப்பட்டுச், செம்மாந்து நின்ற இந்தச் சிங்காரரக் கோயில்கள் இன்று சீர்குலைந்து கொண்டிருக்கின்றன. தடுத்து நிறுத்தப்பட்ட வேண்டிய இந்தத் துன்பத்தைத் தடுக்காமலேயே தள்ளிப் போட்டுக் கொண்டிருப்பது நியாயந்தானா? வீரமும் காதலும் கண்ணெனக் கொண்ட புறநானூற்றுத் தமிழர்கள் என்று மார்தட்டிக் கொண்டு பழம் பெருமையில் மதிமயங்கி, இருக்கும் கலைச்செல்வத்தையெல்லாம் காலத்தின் வலிய கரங்களுக்கு இழந்து கொண்டிருக்கும் நம்முடைய நிலைக்கு மாற்றமே இல்லையா?

***

# முதல் முழக்கமும், முழுமுழக்கமும்

திரு நா. வேணுகோபாலநாயகர், பி.ஏ., பி.எல்.,
வழக்கறிஞர், நோட்டரி பப்ளிக்,
செயலாளர்: ஸ்ரீவைணவமகாசங்கம், சென்னை.

''சேமம் குருகையோ!
செய்ய திருப்பாற்கடலோ!
நாமம் பராங்குசமோ!
நாரணமோ!—தாமம்
வளவோ! வகுளமோ!
தோள் இரண்டோ! நான்கும்
உளவோ! பெருமான் உனக்கு!''

என மதுரைத் தமிழ்ச்சங்கப் புலவர்களே, திருமாலுடன் ஒப்பிட்டு உவந்து, வியந்த, நம்மாழ்வார், திருக்குருகூரிலே, ஆதிசேடனாம் திருப்புளியாழ்வாரின் திருநிழலிலே எழுந்தருளி முழக்கிய முதல் முழக்கத்தையும்; தமிழ்மறை என்றும், சாமவேதம் என்றும், சரம(கடைசி)ப் பிரபந்தம் என்றும் போற்றப்படுகின்ற திருவாய்மொழி அருளும் முழுமுழக்கத்தையும் அடிப்படையாகக் கொண்டு, ஸ்ரீவைணவ தரிசனத்தின் சிறப்பையும், சீர்மையையும் அறிய முயல்வோம்!

இருள்தருமா ஞாலத்தில் உழலும் இவ்வுலகோரின் இயல்பையும், வைணவரின் குறிக்கோளையும், இலட்சியத்தையும் வெளிப்படுத்துவதே நம்மாழ்வாரின் முதல் முழக்கமாகும்! தென்பாண்டி நாட்டிலே ,திருக்கோளூரிலே, திருவவதரித்த மதுரகவிகளுக்குத் தக்க ஆசாரியாரை அடைந்து, உண்மைஞானம் பெற வேண்டுமென்று அவா. பல திவ்யதேசங்களும் திரிந்து, வடக்கே திருஅயோத்தியை அடைந்தார். இடையில் கண்டுவார்த்தையாடிய எவரையும், தன் ஆசாரியராக ஏற்றுக்கொள்ள இசையவில்லை அவரது திருவுள்ளம்.

தெற்கிலிருந்து திடீரென ஒரு ஒளிப்பிழம்பு மதுரகவிகளை வந்து தொட்டது! வடக்காக முன்னிட்டார்! அது நீண்டு முன்னிட்டது! மதுரகவிகளும் தெற்குநோக்கிப் பின்னிட்டார். அப்பிழம்பும் குறைந்து பின்னிட்டது. அதனால் தன்னை அழைக்கும் ஒளிப் பிழம்பைத் துணைகொண்டு தெற்கு நோக்கியே நடந்தார். ஒளிப் பிழம்பும் குறைந்து கொண்டேவந்து, திருக்குருகூர்த்திவ்விய தேசத்திலே ஓங்கிவளர்ந்திருந்த ஒரு புளியமரப் பொந்தில் அடங்கிவிட்டது.

அப்புளியமரப் பொந்தில் ஒரு குழந்தை மிக்க வசீகரமான தோற்றத்துடன் காட்சியளித்தது. அதனுடைய பேரொளியே திருஅயோத்திவரை நீண்டுவந்து மதுரகவிகளைத் தொட்டது. விசாரித்ததில் குறுநில மன்னரான காரியாருக்கும், உடைய நங்கையாருக்கும் திருக்குறுங்குடி எம்பெருமான் திருவருளால் பிறந்த அந்த ஆண்மகவு, கண்திறவாமலும், வாய் பேசாமலும், உண்ணாமலும் இருக்கக் கண்டு, மனம் உடைந்து, அதனைத் திருக்குருகூரில் எழுந்தருளியுள்ள பொலிந்த நின்றபிரான் சந்நிதியில் கிடத்தி, உலகின் தன்மைக்கு மாறுபட்டு இருந்தமையால் ''மாறன்'' என்று திருநாமகரணமிட்டு, விட்டுவிட்டனர் என்றும், அம்மகவும் அருகிலிருந்த புளியமரப் பொந்தில் சேர்ந்து, பதினாறு ஆண்டுகளாக வளர்ந்தும் வருகின்றது எனத் தெரிந்தது.

பொந்தில் வாழ்ந்த குழந்தையின் பொலிவு தொண்டு கிழவரான மதுரகவிகளையும் மயக்கிவிட்டது. ஒருவரையும் ஏறிட்டுப் பாராத அ[illegible] குழந்தையின் திருக்கண்கள் தம்ப[illegible] வேண்டும் எனத் துடித்த மதுரகவிகள் அருளப்பட் எடுத்து எதிரில் போட்டார் [illegible] உறங்காத அக்குழந்தையும், [illegible]தோ [illegible]மக்குள்ளே களைத் திறந்து, மதுரகவி[illegible] பேசுவதில் ஓர் மலர விழித்தது. ஒருவரிடமும் [illegible] அக குழந்தை தம்மிடம் பேசவேண்டும், தனக்கு உபதேசம் அருளி, தன்னுடைய ஆசாரியனாகித் தன்னை உய்விக்க வேண்டுமென்ற அவாவில் மேம்பட்டார் மதுரகவிகள். கூடியிருந்த கூட்டமும் கூர்ந்து கவனித்தது. தம்முடைய ஞானத்தை எல்லாம் தகர்த்துக் கொண்டிருந்த ஒரே கேள்விக் கணையை விடுத்தார், மதுரகவிகள். அக்கேள்விக்கணை:

''செத்ததின் வயிற்றில் சிறியது பிறந்தால்
எத்தைத் தின்று எங்கே கிடக்கும்?''

என்பது. அதற்கு அதைவிடச் சுருக்கமாகவும்

அழுத்தமாகவும், திருத்தமாகவும் குழந்தையிட மிருந்து,

''அத்தைத் தின்று, அங்கே கிடக்கும்!''

என விடைவந்தது. இதுவே நம்மாழ்வாரின் முதல் முழக்கமாகும்.

மதுர கவிகளின் வினா, வைணவ சமயத்தின் சாறு. அதற்குக் குழந்தை அருளிய விடை, அச்சாற்றினைத் தெளிவாக்கிக் காய்ச்சி எடுத்த கற்கண்டு. மதுரகவிகள் கேட்டது ஒரு கேள்வி. அதற்குக் கிடைத்ததோ மூன்று பதில்கள்.

சகல நூல்களையும் கற்று, சகலரையும் கேள்விகேட்டுத் திருப்தி பெறாத மதுரகவிகள், ஏவிய கேள்வியின் பொருள் யாது?

முதலாவது: ''செத்தது'' என்பது உயிரற்றது, அசித்து. இவை பஞ்சபூதங்கள் மற்றும் அவற்றின் சேர்க்கையால் ஏற்பட்டவை. நம் உடம்பு பஞ்சபூதங்களின் சாமர்த்தியமான-ஆச்சரியப்படத்தக்க சேர்க்கையே. இப்பஞ்ச பூதங்களின் சேர்க்கையால் ஏற்பட்ட அசித்தாகிய ...பிலே, அதாவது 'செத்ததின் வயிற்றில்' சிறியது என்பது அணுவளவாக உள்ள சீவாத்மா, பஞ்சபூதச் சேர்க்கையாலான அசித்து சம்பந்தமான உடம்பிலே, சிறியதான சீவாத்துமாவும் சேர்ந்துகொண்டு மண்ணுலகில் பிறவியை ஆரம்பித்துவிட்டால், அதாவது ''செத்ததின் வயிற்றில் சிறியது பிறந்தால்'', பஞ்ச பூதங்களின் சேர்க்கையாலான அசித்தான உடம்பின் அடிப்படையில் சீவாத்துமாவும் கலந்து, தேக யாத்திரையைத் தொடங்கினால், அத்தகைய சீவாத்துமா, ''எத்தைத் தின்று''-எதைத் தனக்கு உணவாகக் கொள்ளும்? அதாவது தொடர்ந்த சாதனமாகக் கொள்ளும்? என வினவினார் மதுரகவிகள். இக்கேள்வியைத் தானே திருஅயோத்திவரையில் அடுக்கிக் கொண்டே போனார்!

அந்த மிகுஞானச் சிறு குழவியிடமிருந்து, ...ளிச்சென்று வந்த பதிலும்! பஞ்ச பூதங்களால் ...மைந்த அ... தனமாகிய அசித்தின் (வயிற்றில்) ... ஏற்பட்ட உடலினுக்குள், உயிர்த் ... பிறவியை ஏற்றுக் கொண் ... தின்று'' அந்த உடலில் ஏற் ... ளை உணவாகக் கொண்டு ...ம்''-அப்படியான சுக, துக்கங்களுக்குக் காரணமான உடலிலேயே உழன்று கொண்டிருக்கும். சுக துக்கங்களுக்கு ஏதுவான உடலையே தஞ்சம் எனக் கொண்டு, உயிரானது பற்றிக் கொண்டிருக்கும். மதுர கவிகளும், இம்மாற்றத்தால் உலகின் இயல்பை அறிந்து கொண்டார்.

இரண்டாவது: அது மாத்திரமல்ல அவரது கேள்வி. இப்படிப் பஞ்ச பூதங்களாலான உடம்பில் உயிர்த் தத்துவம் கூடிப்பிறந்துள்ள நீரும், எதை உணவாகப் பற்றிக் கொண்டுள்ளீர்? மற்ற உயிர்களைப்போல நீவிரும், ஏன் உடம்பின் காரணமாக சுகதுக்கங்களில் உழலவில்லை. உலக வழக்கிற்கு மாறாக, உண்ணாமலும் உரையாடாமலும், இந்தப் புளியமரப் பொந்தில் கிடப்பது என்னவிந்தை? என்று அக் குழந்தையை மடக்கிவிட்டார் மதுரகவிகள்.

சிறுமாமனிசர் (வடிவால் சிறியவராகவும், ஞானத்தால் பெரியவராகவும் விளங்கும் சிறப்புடைய நம்மாழ்வார்) இதற்கும் பதில் அருளுகின்றார். உலகில் பிறக்கும் உயிரினங்களின் தன்மை - அதாவது செத்ததின் வயிற்றில் சிறியது பிறந்தால் - அந்த உடலினால் ஏற்படும் சுக துக்கங்களையே உணவாகக் கொண்டு உடம்பையே பெரிதென எண்ணிவாழ்ந்து கொண்டிருக்கும்..ஆனால் எனது நிலை வேறு. எனது உடம்பு, எனது ஆத்மாவை (உயிரை)க் கட்டுப்படுத்தாது. எனது ஆத்மா எனது உடம்பின் வசமல்ல-செத்ததின் வயிற்றில், அதாவது அசித்து சம்பந்தமான உடலுடன்-சிறியதான சீவாத்மா பிறந்தால் (சேர்ந்தால்) அதாவது எனக்குப் பிறவி ஏற்பட்டாலும், செத்துடன் சேராது, இச் சிறியது. ஆகையால் செத்ததின் சேர்க்கையால் ஏற்படும் சுகதுக்கங்களை உணவாகக் கொள்ளாது, இவற்றின் சாரமான இந்த உடம்பையே தஞ்சம் என வும் கொள்ளாது.

உலக இயற்கைக்கு மாறாக வளரும் இக் குழந்தையின் பெற்றோர்களின் வாக்குப்படி, இது மாறனல்லவா? தாயின் கருப்பையிலிருந்து வெளிவரும் சிசு, முதலில் மூக்கினால் நுகர்வது உலகக் காற்றையே. இக் காற்றுக்குச் சடம் எனப் பெயர். இக்காற்று, சிசுவின் உடலில் புகுந்ததும், உலகின் அஞ்ஞானத்திற்கும், உடலால் ஏற்படும் சுகதுக்கங்களுக்கும் அடிமையாகிறது. இப்படித் தனக்கும் நேராமல் தடுத்துக் கொண்டாராம் மாறன்! அதாவது தனது மூக்கின் வழியாக நுழைய இருந்த 'சடம்' என்னும் காற்றினை ''ஊம்'' என அதட்டி, உள்நுழையாதபடிக் கோபித்தாராம். எனவே இவர் சடகோபர் எனப் பெற்றார். இவரும் தமது பிரபந்தங்கள் முழுவதிலும், தம்மைச் ''சடகோபன்'' என்றே அறிவித்துக் கொள்ளுகின்றார்.

செத்ததின் வயிற்றில் பிறந்த இச் சிறியது பின் எத்தைத்தான் தின்று எங்கே கிடக்கும்? என்று கேட்கின்றீரா? விடை அருளுகின்றார், சடகோபர். 'உலக வழக்கிலிருந்து மாறுபட்டும், சடம் என்னும் காற்றையே உடலில் புகவொட்டாமல் கோபித்தும், சடகோபனானால் உள்ளஎனது ஆத்மா, தின்னவேண்டியது என்னி? கிடக்க வேண்டியது எங்கே?''அத்தைத் தின்று அங்கே கிடக்கும்''. எழுத்துக்களில் 'அ' கரம் திருமாலைக் குறிக்கும். 'ஓம்' என்பது அ, உ, ம என்னும் மூன்று எழுத்துக்களின் சேர்க்கையே. இதில் 'அ' நாராயணனையும் 'உ' திருமகளையும், 'ம' உயிர் அல்லது சீவாத்துமாவையும் குறிக்கும். மகார வாச்சியனான சீவாத்துமா, உகார வாச்சியனான திருமகளின் துணை

கொண்டு, அகார வாச்சியனான ஸ்ரீமந் நாரா யணனை அடையவேண்டும் என்பது, பிரணவ மாக 'ஓம்'' தரும் உபதேசம்.

எனவே, மகார வாச்சியனான சிறியது ஆகிய நான், அல்லது எனது சீவாத்துமா அத்தைத் தின்று-அகார வாச்சியனான திருமாலின் கலியாண குணங்களையே உணவாகக் கொண்டு அவன் சந்நிதியிலேயே உள்ள புளியமரப் பொந்திலே அவன்திருவடிவாரத்தில் கிடக்கின்றது. இவ்வாறு உள்ள 'சித்து' அல்லது ஆத்மாக்களின் நிலையினையும், இதற்கு மாறான தமது ஆத்மாவின் நிலையினையும் மதுரகவிகளுக்கு உணர்த்தியருளினார் சடகோபர்.

மூன்றாவது: மதுரகவிகளின் கேள்வியிலே தன்னலமும் கலந்திருந்தது. செத்ததின் வயிற்றில் சிறியது பிறந்தால் என்னும் நிலையில், பிறவி எடுத்துவிட்ட தனக்கு உஜ்ஜீவிக்கவேண்டிய உபதேசத்தை அருளும்படி உள்ளுறை பொருளாக வேண்டினார் மதுரகவிகள். செத்ததின் வயிற்றில் பிறந்துவிட்ட சிறியதான மதுரகவிகள், எத்தைத் தின்று எங்கே கிடக்க வேண்டும் என்பதைப் பணிவுடனும் பக்தியுடனும் விளக்கியருளும்படி வேண்டினார் சடகோபரை. மாறனாம் சடகோபரின் (அம்மிகு ஞானச் சிறுகுழவியின்) விடையிலே, இம் மூன்றாவதான விளக்கமும், அமைந்திருப்பது, தெற்றென விளங்குகிறதே!

பஞ்சபூதங்களின் சேர்க்கையாலான உடம்பில் பிறந்துள்ள, சிறியதான சீவாத்துமாவான் நீரும், அகாரவாச்சியனானதிருமாலின் கலியாண குணங்களையே உணவாகக் கொண்டு, அவன் திருவடிகளையே சரணமாகப் பற்றிக் கொண்டிருத்தலையே நிலையாகக் கொள்ளவேணும் என்று உபதேசித்தருளினார், ஆசாரியரான குருகூர்ச் சடகோபர். மதுரகவிகளும் ''தேவு மற்றறியேன்'' என நம்மாழ்வாரின் திருவடிகளில் சாய்ந்தார். அதாவது இந்த அரிய ஞானத்தை அருளியதால், திருமாலைவிடச் சடகோபரை தனக்குத் தேவு என்று ஏற்றுக் கொண்டாராம் மதுரகவிகள். தென்குருகூர் நம்பி என்றக்கால் அவர் நாவுக்கு அமுது ஊறுமாம். குருகூர் நம்பியின் பாவின் இன்னிசை பாடித் திரியலானார், அதுமுதல் கொண்டு.

அவ்விதமான பாடல்களின் சீர்மை என்னே! சிறப்புதான் என்னே! என்பதை அறிந்து கொள்வோம்.

சடகோபரின் சரமப் பிரபந்தமான திருவாய்மொழி சாமவேத சாகைகள் போன்று ஆயிரம் பாசுரங்களாலும் பரிணமித்தன. ஆயிரத்துக்குக் குறையமுடியாது. ஏன்? நாராயணன் நாமங்கள் ஆயிரம். தாள் ஆயிரம். தோள் ஆயிரம். திருக்கண் ஆயிரம். அவயவங்கள் ஆயிரம். பள்ளியான அனந்தனின் பணாமுடி ஆயிரம். அவன் உறுப்புகளுக்குப் போலியான புண்டரீகத்தின் அல்லிகள் ஆயிரம்.

திருவாய்மொழி ஆயிரம் பாசுரங்கள் கொண்டது எனத் திகைக்கவேண்டாம். திருவாய்மொழி சொல் தொடர் அந்தாதி மட்டு மல்ல. அதாவது ஒரு பாசுரத்தின் கடைசிச் சொல் அடுத்த பாசுரத்தின் முதல் சொல்லாக அமைவது. திருவாய்மொழி பொருள் தொடர் அந்தாதியும்கூட. ஒரு பத்தில் தெரிவிக்கும் விஷயத்தைத் தொடர்ந்துவரும் அடுத்த பத்தின் பாசுரங்களின் விஷயம். இப்படி சொல் தொடர்பும், பொருள் தொடர்பும் கொண்டு அருளப்பட்ட திருவாய்மொழி உலகிற்கு ஒரு புதுமை. ஆம். உலகிற்கு ஒரு புதுமை. ஆன்ற தமிழ் மறைகள் ஆயிரமுமான திருவாய்மொழியின் சொல் பெற்று உயர்ந்தனவாம், அரங்கனின் கொற்றப்புயங்கள்.

சகல வேத சாத்திரங்களையும் அடிப் படையாகக் கொண்டு ஓங்கி சிரஞ்சீவியாக எழுந்துள்ளதே வைணவஞானமாகிய ஆலமரம். இந்த ஆலமரத்தின் இலைகளே வை[illegible]ம், ஞானத்தைத் தரும். பனை ஏடுகள், அச்சுப் பக்கங்கள், வைணவ ஞான நூல்களே இதன் விழுதுகள். ஒவ்வொரு நூலும் பிரபந்தமும் வைணவ சமயமாகிற ஆலமரத்தைத் தாங்கும் விழுது. அர்த்தபஞ்சகமே, இந்த ஆலமரத்தின் அடிவிழுது. இந்த அர்த்தபஞ்சக அடிவிழுதின் அந்தரங்க உள்விழுதே, துவயம் என்னும் மந்திர ரத்தினம். இந்த மந்திர ரத்னமான துவயத்தையே திருவாய்மொழியில் தொடர்ந்து பத்துக் கருத்துக்களாகப் பத்துப் பத்துக்களிலும் பராங்குசர் அருளியுள்ளார்.

எந்த சமயக் கருத்தையும் பயின்றால் அதைப் பகுத்தறிவு பாராட்டவேண்டும். மனசாட்சியும் மகிழவேண்டும். அதை எடுத்துரைத்தால், தர்க்கம் தலைவணங்கவேண்டும். மேதாவிலாசமும் மெச்சவேண்டும். இவ்வி[illegible] மாயின் அந்த ஞானத்தால் பக்திப்பயி[illegible] செழித்து முக்திக்கனி பெருகும். [illegible] பு[illegible]யிலே, திருவாய்மொழியில் அருளப்பட் எடுத்து[illegible]திரில் [illegible]னத்தை [illegible] [illegible] உறங்காத [illegible] கடமை. ஏதோ நமக்குள்ளே ம[illegible]றவா[illegible] பழங்கதைகள[illegible] பேசுவதில் ஓர் பயனுமில்லை. [illegible]

திருப்புளியாழ்வாரின் திருநிழலிலிருந்து நம் மாழ்வார், ''அத்தைத் தின்று அங்கே கிடக்கும்'' என முழங்கியது முதல்முழக்கம், திருவாய் மொழியில் பத்துப் பத்துக்களிலும், அவை கொண்ட ஆயிரம் பாடல்களிலும் அருளிய துவய ஞானமே முழுமுழக்கம். துவய மந்திரத்தின் முழுவடிவம் '' ஸ்ரீமந் நாராயண சரணௌ சரணம் பிரபத்யே, ஸ்ரீமதே நாராயணாய நம:'' இனி இம்முழுமுழக்கம் முழுவதும் நம்மாழ்வாரின் திருவாய்மொழி முழக்கமாகவே செவிசாற்றலாம்.

—தொடரும்

## சேக்கிழார் செய்யுளின்

# தெய்வநலம்

''சித்தாந்த கலாநிதி''
புலவர் ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

### முன்னுரை

தமிழகம் கவிதைகளுக்கும், கவிஞர்களுக்கும் மிகவும் புகழ் பெற்றது. வாழையடி வாழையாகத் தமிழகத்தில் தொன்றுதொட்டுத் தோன்றியருளியுள்ள சிறந்த பெருங் கவிஞர் [illegible] வரிசையில், சேக்கிழார் பெருமானுக்குத் தனிப்பெரும் சிறப்பிடம் உண்டு.

''இங்கிலாந்து நாட்டின் வாழ்க்கை நெறிப் பண்பாடுகளை விளக்கவல்ல மாபெருங் கவிஞர்களாக ஷேக்ஸ்பியரும், மில்ட்டனும் பெரிதும் போற்றி மதிக்கப் பெறுதல் போல, நமது தமிழகத்தின் உயர்வற உயர்ந்த சிறந்த நாகரிகப் பண்பாட்டு நெறிமுறை நலங்களை விளக்கும் இணையற்ற இரு பேரிலக்கியங்களை இயற்றி [illegible]ளித்தருளியவர்கள், திருவள்ளுவரும் சேக்[illegible]ழாருமே யாவர் எனலாம்.

திருவள்ளுவர் மக்கள் வாழ்வாங்கு வாழும் நெறிமுறைகளை வகுத்துப் போந்தார்; சேக்கிழார் வாழ்வாங்கு வாழ்ந்துகாட்டிய [illegible]சிமை மிக்க சான்றோர்களின் அருள் வரலாறுகளை விரித்துரைத்தருளினார். திருவள்ளுவரின் திருக்[illegible] வாழ்க்கைக்கு இலக்கணம் என்றால், சேக்கிழார் பெருமானின் திருத்தொண்டர் புராணம், அவ்வி[illegible] ஏற்று [illegible]கொண் எடுத்துக் காட்டாகத் [illegible] [illegible] உடலில் ஏற் எனலாம்.

,ம்''-ஒட்

'தண்டமிழின் மேலாந் தரம்' எனப் போற்றத்தக்க தலைசிறந்த தமிழ் இலக்கியங்களின் வரிசையில், சேக்கிழார் அருளிய திருத்தொண்டர் புராணம் என்னும் பெரியபுராணம் முதன்மையும் சிறப்பும் மிக்கதாய்த் திகழ்கின்றது.

### பத்திச் சுவைகள்

இலக்கியங்களிற் காணப்படும் சுவைத்திறன்களைப் பொதுவாக ஒன்பது வகையாகப் பாகுபாடு செய்து உணர்த்தியருளினர்.

''நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப''

என்பது தொல்காப்பிய நூற்பா. பண்டைத் தமிழ்ப் பெருஞ் சான்றோர்கள், நகை அழுகை இளிவரல் மருட்கை அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்னும் எட்டுச் சுவைகளுடன், நடுவு நிலை (சாந்தம், சமநிலை) என்னும் ஒரு சுவையையும் கூட்டி, இலக்கியச் சுவைகள் ஒன்பது என்று கூறுவர்.

### தெய்வ நலச் சுவை

அவ்வொன்பான் சுவைகளோடு தெய்வ நலம் சான்ற பத்திச் சுவை என்னும் மிக மேலான பெருஞ்சுவையினையும், பத்தாம் சுவையாகக் கண்டு பாங்குற அமைத்துச் சேக்கிழார் தமது பெரியபுராணத்தினைப் பாடியருளினர்.

'பத்திச்சுவை நனிசொட்டச் சொட்டப்
பாடிய கவி வலவ'

எனப் பெருங்கவிஞர் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் பாடுதற்கு ஏற்ப, சேக்கிழார் பெரு[illegible]ரின் செய்யுள்களில் பத்திச்சுவை என்னும் [illegible]நலப் பண்பு பெரிதும் செறிந்து விளங்குகின்றது.

''பரஞானத்தாற் பரத்தைத் தரிசித்தோர்
பரமே பார்த்திருப்பர்;
பதார்த்தங்கள் பாரார்''

எனச் சிவஞானசித்தியார் செப்புதல் போல, தெய்வ அருள் நலத்தில் தோய்ந்து திளைத்த சிந்தை வாய்ந்த சேக்கிழார் பெருமான், எந்த எளிய ஒரு பொருளையும் தெய்வநலம் சான்றதாகவே காண்கின்றார்; எதனைப் பற்றிக் கூற முற்பட்டாலும், அதனைத் தெய்வநல இயல்புடன் சேர்த்தியைத்துவைத்தே சிந்தை களிக்கப் பாடுகின்றார்.

பனிமால் வரையின் பாலதாக உள்ள கயிலை மலையைப் பற்றிக் குறிப்பிடுங்கால், கண்கவரும் அதன் அளவற்ற பேரொளியும் வெண்ணிறமும் தெய்வநலச் சிறப்பும், சேக்கிழார்க்குச் சிவநெறியின் சிறப்படையாளமாகத் திகழும் திருநீற்றினையே நினைப்பிக் கின்றன; அப்பெருமலையின் அளப்பரும் அழகுக் காட்சியுணர்வு புண்ணியம் எல்லாம் ஒருங்கே திரண்டு பொலிந்து விளங்கினாற்போலவே, அவர்தம் மனக்கண்ணுக்குப் புலனாகின்றது.

''பொன்னின் வெண்திரு நீறு புனைந்தெனப்
பன்னும் நீள்பனி மால்வரைப் பாலது,
தன்னை யார்க்கும் அறிவரி யான்என் றும்
மன்னி வாழ்கயி லைத்திரு மாமலை!''

''அண்ணல் வீற்றிருக் கப்பெற்ற தாதலின்
நண்ணும் மூன்றுல கும்,நான் மறைகளும்
எண்ணில் மாதவம் செய்யவந் தெய்திய
புண்ணி யம்திரண் டுள்ளது போல்வது!''

## காவிரியாறு

இங்ஙனமே சோழ நாட்டிற் பாய்ந்து வளம் பெருக்கும் காவிரியாற்றைக் குறித்துச் சேக்கிழார் பாட முற்படுகின்றார். காவிரியாறு வெறும் நீர்ப் பெருக்காக, அவர்தம் தெய்வ நலங் கெழுமிய திருவுள்ளத்திற்குத் தோன்றுகின்றிலது. காவிரியாற்றினைத் தெய்வநல இயல்புகள் பலவும் கலந்து செறிந்து திகழ்வதாகவே அவர் காண்கின்றார்! பிரமதேவனனைப் போலவும், கங்கைமா நதியைப் போலவும், அம்பிகையைப் போலவும், அடியார்களைப் போலவும், கவின்மிக்க இயலும் செயலும் வாய்ந்தே காவிரியாறு திகழ்வதாகச் சேக்கிழார் கிழார் பெருமான் பாடுகின்றார்!

## காவிரியும் பிரமனும்

1) காவிரியாறு ஒரு வகையில் பிரமதேவனைப் போன்றதாக விளங்குகின்றது. பிரமதேவன் திருமாலின் உந்திச் சுழியி லுள்ள தாமரை மலரின் மேல் வீற்றிருக்கின்றான்; பல உயிர்களையும் படைத்தருள்கின்றான்; தனது கையில் குண்டிகை என்னும் நீர்க்கரகம் ஏந்யுள்ளான். அவ்வாறே காவிரியாற்றிலும் உந்தியைப் போன்ற சுழிகள் ஆங்காங்கே மலர்கின்றன; தனது நீர்ப்பெருக்கால் பல உயிர்களுக்கும் அது பெரிதும் நலம் விளைவிக்கின்றது; அதனது தூய இனிய நீரை அனைவரும் பாத்திரங்களில் முகந்து செல்லுகின்றனர். இவ்வாற்றால், காவிரியாறு பிரமதேவனைப் போலத் திகழ்கின்றது.

''மாலின்உந் திச்சுழி மலர்தன் மேல்வரும்
சால்பினால், பல்லுயிர் தருதல் மாண்பி
பினால்,
கோலநற் குண்டிகை தாங்கும் தொன்மை
யால்,
போலும்நான் முகனையும், பொன்னி
மாநதி''

## காவிரியும் கங்கையும்

2) காவிரி ஆறு, ஒரு வகையில் கங்கைமா நதியை ஒத்துக் காணப்படுகின்றது. கங்கைநதி சிவபிரானின் திங்கள் சூடிய சடைமுடியின் சிகரத்து உச்சியிலுள்ளது. அதன் அருகில், இறைவனின் சடைமுடியிலுள்ள வெண்தலை விளங்குகின்றது. அதன்கண் அலைகள் மிகுந்து, நுரை பெருகிப் பொருகின்றன. அங்ஙனமே காவிரியாற்றின் அலைகளும் வானளாவ மிக உயர்ந்த திங்கள் சூடிய முடிச் சிகரத்து உச்சியை உடையதாய்ப் பொங்கி யெழுந்து, பெருகும் தன் அலைகளில் வெண்மையான நுரையைப் பரப்பிக் கொண்டு, வேகமாக மோதிப் பாய்ந்து செல்கின்றது. இவ்வாற்றால், 'பொன்னியாம் கன்னி' ஆகிய காவிரியின் வெள்ளம், சிவபிரானின் சடைமுடியிலிருந்து பெருகும் கங்கையாறு எனத் தோன்றுகின்றது.

திங்கள் சூடியமுடிச் சிகரத் துச்சியில்
பொங்குவெண் தலைநுரை பொருது
போதலால்,
எங்கள்நா யகன்முடி மிசைநின் றேயிழி
கங்கையாம் பொன்னியாம் கன்னி தீர்த்தமே

## காவிரியும் காமாட்சியும்

3) அழகிய நீண்ட மலையிற் பிறந்து வளர்ந்து வரும் மேன்மையாலும், தமிழகத்திற் பாய்ந்து நாட்டை வளப்படுத்திப் பல அறங்களும் வளரும்படி செய்துவரும் மாட்சிமையினாலும், காவிரி ஆறானது, இமயமலை அரசனின் மகளாகத்தோன்றியவரும் காஞ்சிபுரத்தில் இருநாழி நெற்கொண்டு முப்பத்திரண்டு அறங்களை வளர்த்தவளும் ஆகிய காமாட்சியினுடைய திருவுள்ளத்தினின்று பொங்கி எழும் கருணை வெள்ளத்தைப்போற் பரவிப் பாய்ந்து நலம் விளைவிக்கின்றது.

வண்ணநீள் வரைதர வந்த மேன்மையால்
எண்ணில்பேர் அறங்களும் வளர்க்கும்
ஈகையால்
அண்ணல்பா கத்தையா ளுடைய நாயகி
உண்ணெகிழ் கருணையின் ஒழுக்கம்
போன்றது

## காவிரியும் அடியாரும்

4) மணம் மிகுந்த மலர்களை வாரிக் கொணர்ந்து தூவியும், தனது பெரிய அலை

களால் நீரைச் சொரிந்தும், கரையிலுள்ள எண்ணில்லாத பல சிவாலயங்களிலுள்ள இறைவனை வழிபட்டுச் செல்லும் திறனால், காவிரியாறானது இறைவனுக்கு நீர் சொரிந்து மலர் சூட்டிப் பணிந்து வழிபடுகின்ற சிவனடியார்களைப் போன்ற சிறந்த செயலுடையதாகத் திகழ்கின்றது.

வம்பு லாம்மலர் நீரால் வழிபட்டுச்
செம்பொன் வார்கரை எண்ணில்
சிவாலயத்து
எம்பிரானை இறைஞ்சலின் ஈர்ம்பொன்னி
உம்பர் நாயகர்க்கு அன்பரும் ஒக்குமால்!

## நெற்பயிர்

தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம் என்னும்படி திகழ்வது சோழநாடு. சோழ நாட்டிற் கண்கொண்டு காணுமிடம் எல்லாம் பச்சைப்பசேல் என்று, வயல்களில் நெற் பயிர்கள் செழித்தோங்கி நிற்கும். சேக்கிழார் 'திருநாட்டுச் சிறப்பு' என்னும் பகுதியில், அது பற்றிப் பாடத் தொடங்குகின்றார். வயல்களில் நெற்பயிர் வளரும் காட்சியை நாமும் பல்கால் கண்டு மகிழ்ந்திருக்கின்றோம். நம்மனோர்க்கு அதுவெறும் காட்சியாகவே அமைந்தொழிகின்றது; ஆனால், சிவனடியார்களின் திருவருட் சிறப்பிலேயே ஈடுபட்டுத் திளைத்து நிற்கும் சேக்கிழார் பெருமானுக்கு, வயல்களில் வளரும் நெற்பயிர்க் காட்சிதானும், சிவனடியார்களின் சிறந்த பல பண்புகளையே நினைவூட்டி மகிழ்ச்சியை விளைவிக்கின்றது.

நெற்பயிர்கள் செழித்தோங்கி வளர்கின்றன; தமக்கு ஒப்பு இன்றி நெருக்கமாகத் தூறு பட்டு எழுகின்றன; தூய்மையும் வெண்மையும் வாய்ந்து, உள்ளே பதர்த்தன்மை படியாமல், நெல் முகிழ்த்தற்குப் பால் ஊறி நிற்கின்றன; நெற்கரு முதிர்ந்து பசுமையுடையனவாகின்றன; சுருண்டு பிணைந்திருந்த கதிர்கள் வெளிப்பட்டு விரிகின்றன; நெல்மணிகள் நிரம்பிக் கதிர்களின் சுமையினால் ஒன்றோடொன்று தலை சாய்ந்து நிற்கின்றன.

அரனுக்கு அன்பர் ஆகிய அடியார்களும், உயரிய நோக்கங்களையுடைய சிந்தையினராய் ஓங்கி நிற்கின்றனர்; குணநலங்களால் தமக்கு ஒப்பு இல்லாமல் திகழ்கின்றனர்; வெண்மையான தூய உள்ளத்தினராய் விளங்குகின்றனர்; அன்பு முதிர்ச்சியினால் அவர்களது திருமேனியின் நிறம் வேறுபடுகின்றது; அவர்களின் அறிவு வளர்ந்து விரிவடைந்து மாட்சிமை மிக வெளிப்பட்டு விளங்குகின்றது; ஒருவரை ஒருவர் சந்திக்கும்போது, அன்பும் பண்பும் தோன்ற, அவர்கள் தம் தலைவணங்கி மகிழ்கின்றனர்.

இங்ஙனம் நெற்பயிர் விளைவிற்கும், சிவனடியார்களின் சிந்தைக்கும் இடையே ஒப்புமைப் பண்புகள் பல கண்டு, சிலேடையுவமை பாடிக் காட்டி, நம்மை மகிழ்விக்கின்றார் சேக்கிழார் பெருமான்!

''சாலிநீள் வயலின் ஓங்கித்
தந்நிகர் இன்றி மிக்கு,
வாலிதாம் வெண்மை யுண்மைக்
கருவினாம் வளத்த வாகிச்,
சூல்முதிர் பசலை கொண்டு,
சுருள்விரித்து அரனுக்கு அன்பர்
ஆலின சிந்தை போல,
அலர்ந்தன கதிர்கள் எல்லாம்''

''பத்தியின் பாலர் ஆகிப்
பரமனுக்கு ஆளாம் அன்பர்
தத்தமில் கூடி னார்கள்
தலையினால் வணங்கு மாபோல்,
மொய்த்தநீள் பத்தி யின்பால்
முதிர்தலை வணங்கி, மற்றவ்
வித்தகர் தன்மை போல
விளைந்தன சாலி எல்லாம்''

சேக்கிழார் பெருமானின் திருவுள்ளம், இறைவனின் திருவருட் சூழலிலேயே திளைத்து நிற்பது; 'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' என்னும் இயல்புடையது; அஃது எந்தப் பொருளையும் இறையருள் மயமாகவே கண்டு இன்புறும் பண்பு வாய்ந்தது! ஆதலின் வண்டுகள் மரங்கள் மலர்கள் முதலிய எளிய பொருள்களையும் கூட, அவர்புனைந்துரைத்துப் பாடும் திறம் வியந்து மகிழத் தகுவதாக உள்ளது.

## வண்டுகளும், தொண்டர்களும்

சுந்தரர் திருவதிகையினின்று தில்லைக்குச் செல்கின்றார். செல்லும் வழியில் அவர் பற்பல இனிய காட்சிகளைக் காண்கின்றார். தில்லையைச் சுற்றியுள்ள மதிலின் புறத்தேயுள்ள அகழிகளில், வண்டுகள் இங்கும் அங்குமாகப் பறந்து சென்று கொண்டிருக்கின்றன. அவ் வண்டுகள் சிவனடியாரைப் போல விளங்குகின்றன என்கின்றார் சேக்கிழார்! அடியவர்கள் தம் உடம்பெல்லாம் திருநீறு பூசியிருப்பார்கள்; இறைவனின் அருட்புகழை இடையறாது எப்பொழுதும் பாடித் துதிப்பார்கள்; அவ்வாற்றால் ''இன்பமே, எந்நாளும் துன்பம் இல்லை'' எனும்படி மகிழ்ச்சியுற்றுக் களித்திருப்பார்கள்.

அம்முறையில், நெய்தற்றிணைக் கருப்பொருள்களுள் ஒன்று ஆகிய தாழை மலர்களின் வெண்மை மிக்க மகரந்தத் துகள்களைத் திருநீறு போல, வண்டுகள் தம் உடம்பெல்லாம் அளைந்து பூசிக் கொண்டுள்ளன; அவைகளின் இனிய மெல்லிய இசை முரற்சி, அடியவர்கள் பாடும் துதிப்பாடல்களைப் போல உள்ளது.

அடியவர்கள் சிவானந்தம் ஆகிய தேனைப் பருகி இன்புற்றுச் செம்மாந்திருத்தல்போல, வண்டுகளும் மலர்களில் உள்ள தேனை மாந்திக் களித்து இங்கும் அங்கும் பறந்து களிநடம் புரி கின்றன.

''மன்றுள் ஆடும்மது வின்நசை யாலே
மறைச் சுரும்பு அறை புறத்தின்மருங்கே
குன்று போலும் அணி மாமதில் சூழும்
குண்டு அகழ்க் கமல வண்டு, அலர் கைதைத்
துன்று நீறுபுனை மேனிய ஆகித்
தூய நீறுபுனை தொண்டர்கள் என்னச்
சென்று சென்று முரல்கின்றன கண்டு
சிந்தை அன்பொடு திளைத்து எதிர்சென்
றார்''

### மாமரங்களின் வேள்வி

திருஞானசம்பந்தர் அதவரித்த சீர்காழிப் பதியின் சிறப்பினை விவரித்துப் பாட முற்படுகின்றார் சேக்கிழார்! சீர்காழிப் பதி மருதத் திணையைச் சேர்ந்தது. அதனால் அங்கு மாமரங்களும், தாமரை மலர்களும், எம்மருங்கும் நிரம்பிக் காணப்படுகின்றன. திருஞானசம்பந்தர் வேதவேள்விகள் தழைக்கும்படி செய்யத் தோன்றியருளியவர். ஆதலின் சேக்கிழார், மாமரங்களுங்கூட, சீர்காழிப் பதியில் 'ஆகுதி வேட்கும்' தகைமையனவாக விளங்குகின்றன என்கின்றார். மேலும், திருஞானசம்பந்தர் சீர்காழிப் பதியில் அந்தணர் குலத்து உதித்தவர் ஆதலின், அங்குள்ள தாமரை மலர்களும் அந்தணரின் இயல்புகளைப் பெற்றுள்ளன என்று, சுவைமிக விளக்குகின்றார் சேக்கிழார்!

சீர்காழியில் உள்ள வயல்கள், யாக குண்டங்களாகவும்; வயல்களில் பூத்துள்ள செந்தாமரை மலர்கள், யாகத் தீயாகவும்; அவ்வயல்களின் வரப்புகளில் வளர்ந்துள்ள மாமரங்களின் இனிய பழங்கள் கனிந்து முதிர்ந்து பொழியும் தேனானது நெய்யாகவும்; அது மா இலைகளின் நுனிவழியாக வழிந்து செந்தாமரை மலர்களில் விழுதல், யாக குண்டங்களில் மாவிலையினாற் செய்த சுருக்கம் சுருவமும் கொண்டு நெய் சொரியப் பெறுதலாகவும் அமைய, மாமரங்கள் அந்தணர்களைப்போல ஆகுதி வேட்கின்றன.

''பரந்தவிளை வயற்செய்ய
பங்கயமாம் பொங் கெரியில்
வரம்பில்வளர் தேமாவின்
கனிகிழிந்த மதுநறுநெய்
நிரந்தரம்நீள் இலைக்கடையால்
ஒழுகுதலால், நெடிதுஅவ்வூர்
மரங்களும் ஆகுதிவேட்கும்
தகையஎன மணந்துளதால்''

### அந்தணரும் தாமரையும்

அந்தணர்கள் தமது தோற்றத்தில் தெய்வ ஒளியும் மணமும் பெற்றுத் திகழ்வர்; கையில் தருப்பையாகிய புல்லும், மார்பில்பூணூலும் தாங்கியிருப்பர்; தூய்மை பொருந்திய நுண்ணிய திருநீற்றுப் பொடியை அணிந்திருப்பர்; இறைவனைச் சாம வேதம் பாடித் துதிப்பர்; ஆனந்தக் கண்ணீர் ததும்பி நிற்பர்.

அந்தணர்க்குரிய இவ்வியல்புகள் அனைத்தையும், செந்தாமரை மலர்களும் பெற்றுத் திகழ்கின்றன. மென்மையான புற இதழ்கள் உடையனவாய், நாளத்தினுள்ளே மெல்லிய நூலைக் கொண்டுள்ளன. மகரந்தமாகிய திருநீற்றுத் துகளை அணிந்திருக்கின்றன. தம்மிடம் வந்து மொய்க்கும் வண்டுகள் மிழற்றும் இன்னிசையால், சாமவேதம் ஓதுகின்றன. தேன் துளிகள் ஆகிய கள்நீர் ததும்பி விளங்குகின்றன.

''காமர்திருப் பதியதன்கண்
வேதியர்போற், கடிகமழும்
தாமரையும், புல்லிதழும்
தயங்கிய நூலும் தாங்கித்,
தூமருநுண் துகள் அணிந்து,
துளிவரு கண்ணீர் ததும்பித்,
தேமருமென் சுரும்பிசையால்
செழுஞ்சாமம் பாடுமால்''

### திருப்புகலூரும், திருவாரூரும்

சேக்கிழார் பெருமான் தேவாரத் திருமுறைகளில் மிகவும் ஈடுபாடுடையவர்; அதனை அழுந்தி அறிந்து ஆராய்ந்துணர்ந்து அனுபவித்துத் திளைத்து நின்றவர். தேவாரத் தமிழிசையைப் பலகாலும் கேட்டுக் கேட்டு உளம் கசிந்துருகி உவகை உற்றவர்! திருமுறைகளின் செழும்பொருளையும், சிறந்த இசையையும் ஆழ்ந்து அனுபவித்து ஆரா இன்பம் அடைந்தவர்களில், சேக்கிழாரே தலைசிறந்தவராவர். ஆதலின், அவர்தம் அரிய அனுபவ நலங்கள், அவருடைய கவிதைகளில் பல விடங்களில் தாமே அழகுற வெளிப்படுகின்றன.

திருநாவுக்கரசர் வாழ்ந்த திருப்புகலூரையும், நம்பியாரூரர் வாழ்ந்த திருவாரூரையும் பற்றி எண்ணும்போதே, சேக்கிழார் பெருமானுக்கு அப்பெருமக்கள் அருளிச்செய்த தேவாரத் திருப்பாடல்களின் சிறப்பும் உருக்கமும் தெய்விகநலமும் முதலியன பற்றி அவர்தம் திரு

வுள்ளத்திற் பலதிற நினைவுகள், கடல் எனப் பொங்கி எழுந்து அலைகொழிக்கின்றன.

''வண்டு பாடப் புனற்றடத்து
மலர்ந்து கண்ணீர் அரும்புவன,
கொண்ட வாச முகையவிழ்ந்த
குளிர்பங் கயங்களே அல்ல;
அண்டர் பெருமான் திருப்பாட்டின்
அமுதம் பெருகச் செவிமடுக்கும்
தொண்டர் வதன பங்கயமும்
துளித்த கண்ணீர் அரும்புமால்''

''உள்ளம் ஆர்உரு காதவர்? ஊர்விடை
வள்ள லார்திரு வாரூர் மருங்கெலாம்
தெள்ளும் ஓசைத் திருப்பதி கங்கள்,பைங்
கிள்ளை பாடுவ, கேட்பன பூவைகள்!''

திருப்புகலூரில் உள்ள நீர்நிலைகளில் எல்லாம், தாமரைப் பூக்கள் நிரம்பியிருக்கின்றன. மணம் கமழ்ந்து, முகையவிழ்ந்து, குளிர்ச்சியும் மிக்க அத்தாமரை மலர்கள், வண்டுகள் இசை பாடுதலைக் கேட்டு மகிழ்ந்து மலர்ச்சியுறுகின்றன; கள்நீர் ஆகிய தேன் துளிக்கின்றன. இது மட்டுமோ? இத்தாமரை மலர்களைப் போலவே, கண்ணீர் அரும்புகின்ற வேறு சில தாமரைகளும் அங்கே யுள்ளன. அன்பு நிரம்பிப் பக்குவம் எய்திச், சாந்தம் ததும்பும் அடியார்களின் திருமுகம் ஆகிய தாமரை மலர்களும்கூட, அங்கே சிவபெருமானின் அருள்நலம் பரவும் தேவாரத் திருப்பாடல்களின் அமுத இசை நலத்தினைச் செவிமடுத்து, ஆனந்தக் கண்ணீரைச் சொரிகின்றன.

திருவாரூரிலும், அதன் சுற்றுப் புறங்களிலும் எல்லாம், தெளிந்த ஓசைநலம் மிகுந்த தேவாரத் திருப்பதிகங்களைக் கிளிகள் பாடுகின்றன; அவற்றை நாகணவாய்ப் பறவைகள் கேட்டு மகிழ்கின்றன. தேவாரத் திருப்பாடல்களின் தெய்விக இசைநலனைக் கேட்டு, உள்ளம் உருகாதவர்கள் யாவர்? என்கின்றார் சேக்கிழார்!

## இருளின் இயல்பு

இரவிற் பரவும் இருளையும், அதனைப் போக்கி ஒளிதரும் நிலவையும், நாம் நன்கு கண்டறிந்துள்ளோம். இருளையும் நிலவையும் பற்றி எத்தனையோ பல கவிஞர்கள் எவ்வெவ்வாறோ பாடியிருக்கின்றனர். சேக்கிழார்க்கும் அவற்றைப் பற்றி ஓரிடத்தே பாட வேண்டிய வாய்ப்பு நேர்கின்றது. அவர் இவற்றைப் பாடியருளும் திறம், ஒரு பெரும் தனிச் சிறப்பு வாய்ந்து மிளிர்கின்றது. இவற்றையும்கூட, அவர் தம்முடைய இறையுணர்வுநலம் பெரிதும் கலந்து பிறங்கும் வண்ணமே பாடி யருள்கின்றார்!

மாலை நேரத்தில் சூரியன் மறைந்து இருள் பரவத் தொடங்குகின்றது. அவ்விருள் பெரிதும் அடர்ந்து, மிகவும் கருமை நிறம் படர்ந்து, அச்சம் விளைக்கும் நிலையில் எங்கும் பரவுகின்றது. கரிய அவ்விருளின் கொடிய தன்மை, விலைமகளிரின் மாசுபடிந்த மனத்தையும், கொலை களவு வஞ்சகம் ஆகியனவற்றையே செய்துழலும் கொடியவர்களின் தீவினைகளையும், சிவபெருமானின் 'நமசிவய' என்னும் திருவைந்தெழுத்தினை உணர்ந்து ஓதித் தியானிக்கும் அறிவு பெறாதவர்களின் நெஞ்சத்தையும், போன்று இருந்தது.

''பஞ்சின் மெல்லடிப் பாவையர் உள்ளமும்,
வஞ்ச மாக்கள்தம் வல்வினையும், பரன்
அஞ்செ ழுத்தும் உணரா அறிவிலோர்
நெஞ்சும்,என்ன இருண்டது நீண்டவான்''

## திருநீறும் நிலாவும்

மாலையில் முன்நேரத்தில் பரவிய இருள் நீங்கி மறையும்படி இரவிற் பின்நேரத்தில் நிலாத் தோன்றுவதாயிற்று. நிலவு தோன்றிய தன்மை, திருநீற்றின் தன்மைகளோடு பெரிதும் ஒத்திருந்தது, எனச் சேக்கிழார் பெருமான் தம் தெய்விக உளநிலைச் சால்பு தோன்றக் குறிப்பிடுகின்றார். நிலவு வெண்மை நிறம் உடையது; திருநீறும் வெண்மைநிறம் வாய்ந்தது. நிலவு தூய்மையும் தண்மையும் கொண்டது, அங்ஙனமே திருநீறும் தூய்மை மிகுந்து, தன்னை அணிந்து கொள்வோர்க்கு மனஅமைதியாகிய தண்மையை அளிப்பது. நிலவினைப் போலவே திருநீறும் ஒளிபயக்க வல்ல மாண்புடையது. நிலவின் ஒளி உலகெங்கும் பரவுதலைப்போல, திருநீற்றின் பெருமையும் உலகர் அனைவரும் போற்றத்தக்க பொதுமை நலம் பொருந்தியது. நிலவின் ஒளி, மன்னுயிர்க்கட்கெல்லாம் இன்பம் பெருக விளைவிக்கும் ஏற்றம் மிக்கது; அதுபோலத் திருநீறும், அன்பும் நம்பிக்கையும் கொண்டு அணிபவர் அனைவர்க்கும், இன்பம் அளிக்கும் பண்பில் இணையற்றது. தூய்மை, ஒளியுடைமை, வெண்மை, தண்மை, இன்பமளிக்கும் தகைமை என்பவற்றால், திருநீறும் நிலவும் பெரிதும் ஒப்புமையுடையன, எனச் சேக்கிழார் விளக்கியருள்கின்றார். இத்தகைய தெய்வநலச் செய்யுட்டிறனைப் பிற கவிஞர்கள்பால் நாம் காண்டல் பெரிதும் அரிதாகும்.

''தோற்றும் மன்னுயிர் கட்கெலாம்
தூய்மையே
சாற்றும் இன்பமும் தண்மையும் தந்து
போய்
ஆற்ற அண்டம் எலாம்பரந்து, அண்ணல்
வெண்
நீற்றின் பேரொளி போன்றது நீள்நிலா''

முடிவுரை

தமிழகம் தெய்வ நலச் சிறப்பிலும், பக்தி யுணர்வொழுக்கப் பண்பாட்டிலும், உலக நாடுகள் பலவற்றுள்ளும் ஒப்புயர்வற்றுத் தலை சிறந்து விளங்குவது. பக்திஇயக்கம், நமது தென்னகத்திலேயே முதன் முதலில் தோன்றி, பின்னர் இந்திய நாடெங்கணும் பரவித் தழைத்து வளர்வதாயிற்று. ஞானம் வைராக்கியம் என்னும் இரு பண்புகளும், அவற்றுக்குத் தாய் போன்ற பக்தியுணர்வும், தமிழகத்திலேயே ஆழ்வார்களாலும் நாயன்மார்களாலும், தோன்றிப் பரவி வளரத் தலைப்பட்டது. தமிழகத்திலிருந்தே பக்தி இயக்கம், கருநாடகம் மகாராட்டிரம் கூர்ச்சரம் முதலிய நாடுகளிலும் பரவி வளர்ந்தது என, ஆராய்ச்சியாளர்கள் கூறுவர். ❋

தமிழகமே பக்தியியக்கத்தின் தாயகம். நாயன்மார்களும் ஆழ்வார்களும் நாடெங்கும் பக்தியுணர்வை நலமுறப் பரப்பியருளினர். அவர்களின் வழிநின்று தெய்வநலத்தினையும், பக்தியுணர்வொழுக்கப் பண்பாடுகளையும் பெரிதும் வளர்த்துப் போற்றிய பெருமைக்குரியவர் சேக்கிழார் பெருமான்! தமிழ்நலம் போற்றும் சிறந்த தகவுடைய அன்பர்கள் அனைவரும் சேக்கிழாரின் சிறப்பறிந்து போற்றக் கடமைப் பட்டுள்ளனர்! ஆதலின், நம்மனோர் அனைவரும் சேக்கிழாரின் சிறப்புக்களை யுணர்ந்து, அவர் அருளிச் செய்த திருத்தொண்டர் புராணத்தினை அன்புடன் ஓதிப் பயின்று, நல்லற வாழ்வு நடாத்தி, நலம்பலவும் எய்த முயலுவோமாக!

---

❋ "In the Bhagavata Mahatmiyam, we find a parable in which **Bhakti** is described as a distressed woman who was born in the Dravida country, had attained her woman-hoad in the Carnatic and Maharashtra, and had travelled in great misery through Guzarat and North India with her two sons Gnana and Vairagya to Brindaban, and that owring to the hard conditions through which she had to pass her two sons had died.

This shows that atleast according to the traditions of the Bhagavata Purana, Southern India was regarded as a great stronghold of Bhakti Cult''

— Prof. Das Gupta,
History of Indian Philosophy.

---

செய்திச் சுருக்கம்

## ஸ்ரீபாஷ்யகாரர் கோவில் சம்ப்ரோட்சணம் :

மதுராந்தகம் ஸ்ரீராமாநுஜரின் அவதார தலமான ஸ்ரீபெரும்புதூரில் எழுந்தருளியுள்ள ஸ்ரீஎதிராஜவல்லி சமேத ஸ்ரீஆதிகேசவப்பெருமாள் ஸ்ரீபாஷ்யகாரர் கோவில் மகாசம்ப்ரோட்சணம் ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெற்றது. ஸ்ரீஎதிராஜசுவாமிகள் சம்ப்ரோட்சணத்தை நடத்தி வைத்தார். 500 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போதுதான் மகாசம்ரோட்சணம் நடைபெறுவதாக கூறப்பட்டது. 11லட்சத்து 19 ஆயிரம் ரூபாய் செலவில் இராஜகோபுரமும் இரண்டு விமானங்களும் திருப்பணி செய்யப்பட்டிருப்பதாகவும், இன்னும் தேர்பகுதியும், திருக்குளப் பகுதியும் திருப்பணிக்கு உள்ளன என்றும் கோவில் நிர்வாக அதிகாரி என். நாகராஜன் கூறினார். தேர், குளம் திருப்பணிக்கு 3 லட்சம் தேவைப்படுவதாகவும், இதுவரை சேஷசார்லு அறக்கட்டளையினர் ரூ. 1.5 லட்சம்வரை உதவியுள்ளதாகவும் அவர் கூறினார். மத்திய அமைச்சர் மரகதம் சந்திரசேகரும், சட்டமன்ற உறுப்பினர்களான டி. யசோதா, ஜி, அனந்த கிருஷ்ணன், ஜயபாரதி ஆகியோரும் சுவாமி தரிசனம் செய்ததாக அவர் கூறினார்.

---

# வைணவம்

'திருமால்நெறிச் செல்வர்' 'பெரும்புலவர்'
திரு க. பத்மநாபன் அவர்கள்
பெருவளநல்லூர், திருச்சி மாவட்டம்

''புலனைந்துமேயும் பொறியைந்தும் நீங்கி
நலமந்த மில்லதோர் நாடு புகுவீர்
அலமந்து வீய அசுரரைச் செற்றான்
பலமீந்து சீரிற் படிமின் ஓவாதே''
(திருவாய்மொழி 2—8—4)

என்ற பாசுரத்தில் ''நலமந்தமில்லதோர் நாடு'' என்றது காண்க. ''நலமந்தமில்லதோர் நாடு'' என்பதில் 'அந்தம்' 'இல்லது' என்பதை நலம், நாடு இரண்டிற்கும் சேர்த்துப் பொருள் கொள்ளல் வேண்டும்.

''அந்தமில்லதோர் நாடு''
அழிவில்லாத ஒப்பற்ற நாடு

நலம் அந்தமில்லதோர் நாடு-அழிவில்லாத இன்பத்தை உடைய நாடு. நாடு-இன்பம். நாடும் அழிவில்லாதது, அதனை அடைந்தார்க்கு உண்டாகும் இன்பமும் அழிவில்லாதது. அந்தமில் இன்பத்து அழிவில் வீடு என்பர் ''பரிமேலழகர்''. அந்தமில் பேரின்பம் என்றும் வைகுந்தம் என்றும் ஆழ்வார் கூறியுள்ளார். வீடுபேற்றில் ஆன்மா இறைவனுக்குச் செய்யும் கைங்கர்யத்தையே ஆழ்வார்களின் பாசுரங்கள் வற்புறுத்துகின்றன. இதுவே சிறந்த வைணவ சமய நெறியுமாகும்.

ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி
வழுவிலா அடிமை செய்ய வேண்டும்
(திருவாய்மொழி 3—3)

என்று ஆழ்வார் வற்புறுத்துவதைக் காண்க.

## தொல்நெறி-சம்ப்ரதாயம்

புருஷார்த்தத்தில் ஓர் அழகிய அமிசம் ''உன்றன்னோடு உற்றோமே யாவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்'' என்ற பகவதனுபவமும் பகவத் கைங்கர்யமுமே யாம். எனினும் அத்துடன் நில்லாமல், அதன் எல்லை நிலமாகிய பாகவத-பர்யந்தம் செல்லவேண்டும் என்ற ஸரமான அம்சம் காட்டப்படுகின்றது. பாகவதர்கள் பெருமையையும், பாகவத ஸம்பந்தத்தின் பெருமையையும், பாகவதஸம்பந்தத்தின் பெருமையையும் விளக்கிவைக்கும் பல திருமொழிகளும் திவ்வியப்பிரபந்தங்களில் காணப்படுகின்றன.

கண்சோர-என்கிற பெரிய திருமொழியும்
பயிலும் சுடரொளி-நெடுமாற்கடிமை

என்கிற திருவாய்மொழிகளும் அழகான முறையில், பாகவதர்கள் பெருமையைப் பேசியிருப்பன. இருப்பினும் இந்த விஷயத்தில் ''கண்ணிநுண்சிறுத்தாம்பு'' என்ற மதுரகவியினுடைய பிரபந்தம் தலைசிறந்தது. அது ஒரு தனி வழியை ஏற்படுத்தி வைத்தது. இதை,

''அன்பர்க்கே அவதரிக்கும் மாயன் நிற்க
அருமறைகள்தமிழ்செய்தான் தானேகொண்டு
துன்பற்ற மதுரகவி தோன்றக் காட்டும்
தொல்வழியே நல்வழிகள் துணிவார்கட்கே

என்று வேதாந்த தேசிகன் பாராட்டுகின்றார். சத்ருக்னன் படியது என்று, பெரியோர்கள் பேசி களிப்பர்.

மதுரகவிக்குப் பிறகு இந்த சித்தாந்தத்தை நன்கு ஈடுபட்டு (அவலம்பித்து) தேனினுமினிய தீங்கவிகளாலேயே பாடிவைத்தார் திருவரங்கத்தமுதனார். அவருடைய திவ்வியப்பிரபந்தமாகிய இராமாநுஜ நூற்றந்தாதிக்குப் ''பிரபன்ன காயத்திரி'' என்றே பெயர். அதையும் சேர்த்துத்தான்'' திவ்வியப்பிரபந்தம்'' நாலாயிரமாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. பாகவதன் சம்பந்தம் பெற்ற பாகவதனொருவன் பக்கல் ஒதுங்கி வாழ்தலே (வர்த்தித்தலே) ஒரு நல்ல வீடு பெறும் உபாயம், (மோட்சோபாயம்) என்று அறுதியிட்டு (நிர்த்தாரணம்) வைக்கப்பட்டிருக்கிறதென்றால் பாகவதர்கள் பெருமை பேசவும் ஒண்ணுமோ? நாம் வாய் திறந்து எம் பெருமானை ஏதாவது ஒரு வரம் கேட்க நேர்ந்தால்,

''வாய்க்க தமியேற் கூழிதோ
நூழி யூமி மாகாயாம்

பூக்கொள் மேனி, நான்கு தோள்
பொன்னா ழிக்கை யென்னம்மான்
நீக்கமில்லா அடியார்தம்
அடியார் அடியார் அடியாரெங்
கோக்கள் அவர்க்கே குடிகளாய்ச்
செல்லும் நல்ல கோட்பாடே''

(திருவாய்மொழி 8—10—10)

என்று ஆழ்வார் விண்ணப்பம் செய்வததைப் போல, கேட்போமேயன்றிச் செல்வத்தையோ, ஆன்மலாபத்தையோ (கைவல்யத்தையோ) வீடு பேற்றையோ (மோட்சத்தையோ) கேட்க மறுப் போம்.

இந்நிலையிலுள்ள 'வைணவன்' தன் காலத்தை எல்லாம் 'வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும், பூசித்தும் போக்கினேன் போது' என்றும், 'இருமுப்பொழுதேத்தி' என் றும் கூறியபடி ஒவ்வொரு நாளையும் ஐந்து பிரிவாகப் பிரித்துக் காலைமுதல் இரவு படுக்கப் போகும் வரை ஆத்மாக்களுக்கெல்லாம் ஆத்மா வான சர்வேஸ்வரனைப் பூசித்து நன்மை பெறு வதிலேயே செலவிடுவான்.

''எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்றன்றோடு
உற்றோமே யாவோம் உனக்கேநாம்
ஆட்செய்வோம்''.

என்று ஆண்டாளும்,

''உற்றேன் உகந்து பணிசெய்து உன்வாதம்
பெற்றேன்-ஈதே இன்னம் வேண்டுவது எந்தாய்''

என்று நம்மாழ்வாரும், வைணவன் நிலையைக் கூறினர்.

இவ்வாறு இங்கும் அங்கும் திருமாலன்றி இன்மை கண்ட ''வைணவன்'' திருமாலை (ஆஸ்ரயித்து) வழிபட்டு, தனக்கும், தன்னைச் சுற்றியுள்ளவர்களுக்கும் இன்பத்துக்கே காரண மான வாழ்க்கையை நடத்தி மனிதர்களின் போற்றுதலையும், இறைவனின் உகப்பையும் எய்தி, இம்மையில் இன்பத்துடன் இருந்து, மறு மையில் பேரின்பம் பெறுகிறான். ***

---

# நூல்கள் வெளியீட்டு விழா செய்திச் சுருக்கம்!

சென்னைக் கந்தகோட்டம், வசந்த மண் டபத்தில், 18.1.1985 வெள்ளிக்கிழமை மாலை 6 மணி அளவில், முன்னாள் அமைச்சர் இந்நாள் தமிழகச் சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. செ. மாதவன், M.L.A., அவர்கள் தலைமையில், கவிஞர் பேகன்(திரு. பாண்டியன், I.A.S., கூடுதல் மாவட்ட ஆட்சித் தலைவர், தஞ்சாவூர்) அவர்கள் இயற்றிய,

(1) பேகன் கவிதைகள்
(2) வானில் உலவும் ஆலமரம்
(3) சிவயோகச் சீர்த்தி

என்னும் மூன்று கவிதை நூல்களின் வெளி யீட்டுவிழா நிகழ்ந்தது. இசைமணி திரு.வி. முத் துக்கிருட்டிணன் இறைவணக்கம் பாடினார். நூல்களை வெளியிட்டுள்ள சென்னைச் சைவ சித்தாந்தநூற்பதிப்புக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர், திரு. இரா. முத்துக்குமாரசாமி, M.A., B.Litt., அவர்கள் வரவேற்புரை கூறினார்.

**வெளியீட்டுப் பேருரைகள்:**

தலைவர் மாண்புமிகு திரு செ.மாதவன், அவர்களின் தலைமையுரைக்குப் பின்னர், தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத்துறை அரசுச் செயலர் திரு.டாக்டர் ஔவை து.நடராசன், M.A., M.Litt., Ph.D., ''பேகன் கவிதைகள்'' பற்றிச் சிறப்பித்துப் பேருரை ஆற்றினார். ''வானில் உலவும் ஆலமரம்'' பற்றி, அமுத சுரபி ஆசிரியர் திரு.டாக்டர் விக்கிரமன் அவர் களும், ''சிவயோக சீர்த்தி'' பற்றித் திருக்குற ளார் திரு.வீ. முனுசாமி, B.A.,B.L., (இயக்குநர், தமிழ்ப் பல்கலைக் இயக்ககம்) அவர்களும், பேருரை நிகழ்த்தினார். சிவத்திரு சாம்பசிவ சிவாச்சாரியார் ஆசியுரை கூறினார்.

**பாராட்டுரைகள்:**

(1) திரு பொ. இல. பொன்னுசாமி, IAS., (பத்திரப் பதிவுத்துறைத் தலைவர், சென்னை) அவர்கள், (2) 'திருக்கோயில்' ஆசிரியர் திரு. ந. ரா. முருகவேள், M.A.,M.O.L. (3) டாக் டர் பெருங்கவிக்கோ (4) கவிஞர் வா.மு.சேது ராமன், (5) கவிஞர் இளங்கண்ணன், (6)கவிஞர் கானவன் ஆகியோர் பாராட்டுச் சிறப்புரை வழங்கினர்.

**ஏற்புரை;** கவிஞர் பேகன் அவர்கள்.

**நன்றியுரை:** சென்னைக் கந்தகோட்டம் முதுநிலை அறங்காவலர் திரு.பி.பாலசுப்பிர மணியம்.

நூல்களின் வெளியீட்டிற்கு உதவிபுரிந்த திருவல்லிக்கேணி திரு.த.முனுசாமிச் செட்டி யார் குமாரர்கள் திரு.லோகநாதன்செட்டியார், திரு.த.சண்முகம்செட்டியார், திரு.த. சுப்பிர மணியம் செட்டியார் ஆகியோரும்; கந்தகோட் கோட்ட அறங்காவலர்கள் திரு.கே.கேசவலு செட்டி, திரு.கே.ஆர். சண்முகம் செட்டி, திரு பி.ஈ.ரூபலிங்கம், திரு. டி.டி. பாலகிருஷ்ணன் ஆகியோரும், இவ்விழா நன்கினிது நிகழப் பல் லாற்றானும் துணைபுரிந்தனர். ***

# நம்மாழ்வார் அருளிய திருவிருத்தம்

(மூலமும் உரையும்)

குணமோ! குணத்தயலே வழிகோலும்
அருவினையேன்
மனமோ! மகளிர் நும்காவல்சொல்லீர்
புண்டரீகத்து அம்கேன்
வனம் ஓர் அனைய கண்ணான் கண்ணன்
வான்நாடு அமரும் தெய்வத்து
இனம்ஓர் அணையீர்களாய் இவையோ
நும் இயம்புகளே!

(பொழிப்புரை):

பெண்களே! உங்கள் காவலுக்கு உரிய பொருள் இந்தத் தினைப்புனமோ? அல்லது, இப்புனத்தின் அருகிலே வழிச்செல்லுகின்ற கொடிய தீவினையேன் ஆகிய என்னுடைய நெஞ்சமோ? சொல்லுங்கள். செந்தாமரை மலரின் அழகிய ஒளியை உடைய காட்டை ஒரு புடை ஒத்திருக்கின்ற திருக்கண்களை உடையவன் ஆகிய கண்ணபிரானின் பரமபதத்திலே வாழ்கின்ற நித்தியசூரிகளின் கூட்டத்தை ஒரு வகையில் ஒத்தவர்களாய் நீங்கள் கொண்டிருக்கின்ற தன்மைகள் அயலார் மனத்தைக் கொள்ளை கொள்ளுதல் முதலிய இச்செயல்கள் ஆகத்தகுமோ?

(குறிப்புரை):

தினைப்புனம் காவல் புரிந்து கொண்டிருக்கும் தலைவியையும் தோழியையும் கண்டு, தலைவன் தான் குறைவேண்டுதலைக் கூறிய முறை இது. ஒரு திருமால் அடியவர், ஆழ்வாரிடத்தில் தமது உள்ளம் ஈடுபட்ட தன்மையை கூறுதல் இத்திருவிருத்தத்தின் உள்ளுரை பொருளாகும். ஆழ்வீர்! உம்முடைய பாதுகாப்புக்கு உரியது, உமது எல்லைக்கு உட்பட்ட இடமே? அந்த இடத்தின் அருகிலே வழியே செல்லுகின்ற உம்மிடத்தில் பாசபந்தம் உடைய என்னுடைய மனமோ? கூறுக. எம்பெருமானின் பரமபதத்தில் வாழ்கின்ற நித்திய சூரிகளோடு ஒப்புமை கூறும்படி அவர்களினும் சிறந்தவர்களாய் நீர்செய்யும் செயல்கள் வேறு வழியில் செல்வோரையும் நும் வழிப்படுத்திச் சீர்திருத்தி ஆட்கொள்ளும் பெருங்கருணையோ? என்று ஆழ்வாரின் அருளியல்பை வியந்தபடி. ஆழ்வார் ஒருவர் எழுந்தருளியிருக்கின்ற இடம், தேவர்கள் எல்லாம் திரள இருந்தார்போலச் சிறந்திருக்கும் ஆதலால், 'தெய்வத்து இனம் ஓர் அனையீர்களாய்' என்றார். புண்டரீகம்-தாமரை. (23)

இயல்பு ஆயின வஞ்சநோய் கொண்டு உலாவும்
ஓரோ குடங்கைக்
கயல்பாய்வன பெருநீர் கண்கள் தம்மொடும்,
குன்றம் ஒன்றால்
புயல்வாய் இனநிரை காத்த புள்ஊர்தி
கள்ஊறும் துழாய்க்
கொயல்வாய் மலர்மேல் மனத்தொடு என்ஆம்
கொல்?
எம் கோல்வளைக்கே!

(பொழிப்புரை):

இயற்கை அழகு வாய்ந்தது; பிறர் அறியாதபடி மறைந்துள்ளதுமாகிய காதல் நோயைக் கொண்டனவாய், ஆற்றாமை மிகுதியினால் எங்கும் பரந்து பார்க்கின்ற; ஒவ்வொன்றும் ஒவ்வோர் உள்ளங்கை அளவாக உள்ளவையும், கயல் மீன் போல துள்ளிப் பிரள்வனவும் ஆகிய மிக்க நீர்ப்பெருக்கை உடைய கண்களுடனும், முன்பு ஒருகாலத்தில் பெருமழை பெய்த சமயத்தில், கோவர்த்தன மலையை ஏந்தி பசுக்கூட்டங்களை பாதுகாத்தருளியவனும், கருடவாகனனும் ஆகிய கண்ணபிரானின் தேன் பெருகும் துளசி மாலையினுடைய பறிக்கப்படுதல் பொருந்திய பூவினை விரும்பிச் சென்ற மனத்தோடும், அழகிய வளையல்களை அணிந்த என் மகளுக்கு இன்னும் என்னென்ன நிலைமை நேருமோ?

(குறிப்புரை):

தலைவனின் பிரிவைத் தாங்காத தலைவியின் ஈடுபாட்டைக் கண்ட செவிலித்தாய் வருந்திக் கூறுவதாக அமைந்த செய்யுள். எனது மகள் கண்கலக்கமுற்றாள்; நெஞ்சம் அழியப்பெற்றாள்; தலைவனின் பிரிவை ஆற்றாமல் வருந்திக் கொண்டிருக்கின்றாள். இவ்வளவுக்கும்

மேலும் அவளுக்கு என்னென்ன துன்பங்கள் நேரக்கூடுமோ என்று செவிலித் தாய் அஞ்சிக் கூறுகின்றாள். தலைவியின் கண்கள், அவளுடைய காதல் நோயை அவள் எத்துணை மறைக்கினும் வெளிப்படுத்திவிடுதலால், 'வஞ்சநோய் கொண்டு உலாவும் கண்கள்' என்கின்றாள். கண்கள் பெரியவனாய் இருத்தலைப் 'புடங்கைக் கண்கள்' என்று குறிப்பிடுகின்றார். புடங்கை - உள்ளங்கை. தலைவியானவள் தன் ஏக்கத்தால் இங்கும் அங்கும் மருண்டு நோக்குதலின் 'கயல்பாய்வன கண்கள்' என்று குறிப்பிட்டாள். காதல் மிகுதியின் ஏக்கத்தால் தலைவி வருந்துதலின் அவளது கண்களில் நீர்த்துளிகள் பெருகி நிற்றலால் 'பெருநீர்க் கண்கள்' என்றாள். என் ஆம் கொல்-என்னென்ன நேருமோ. தலைவியானவள் அழகிய வளையல்களைஅணிந் திருத்தலின் அவளை 'கோல்வளை' என்றாள். கோலவளை என்னும் சொல் கோல்வளை என வந்தது. 'நீலம்' என்னும் சொல் 'நீல்நிற மேகம்' என வருதல் போல. 'புயல்வாய்' மழைபெய்த காலத்து. புயல்-மேகம், மழை, 'வாய்' -ஏழன் உருபு.

எம்பெருமானைக் கூடப்பெறாமல் வருந்துகின்ற, ஆழ்வாரின் அயலா அன்பினை நோக்கி வியந்து, ஞானிகள் கூறுவது இப்பாடலின் உள்ளுரை பொருள். நோய் என்றது, இங்கு இறைவனைக் கூடாமையால் வருந்துகின்ற பக்தியின் மிகுதியை உணர்த்திற்று. கண்கள் என்பது, ஆழ்வாரின் ஞானநிலைச் சிறப்பை உணர்த்திற்று.(24)

எம்கோல்வளை முதலா கண்ணன்
  மண்ணும் விண்ணும் அழிக்கும்
செங்கோல்வளைவு விளைவிக்குமால்;
  திறல்சேர் அமரர்
தங்கோன் உடைய தங்கோன் உம்பர்
  எல்லாஎவர்க்கும் தங்கோன்
நங்கோன் உகக்கும் துழாய்,
  என்செய்யாது? இனி நானிலத்தே!

(பொழிப்புரை): ஆற்றல் மிகுந்த தேவர்கள் அனைவருக்கும் தலைவனாக இருப்பவனும்பிரம தேவனுக்கும் தலைவனாக இருப்பவனும், பரம பதத்திலுள்ள நித்திய சூரிகள் அனைவருக்கும் தலைவனாக இருப்பவனும்; இவ்வுலகத்திலுள்ள நமக்கும் தலைவனுமாக விளங்குகின்ற எம்பெருமான் விரும்பி அணிகின்ற துளசிமாலையானது, எமது கையில் உள்ள அழகிய வளையலின் பொருட்டு, அப்பெருமானின் ஒப்புயர்வற்ற கட்டளையின் நேர்மைக்கும் ஒரு கோணலை உண்டாக்கா நின்றது. இவ்வாறு ஆயின பின்பு இவ்வுலகத்தில் அந்த திருத்துழாய் வேறு எந்தத் தீங்கைத்தான் செய்யமாட்டாது?

(குறிப்புரை): தலைமகன் அணிந்திருந்த மாலையின் அழகில் நெஞ்சம் ஈர்ப்புண்டதலைவி, ஆற்றாமல் கூர்வதாக அமைந்தது, இந்தச் செய்யுள். தலைமகளோடு கூடியிருந்த காலத்தில் அவனது உடலின் சம்பந்தத்தால் மகிழ்ச்சியும் இன்பமும் விளைவித்த திருத்துழாய் மாலையானது, அவனைப் பிரிந்த நிலைமையில் அவ்வின்பத்தை நினைவுபடுத்தி ஆற்றாமையை மிகுதிப் படுத்துவதனால், உடம்பு மெலிந்து கைவளைகள் கழன்று விடுமாறு செய்தது. இதனால் விருப்பு வெறுப்பின்றி எல்லா உயிர்களையும் பாதுகாத்தருள்கின்ற இறைவனின் செங்கோல் ஆட்சிக்கும் ஒரு குறைபாட்டினை, என்னைப் பாதுகாவதன் மூலம் விளைவித்துவிட்டது. இஃது இன்னும் என்னென்ன வகையில் பாடு படுத்துமோ என்று தலைவி இரங்கிக் கூறுகின்றாள். இச்செய்யுளை தாயின் கூற்றாகவும் கொள்ளலாம். இறைவனுடைய இன்பத்திலே ஈடுபட்ட ஆழ்வார் அந்த இன்ப நுகர்ச்சியின் மிகுதியினால், தமக்கு ஆற்றாமை மேலும் மிகுவித்து வருத்துவதாக ஆழ்வார் குறிப்பிடுவதாக இதற்கு உள்ளுரை பொருள் கொள்ளுதல் வேண்டும்.(25)

நால்நிலம் வாய்க்கொண்டு நல்நீர்அற,
  மென்று கோது கொண்ட
வேனில்அம் செல்வன் சுவைத்து உமிழ்
  பாலை, கடந்த பொன்னே!
கால்நிலம் தோய்ந்து விண்ணோர் தொழும்
  கண்ணன் வெஃகா உது; அம்பூந்
தேன்இளஞ் சோலை அப்பாலது;
  எப்பாலைக்கும் சேமத்ததே!

(பொழிப்புரை): முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என்னும் நான்கு வகையான நிலங்களையும், தன்னுடைய கதிர்களால் வாயிற் பெய்துகொண்டு, சாரமான நீர்பகை அறும்படி மென்றுதின்று, சாரம் இல்லாத சக்கையான பாகம் இது என்று அறிந்த சூரியன், சுவைத்து உண்டு வெறுத்துக் கழித்த பாலை நிலத்தைக் கடந்துவந்த பொன் போன்றவளே! விண்ணுலகத்தவர் யாவரும் நிலத்தில் படிதல் இல்லாத தமது கால்கள் நிலத்தில் படியும்படி, இங்கு வந்து நிலைத்துநின்று வணங்கும்படியான, கண்ணபிரானது திவ்விய தேசமான திருவெஃகா என்னும் தலமானது இங்கே அருகில் அடுத்துள்ளது; அழகிய பூவையும் தேனையும் உடைய, இளமை மாறாத சோலையானது, அதோ அவ்விடத்தில் உள்ளது; அது நமது துன்பங்கள் எல்லாவற்றிற்கும் மாறாக இன்பந் தருவதோர் இடமாகும்.

(குறிப்புரை): தலைவன் தலைவியை பாலைநிலத்தில் அழைத்துக்கொண்டு உடன் போக்குச் செல்லுங்கால், அவளது இளைப்பும் களைப்பும் நீங்கும் பொருட்டு இடையிடையே உள்ள நகரம் சோலை முதலியவற்றைக் காட்டிக் கொண்டு செல்வன். இது நகர் காட்டல் என்னும் அகப்பொருள் துறையாகும். வேனில் அம் செல்வன்-சூரியன். பாலை நிலத்தில் இயல்

பினை 'வேனில் அம் செல்வன், நல்நீர் அற மென்றுதின்று கோது கொண்டு சுவைத்து உமிழ் பாலை' என்று ஆழ்வார் குறிப்பிடுகின்றார். திருவெஃகா என்னும் தலம் காஞ்சிபுரத்திலுள்ள ஒரு வைண திவ்வியதேசமாகும். திருமழிசை யாழ்வார் 'கணிகண்ணன் போகின்றான்; காம ரூபூங் கச்சி மணிவண்ணா! துணிவுடைய செந் நாப் புலவன் யானும் செல்கின்றேன். நீயும் உன்றன் பைந்நாகப் பாய் சுருட்டிக் கொள்'' என்று பாட, அதன்படியே பெருமாள் தம் முடைய பைந்நாகப் பாயைச் சுட்டிக் கொண்டு திருமழிசையாழ்வாரின் பின் செல்ல முற்பட்டார். அந்நிலையில், ஆழ்வார் 'கணி கண்ணன் போக் கொழிந்தான் காமருபூங் கச்சி மணிவண்ணா! நீ கிடக்க வேண்டும்; துணிவுடைட செந்நாப்புலவன் நான் போக்கொழிந்தேன்; நீயும் உன்றன் பைந்நாகபாய் படுத்துக்கொள்'' என்று முன்னர்த் தாம் பாடிய பாடலையே சிறிது மாற்றிப்பாட, அதன்படி பெருமானும் தாம் சுருட்டிக்கொண்ட பைந்நாகப் பாயணை யைப் பிரித்து படுத்துக் கொண்டருளினார்.

இங்ஙனம் ஆழ்வார் சொல்லியபடியே செய்த பெருங் கருணையுடையவராதலின், திருவெஃகா என்னும் தலத்திலுள்ள பெருமா ளுக்கு 'சொன்னவண்ணஞ் செய்த பெருமாள்' என்றும், 'யதோக்தகாரி' என்றும் காரணப் பெயர் வழங்கும். இத்தலத்தில் எழுந்தருளி யுள்ள பெருமாள், பிரமதேவன் செய்த வேள் வியை அழிக்கவந்த வேகவதி நதியைத் தடுக் கும் பொருட்டு, அதற்கு அணையாக அதன் குறுக்கில் பள்ளிகொண்டருளினான். அதனால் அப்பெருமாளுக்கு வடமொழியில் 'வேகாசேது' என்பது பெயர். அது தமிழில் வேகஅணை என்று வழங்கும். 'வேக அணை' என்பது, நாக அணை என்பது 'நாகணை' எனத் தொகுத்தல் விகாரப்படுதல் போல, 'வேகணை' என விகா ரப்பட்டு, அதுவும் பின்னர் வெஃகணை எனத் திரிந்து நின்று, பின்னர் வெஃகா என மருவி வழங்குவதாயிற்று.

'எப்பாலைக்கும்' என்பதில் பாலை என் னும் சொல், இலக்கணமாய்த் துன்பத்தைக் குறித்தது. 'எப்பாலைக்கும் சேமத்ததே' என் பதற்கு 'எல்லா பாலை நிலங்களாலும் வந்த வெம்மையைப் போக்கி நமக்கு நன்மைகளெல் லாம் செய்து நம்மைக் காத்தருள்கின்ற திவ்விய தேசம்தான், வெஃகா என்னும் தலம். பாலை நிலத்தை மருகாந்தரம் என வடமொழியிற் கூறுவர்; அதாவது நீரும் நிழலும் இல்லாத இடம் என்பது பொருள். 'அப்பாலது' என் னும் சொல் இங்குக் குறிப்பினால் 'திருத்தண்கா என்னும் தலத்தைக் குறிப்பால் உணர்த்தியது; 'அம்பூந் தேனிழற் சோலை அப்பாலது' என் னும் தொடர், திருத்தண்கா என்னும் தலத் தைக் குறிப்பால் சுட்டும். கா-சோலை. திருத் தண்கா என்பது, காஞ்சிபுரத்திலுள்ள விளக் கொளிப் பெருமாள் கோயில் ஆகும். இது வட மொழியில் 'இமோபவனம்' என்றும், 'தீபப்பிர காசர் சந்நிதி' என்றும் வழங்கும். சேமம்- க்ஷேமம் என்னும் வடசொல்லின் விகாரம் என்பர்

சேமம் செங்கோன் அருளே;
செருவாரும் நட்பாகுவர் என்று
ஏமம் பெறவையம் சொல்லும் மெய்யே;
பண்டு எல்லாம் மறைகூய்
யாமங்கள் தோறு எரிவீசும் நம்கண்ணன்;
அம் தண்அம் துழாய்த்
தாமம் புனைய, அவ்வாடை,
ஈதோவந்து தண்என்றதே!

(பொழிப்புரை): எல்லாப் புகழ்களுக்கும் ஒப்பற்ற தலைவனான எம்பெருமானது திருவருளே, நம்மைப் பாதுகாப்பது என்று கொள்ள, தீமை செய்வாரும் நன்மை செய்பவராவர் என்று, உறுதி பொருந்த உலகத் தோர் கூறுகின்ற, உண்மை மொழியின்படி, முன்பெல்லாம் பிரிந்திருந்த காலத்துப் பகைத்து எதிர்வந்து போருக்கு அழைத்து இரவுகள்தோ றும் நெருப்பின் வெம்மை மிக்க கதிர்களை, எங்கள்மேல் வீசும் தன்மையுடைய அந்த வாடைக் காற்றானது நமது தலைவனான எம் பெருமானது அழகிய குளிர்ந்த திருத்துழாய் மாலையை யாங்கள் பெற்று அணிந்ததனால், இதோ இங்குவந்து இப்பொழுது குளிர்ச்சியுடை யதாகத் திகழ்கின்றது.

(குறிப்புரை): எம்பெருமானின் திருத் துழாய் மாலையை பெற்று அணிந்ததனால் வெப்பம் மிகுந்த காற்றும் குளிர்ச்சியாயிற்று என்று தலைவி கூறுவதாக அமைந்தது இத்திருப் பாடல். இன்பந்தரும் தென்றல் சந்திரன் முதலிய பொருள்களும், தலைவனைப் பிரிந் திருக்கும் காலத்தில் துன்பந் தருபவையாக மாறும் என்பதும்; தலைவனைக் கூடியிருக்கும் காலத்தில் துன்பந் தருபவைகளும் இன்பமாக மாறும் என்பதும், இப்பாடலால் குறிக்கப்பெற் றன. சேமம்-நம்மைப் பாதுகாப்பது. செறுவார்- பகைவர்கள்; ஏமம்-உறுதி; 'அறைகூவி' என்பது அறைகூய் என வந்தது. அறைகூவுதலாவது போருக்கு அழைத்தல். 'வாடை' என்னும் சொல் இங்கே வடக்கேயிருந்து வீசும் காற்றி னைக் குறிக்காமல் பொதுவாகக் காற்று என் னும் பொருளில் வந்தது. தாமம்-மாலை. (27)

—தொடரும்

# சிவஞான முனிவர்

'சித்தாந்த கலாநிதி'
திரு ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.,

முன்னுரை:

கடந்த 16-17-18 ஆம் நூற்றாண்டுகளில் சைவத் தமிழ் வானில் ஒளிவீசித் திகழ்ந்திருந்த சைவத் தமிழ்ச் சான்றோர்கள் பலருள் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள், திருப்பனந்தாளிலும்-வடக்கே வாரணாசியிலும் திருமடங்கள் நிறுவிச் சைவத் தமிழ் வளர்த்த குமரகுருபர சுவாமிகள், திருவாவடுதுறை ஆதீனத்தின் செல்வாக்கும் புகழும் வளர்வதற்குச் சிறந்த காரணராக விளங்கியிருந்த சிவஞான முனிவர் என்னும் மூவரும், சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவர் ஆவர். சிவஞான முனிவர், கி.பி.1875 இல் விசுவாச ஆண்டு, சித்திரை மாதம் 8-ஆம் நாள், ஞாயிற்றுக்கிழமை, ஆயில்ய நட்சத்திரத்தில், சுத்தாத்துவைத சித்தாந்த முத்திநிலை எய்தினார்கள். இவ்வுண்மை,

''மன்னு விசுவா வசுவருடம், மேடமதி,
உன்இரவி நாள்பகல்; ஓது ஆயிலியம் -
பன்னும்
திருவாளன் எம்கோன் சிவஞான தேவன்,
திருமேனி நீங்கு தினம்''

என்னும் வெண்பாவால் தெளிவுற விளங்குகின்றது. ஆதலின் அண்மையில் 1985 ஆம் ஆண்டு சித்திரை மாதத்தில், சிவஞான முனிவரவர்களின் 200-ஆவது ஆண்டு நினைவு விழா, நிகழ இருக்கின்றது. இச் சிறப்பு நிகழ்ச்சி நம சைவ சித்தாந்த உலகத்திற்குப் பெருமகிழ்ச்சியை விளைவிக்கிற ஓர் அரிய பெரிய நிகழ்ச்சியாகும்.

(1) பெருங்கல்வியாளர்:

சிவஞானமுனிவர் அண்மைக் காலத்தில் வாழ்ந்திருந்த சான்றோர்களில் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத பெருங்கல்வியாளர் (Scholar) சைவத் திருமுறைகள், சித்தாந்த சாத்திரங்கள் முதலியவற்றில் மட்டுமேயன்றிச் சங்கநூல்களிலும், அக்காலத்தில் பிறர் எவர்க்கும் வாய்க்காத அத்துணை அளவுக்கு அழுத்தமான புலமையும் தேர்ச்சியும் பெற்றவர். அது மட்டுமோ! வடமொழியிலும் வல்ல மிகப்பெருங் கல்வியாளர். வடமொழியில் உள்ள பலவேறு நூல்களிலும் அவருக்கு அளவற்ற புலமையும் தேர்ச்சியும் நிறைந்திருந்தன. ''தென்சொற் கடல்கடந்து, வடசொற் கடற்கு எல்லை தேர்ந்தவர்''. அதுமட்டுமன்று, சைவம் வைணவம் முதலிய நம் தமிழகச் சமயங்களில் மட்டுமேயன்றி, புறப்புறம் - புறம் - அகப்புறம் - அகம் என்னும் பாகுபாட்டில் அமைந்திருந்த, பலவேறு சமயங்களையும் பற்றி மிக நுணுக்கமாகக் கற்றுத் தேர்ந்திருந்தார். அவ்வளவில் அமையாது, அவற்றின் விரிவான கடலனைய கருத்துக்களையெல்லாம் மிகச் சுருக்கமாகத் திரட்டித் தொகுத்து விளக்கவும் வல்லவராக விளங்கினார். அவர்தம் பெருங் கல்விப் புலமை நலனுக்கு இவைகளெல்லாம் சான்றுகளாகும்.

(2) பெருங்கவிஞர்:

கல்வியாளர்களெல்லாம் கவிஞர்கள் ஆகிவிடுவதில்லை; கவிஞர்கள் எல்லாம் கல்வியாளர்கள் ஆக இருப்பதில்லை. இஃது உலகெங்கணும் காணப்படுகின்ற ஓர் அரிய உண்மையாகும். கல்வியிலும் சிறந்து, கவிதைத் திறனும் நிறைந்து விளங்கவல்ல, மாட்சிமை பெற்றவர்கள், உலகில் விரல்விட்டு எண்ணிவிடக்கூடிய ஒருசிலரேயாவர். சிவஞானமுனிவர், தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இலராய், ''முத்தமிழ்த் துறையின் முறைபோகிய உத்தமக் கவிஞர்'' எனப் போற்றிப் புகழத் தக்க, ஒரு பெருங் கவிஞர் (Poet) ஆகவும் விளங்கியிருந்தார். அவர்கள் இயற்றியளித்துள்ள, கவிதை இலக்கிய நூல்கள் வருமாறு:

1. அகிலாண்டேசுவரி பதிகம்
2. இளசைப் பதிற்றுப்பத் தந்தாதி
3. கச்சி ஆனந்த ருத்திரேசர் பதிகம்
4. கலைசைச் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழ்
5. கலைசைப் பதிற்றுப்பத்தந்தாதி
6. குளத்தூர் அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ்
7. குளத்தூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி
8. சோமேசர் முதுமொழி வெண்பா
9. திருத்தொண்டர் திருநாமக்கோவை
10. திருமுல்லைவாயில் அந்தாதி
11. திருவேகம்பர் அந்தாதி
12. திருவேகம்பர் ஆனந்தக் களிப்பு
13. பஞ்சாக்கர தேசிகர்மாலை
14. காஞ்சிப் புராணம்

ஆகிய கவிதை நூல்கள், சிவஞானமுனிவரின் கவிதைத் திறனை விளக்கப் போதிய சான்றுகளாகும்.

(3) தத்துவ வித்தகர்

உலகத்தில் அவ்வந் நாடுகளிலும்-மொழிகளிலும்-இனங்களிலும்-பல்வேறு காலங்களில், பல்வேறு கவிஞர்கள் தொன்றுதொட்டுத் தோன்றி வந்துள்ளனர். அக்கவிஞர்கள் அனைவரும் தத்துவ வித்தகர்கள் (Philosophers) அல்லர். தத்துவ வித்தகர்களில் பெரும்பாலோர், கவிஞர்களாக இருப்பதில்லை. தத்துவ வித்தகர்கள் கவிதைகள் புனைய இயல்வதோ, முயல்வதோ இல்லை. இவ்விரண்டு இயல்புகளும், தனித் தனியே வெவ்வேறானவை. ஆனால் நம்முடைய சிவஞான முனிவர், ஒரு மாபெரும் தத்துவ வித்தகர் (Philosopher) ஆகவும், தலைசிறந்து திகழ்ந்திருந்தார். எல்லாச் சமய தத்துவங்களையும், அவர் ஆராய்ந்தறிந்து தேர்ந்து தெளிந்திருந்ததுடன், சைவசித்தாந்தத் தத்துவத் துறையில் ஒரு தனிப்பெரும் ஞாயிறு என்னும் நிலையில், தலைசிறந்து திகழ்ந்தோங்கி ஒளிபரப்பித் திகழ்ந்திருந்தார். சங்கரர்-இராமாநுசர்-மத்துவர் முதலிய பல பெருஞ் சான்றோர்களுக்கும் சரிநிகர் சமானமாக மதித்துப் போற்றத்தக்க பெருமாட்சிமையுடையவராகப் பிறங்கினார்.

(4) அருளாளர்:

தத்துவ வித்தகர்கள் அறிவாற்றல் நலங்களிலும், கருத்துக்களை எடுத்து விளக்கும் ஆற்றலிலும், சொற்போர்த் திறனிலும், பிறர் கொள்கைகளை மறுத்துரைத்தலிலும், தம் கொள்கைகளை நிலைநாட்டுவதிலும், ஈடும் எடுப்புமின்றித் திகழ்வார்கள். அவர்கள் இறைவனின் அருள்நலம் பெற்ற, மிக மேலான மெய்யுணர்வாளர்கள் (Saints) ஆகப் பெரும்பாலும் இருப்பதில்லை. தத்துவ வித்தகர்கள் வேறு, அருளாளர்களாகிய ஆசாரியர்கள் வேறாவர். இதுபற்றியே, திருமால்நெறியில் ஆழ்வார்கள் வேறாகவும், ஆசாரியர்கள்வேறாகவும் குறிப்பிடப் பெறுகின்றனர். ஆழ்வார்கள் இறையருள் அனுபவத்தில் ஆழ்ந்து திளைத்து மகிழ்ந்தவர்கள். அதனாலேயே அவர்களுக்கு ''ஆழ்வார்கள்'' என்னும் காரணப் பெயர் ஏற்பட்டது; அவர்களுக்குப் பின்னர்த் தோன்றிய நாதமுனிகள் முதலான சான்றோர்கள் ஆகிய ஆசாரியர்கள் வேறு வேறாகக் குறிப்பிடப்பெறுதல் காணலாம்.

அவ்வாறே நமது சித்தாந்த சைவச் செந்நெறியிலும், சம்பந்தர் அப்பர் சுந்தரர், மாணிக்கவாசகர் என்னும் நால்வரும் சமய குரவர்கள் என்றும், மெய்கண்டார் அருள்நந்திசிவம் மறைஞானசம்பந்தர் உமாபதிசிவம் ஆகியவர்கள் சந்தான குரவர்கள் என்றும், தனித்தனியாகப் போற்றப்படுகின்றனர். இதனால் சந்தான குரவர்கள் இறையருள் பெறாதவர்கள் என்பது, கருத்தன்று. அவர்களும் இறையருள் பெற்றவர்களே யாவர். எனினும், மேற்குறித்த சமயகுரவர்கள், அத்துறையில் தனிப்பெருஞ்சிறப்பு உடையவர்கள் என்பது இக்கருத்தாகும். அம்முறையில், சிவஞானமுனிவர் கல்வியாளர்-கவிஞர்-தத்துவ வித்தகர்-என்பதோடு அமையாமல், ஒரு பெரிய அருளாளர் ஆகவும் திகழ்ந்திருந்தார் என்பது, கருதி மகிழ்தற்குரியது.

(5) பேருரையாளர்:

சிவஞானமுனிவர் மிகப்பெரிய கவிஞராக விளங்கியிருந்ததுடன், ஒப்புயர்வற்ற பேருரையாளராகவும் உயர்ந்தோங்கித் திகழ்ந்தார். கவிஞர்கள் அல்லது நூலாசிரியர்கள் பெரும்பாலும் உரை எழுதுவது இல்லை. தெய்வப்புலவர் திருவள்ளுவர் உலகம் போற்றும் ''திருக்குறள்'' என்னும் அரும்பெரும் நூலை இயற்றினார். ஆனால் அதற்கு அவர் உரை இயற்றவில்லை. அவருக்குப் பின்னர் வந்த தருமர் - மணக்குடவர் - தத்தர்-நச்சர் முதலிய பதின்மர், திருக்குறளுக்கு உரை எழுதியுள்ளனர். இந்நாளில் எத்தனையோ பல அறிஞர்கள், மேலும், மேலும் பல எண்ணற்ற உரைகளைத் தொடர்ந்து எழுதி வெளியிட்டு வருகின்றனர்.

தொல்காப்பியர், தொல்காப்பியல் என்னும் அரும்பெறல் இலக்கணநூலை 5000 ஆண்டுகளுக்கு முன்னர், இன்றைய மொழிநூலறிஞர்கள் ( Philologists, Linguists ) எல்லோரும் வியந்து போற்றும் வண்ணம் இயற்றியருளினார். அதற்கு அவர் உரைஇயற்றவில்லை. அவருக்குப் பின்னர் வந்த இளம்பூரணர், நச்சினார்க்கினியர், பேராசிரியர், சேனாவரையர், தெய்வச்சிலையார் முதலிய பலர், அதற்கு உரைகள் எழுதியுள்ளனர். இந்நிலையில் சிவஞானமுனிவர், மிகச் சிறந்த பேருரையாளர் ( Commentator ) ஆகவும் விளங்கியிருந்தார்.

(6) தருக்கநூல் அறிஞர்:

அமிழ்தினும் இனிய நமது தமிழ்மொழியானது, எத்துணையோ பல்வேறு துறைகளில் வியத்தகு வளர்ச்சிநிலைகள் அடைந்துள்ளது. ஆயினும் வடமொழியைப் போலத் தருக்கநூற்கள், தமிழில் வளரவில்லை. தெய்வப்புலவர் திருவள்ளுவர் ''எண்ணென்ப ஏனைய எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு'' என்னும் திருக்குறளில், தருக்க நூலினை எண்(Logic)என்றும், இலக்கண நூலை எழுத்து ( grammer ) என்றும் குறிப்பிட்டுள்ளார். ''ஆற்றின் அளவு அறிந்து கற்க; அவையஞ்சா மாற்றம் கொடுத்தற்பொருட்டு'' என்னும் குறளில், தருக்க நுலினை அளவு என்று குறிப்பிடுவதோடு, அத்தருக்கநூற்பயிற்சியால் நாம் பெறுவதற்குரிய பயனை 'அவையஞ்சா மாற்றம் கொடுத்தற்பொருட்டு' என்றும் விளக்கியிருக்கின்றார். அதுமட்டுமன்றி, அளவைநூல் முறையைத் தழுவியே ''அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே யுலகு'' என்னும் திருக்குறளையே இயற்றியருளியிருக்கின்றார்.

துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் 'கேசவ கிருஷ்ண மிச்ரர்' என்னும் அறிஞர் வடமொழியில் இயற்றியுள்ள தருக்க பரிபாடை என்னும் நூலைத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். ஆனால் வடமொழியில் இந்தியத் தருக்க நூல் ( Indian Logic ); சமணத் தருக்கநூல் (Jain Logic) பௌத்த தருக்க நூல் (Buddhist Logic ) என்று, எத்தனையோ பல எண்ணிறந்த தருக்க நூல்கள் தோன்றியிருக்கின்றன. தமிழில் அங்ஙனம் ஏதும் இல்லை.

சகலகலா பண்டிதர் என்னும் அருள்நந்தி சிவாசாரியார், மேற்குறித்த தருக்கநூற் கடலையெல்லாம் ஆய்ந்து அளந்து தேர்ந்து, தமது சிவஞானசித்தியாரின் சுபக்கப் பகுதியில், அளவையியல் என்னும் தலைப்பில் 14 அழகிய செய்யுட்களால், அருமையாகத் தொகுத்துச் சுருக்கி விளக்கி இருக்கின்றனர். அதற்குக் காரணம் ஆசிரியர் மெய்கண்டார், தமதுசிவஞானபோதம் என்னும் செந்தமிழ்த் தெய்விகத் தத்துவநூலில்

''அவன் அவள் அது எனும் அவை மூவினைமையின்;
தோற்றிய திதியே; ஒடுங்கி மலத்து உளதாம்;
அந்தம் ஆதி என்மனார் புலவர்''

என்னும் முதற்பாவில், சிவஞானபோதம் முதலிய சமய தத்துவ ஆராய்ச்சி நூல்களின் பயிற்சிக்கும், தேர்ச்சிக்கும் மிகமிக இன்றியமையாதது தருக்கநூல் என்னும் குறிப்பினை 'என்மனார் புலவர்' என்னும் தொடரில் குறிப்பிட்டளியிருத்தலே ஆகும். அத்தொடருக்கு ''என்று கூறுவர் அளவைநூல் உணர்ந்தோர்'' என்பது பொருள் ஆகும். சிவஞானமுனிவர், தாம் இயற்றியருளிய சிவஞானப் போதப் பேருரையில், இவ்வாறே விளக்கப்பேருரை எழுதியிருத்தல் காணலாம். சமய தத்துவ ஆராய்ச்சிக்குத் தருக்கநூற் பயிற்சி இன்றியமையாதது என்பதனை நன்குணர்ந்தவர் ஆதலின், சிவஞானமுனிவர் 'அன்னம்பட்டர்' என்னும் வடமொழிப் பேரறிஞர் 'தருக்க சங்கிரகம்' என்னும் நூலுக்கு வரைந்த 'அன்னம்பட்டீயம்' என்னும் நூலைத் தமிழில் அழகுற மொழி பெயர்த்துத் தந்தருளியிருக்கும் திறம் நினைந்து நினைந்து. வியந்து மகிழ்ந்து போற்றுதற்குரியது. சிவஞானமுனிவரின் உரைகள் அனைத்தும் தருக்க நூல்மரபு பிறழாமல், அழகுற அமைந்திருத்தல், அறிஞர்கள் அனைவரும் ஆராய்ந்து உணர்ந்து அகமகிழத்தக்கதாகும்.

## (7) இலக்கணக் கலைஞர்:

தமிழ்மொழியானது, இலக்கணக் கலையின் கட்டுக்கோப்பில் ஈடும் எடுப்பும் இல்லாதது நம் தமிழிற்போல், மிகவும் திருத்தமான இலக்கண அமைப்புவளம், உலகில் வேறு பிற எம்மொழியிலும் காண்பது அரிது!

''கண்ணுதற் பெருங் கடவுளும்
கழகமோடு அமர்ந்து,
பண்ணுறத் தெரிந்து ஆய்ந்த, இப்
பசுந்தமிழ், ஏனை
மண்ணிடைச்சில இலக்கண
வரம்பிலா மொழிபோல்,
எண்ணிடப்படக் கிடந்ததா
எண்ணவும் படுமோ?''

எனவரும் பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற் புராணச் செய்யுள், இயைபுடைமை பற்றி, நாம் அனைவரும் எண்ணி மகிழ்வதற்குரியது. இலக்கணப்புலமை இல்லாதவன், ஓர் அறிஞன் என எவராலும் கருதவும், மதிக்கவும் படமாட்டான். 'அரங்கின்றி வட்டு ஆடல்போல்வதே, இலக்கணப் புலமை இல்லாதவரின் கல்விநலமும் கவித்திறனும் ஆகும். அவைகள் வெறும் டோலியே என இகழ்ந்து ஒதுக்கப்பெறும். ''எழுத்தறியார் கல்விப்பெருக்கம் அனைத்தும், எழுத்து அறிவார்க் காணின் இலை ஆம்''.

ஆனால் பிற்ஞறநாளில் இலக்கணக் கலையின் இன்றியமையாமை போற்றப் பெறாமல், நாளடைவில் எளிதாக எண்ணிப் புறக்கணிக்கப் பெற்றது. இடைக்காலத்தில் ஏறத்தாழ 400-500 ஆண்டுகளாகப் போதிய அளவு அறிஞர்களால், இலக்கணம் போற்றப்படவில்லை. பலர் கொச்சை நடையிலேயே, நம்மொழியைப் பேசவும் எழுதவும் தலைப்பட்டனர். தம்மைப் பக்தர்கள் என்றும், அடியார்கள் என்றுமே சொல்லிக்கொள்ள விரும்பிய சிலர், தமக்கு இலக்கண அறிவு இன்றியமையாததென்றுஇறைவன்பால் அன்பு இருந்தால் அஃதொன்றே அமையும் எனக் கருதிக் கொண்டனர். ஆனால் நம் சிவஞானமுனிவர் இலக்கணக் கலையிலும் மிக வல்லவர் ஆக (grammarian) இலங்கினார். தொல்காப்பியம் முதலியபழம்பெரும்இலக்கணங்களையெல்லாம் எழுத்தெண்ணிக் கற்றார். பிற நூல்களின் பிழைகளைக் கண்டறியவும், அவைகளை மறுத்தொழிக்கவும், திருத்திப் பிழை நீக்கி உதவவும்; அவருக்கு இலக்கணப்புலமை பேருதவி புரிந்தது.

1. தொல்காப்பியப் பாயிர விருத்தி
2. தொல்காப்பியச் சூத்திர விருத்தி
3. நன்னூல் விருத்தி
4. இலக்கண விளக்கச் சூறாவளி

என்பன போன்று, அவரால் எழுதப்பெற்றுள்ள இலக்கணநூல்கள், அவர் எத்தகைய எத்துணைப்பெரிய இலக்கணக் கலைஞர் (grammarian) என்னும் உண்மையை விளக்குவதற்குப் போதிய மிக மேலான சான்றாகும்.

—தொடரும்

# நூலும் கவிதையும்

முன்னுரை:

ஒருநூலின் சிறப்பை அளப்பதற்குப் பல வகையான அளவுகோல்கள் உண்டு. ஒரு நூலுக்கு மூவகையான சிறப்புக்கள் இன்றி அமையாது அமைந்திருத்தல் வேண்டும். (1) சொல்லப்படும் பொருளின் சிறப்பு (விஷய வைலட்சண்யம்); (2) சொல்வோன் சிறப்பு (வக்த்ரு வைலட்சண்யம்); (3) சொல்லப்படும் முறையின் சிறப்பு (பிரபந்த வைலட்சண்யம்) என்று கூறப்படும். இது இப்பொழுது நம்மால் கூறப்படுவதன்று. ஏறத்தாழ 1000 ஆண்டுகளுக்கு முன்னரேயே இம்மரபு நிலவி வந்தது என்று தெரிகின்றது. உலகம் வியந்து போற்றத்தக்க திருத்தொண்டர் புராணம் என்னும் பெரியபுராணத்தினை இயற்றியருளிய சேக்கிழார் பெருமான்,

> ''செப்பல் உற்ற பொருளின் சிறப்பினால்,
> அப்பொருட்கு உரை யாவரும் கொள்வரால்;
> இப்பொருட்கு என்உரை சிறிது ஆயினும்
> மெய்ப்பொருட்கு உரியார் கொள்வர் மேன்மையால்''

என்று, அந்நூலின் அவையடக்கப் பகுதியில் கூறியிருத்தல் கொண்டு இதனை நம்மனோர் உணரலாம். ''செப்பல் உற்ற பொருளின் சிறப்பு'' என்னும் தொடரால், சொல்லப்படுகின்ற பொருளின் மாட்சிமை (விஷய வைலட்சண்யம்) சுட்டப்பெறுகின்றது. ''இப்பொருட்கு என் உரை சிறிது'' என்பதனால், எதிர்மறை முகத்தால் சொல்லுபவனின் பெருந்தன்மை ஆகிய (வக்த்ரு வைலட்சண்யம்) புலப்படுத்தப்பெறுகின்றது. ''மெய்ப்பொருட்கு உரியார் கொள்வர் மேன்மையால்'' என்னும் தொடரால் சொல்லப்பெறுகின்ற முறையின் திறம் ஆகிய (பிரபந்த லைவட்சண்யம்) சுட்டப்பெற்றது. இம்மூன்றுவகையான சிறப்புக்களையும், பெரிய புராணம் பெற்று விளங்குகின்றது என்பது தெளிவு. பெரிய புராணத்தில் சொல்லப்படுகின்ற பொருள் அடியார்களின் உண்மைவரலாறும், சிவபெருமானின் திருவருளும் மாட்சிமையும் ஆகும். அதனைச் சொல்லுகின்றவரோ 'தெய்வப்புலவர் சேக்கிழார் பெருமான்'. இந்நாளில் உலகவரலாற்றினை மிகவும் விரிவாக ஆராய்ந்து, 12 தொகுதிகளாக வெளியிட்டுள்ள ஆர்நால்டு டாயின்பீ (**Arnold Toynbee**) என்னும் உலகப் பேரறிஞர், போன்ற பேரறிஞர்களுக்கு ஒரு முன்னோடியாக அமைகின்ற முறையில், தெய்வப்புலவர் சேக்கிழார் பெருமான் தமது நூலினை வரலாற்று நூல்கள் எழுதப் பெறுதற்குரிய நெறிமுறைகள் சிறிதும் பிறழாமல், ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இயற்றியிருப்பது, நினைத்தொறும் நினைத்தொறும் வியப்பினை விளைவிப்பதாகும்;

இனி, சொல்லப்படும் பொருளின் மாட்சிமை ஒருபுறமிருக்க, சொல்லுகின்ற ஆசிரியராகிய சேக்கிழார் பெருமானின் சிறப்புக்கு ஓர் எல்லையேயில்லை. அவரைத் தெய்வப்புலவர் என்று தமிழுலகம் தொன்றுதொட்டுப் போற்றி வருகின்றது. அவர் சோழப் பேரரசில் இரண்டாம் குலோத்துங்கன் (கி.பி.1133-1150) என்னும் வேந்தனுக்குத் தலைமை முதலமைச்சராக விளங்கியவர். இரண்டாம் குலோத்துங்கன் தான் தில்லைக்கோயிலில் உள்ள சிவகங்கைத் தீர்த்தம், ஆயிரக்கால் மண்டபம், சிவகாமியம்மைகோட்டம் ஆகியவற்றையெல்லாம் அமைத்தவன். அப்பெருவேந்தன், சேக்கிழார் பெருமானைத் தலைமை முதலமைச்சராகக் கொண்டு போற்றியமை சிந்தித்து உணர்தற்கு உரியது. அதுமட்டுமோ! அந்நூலுக்கு 'உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்' என்னும் வரியினைச் சிவபெருமான் அடியெடுத்துக் கொடுத்தருளியமையும், ஒருபெரும் சிறப்பாகும். பெரியபுராணமானது, 'பக்திச்சுவை நனி சொட்டச் சொட்ட' அமைந்துள்ளது; ''சொல்லும் பொருளும் நனிசிறப்பச் சுருங்கச் சொல்லல் முதலாய தோட்டி அமைய, அமங்கலமாம் சொற்கள் புணராது அறக்களைந்து, வெல்லும் தகைய முரண்காட்டி, விலக்கு விலக விதிதழுவ ...இயன்றுள்ளது. இவ்வாற்றால் சொல்லப்பெறும் முறையாகிய பிரபந்த வைலட்சண்யம் அமையப்பெற்று விளங்குகின்றது.

பல நூல்களுக்கு இம்மூன்று வகையான சிறப்புக்களும் ஒருசேர அமைவதில்லை. ஒன்றிரண்டு குறைந்தேயிருக்கும். சிலநூல்களில் பொருள் சிறப்பாக இருக்கும். அதனை வெளி

யிடும் சொற்கள் கொச்சையாக இருக்கும். ஆசிரியர் சிறந்தவராக இருப்பார், ஆனால் அவர் எடுத்துக்கொள்ளும் பொருள் அவருடைய தகுதிக்கு ஏற்றதாக இல்லாமல் இருக்கும். இளங்கோவடிகள் தவநலஞ்சான்ற முனிவராகிய சான்றோராகத் திகழ்ந்தார். ஆயினும் அவர் எடுத்துக் கொண்ட பொருள் ( Theme ) அத்துணை உயர்ந்ததென்று சொல்வதற்கில்லை. 'பொற்கொழுக் கொண்டு வரகுக்கு உழுவது' போல, அவருடைய செயல் நிகழ்ந்தது எனலாம். அவ்வாறே சீவகசிந்தாமணி இயற்றிய திருத்தக்கதேவர் ஒருபெரும் சமணத் துறவுச் சான்றோராகிய விளங்கியிருந்திருப்பினும், இழிந்த சிற்றின்பச் சுவையே தொடக்க முதல் முடிவுவரை பெரிதும் நிறைந்து காணப்படும் நூலினையே இயற்றினார். சேக்கிழார் பெருமான் பாடஎடுத்துக்கொண்ட பொருள் தமிழகப் பண்பாடு-கலை-நாகரிகம்-சமுதாய ஒழுக்கம்-முதலிய பலவற்றின் மாட்சிமையினை விரித்துரைத்து வளர்க்கும் மேன்மை மிக்கது. 'இனியார் உளரோ? முன்னும் இல்லை!' என்பதுபோல, நம் பெரியபுராணத்திற்கு முன்னரும் அத்தகையதொரு நூல் தோன்றிற்றிலது. பின்னரும் இதுகாறும் தோன்றக் காணோம்; தோன்றவும் இயலாது.

அவைக்களச் சிறப்பு:

ஒரு நூலின் பெருமையை, அஃது அரங்கேற்றப்பெற்ற அவைக்களத்தின் பெருமையே இனிது விளக்கும். தொல்காப்பியம் என்னும் அரும்பெறல் இலக்கணநூல், நிலந்தருதிருவிற் பாண்டியன் அவைக்களத்தில் அரங்கேறியது. திருவள்ளுவரின் திருக்குறள் சங்ககாலப் புலவர்களின் அவைக்களத்தில் அரங்கேறியதாகக் கூறுவர். அவைக்களங்கள் நல்லவை-புல்லவை-அல்லவை என்னும் மூன்று வகைப்படும். கல்வி கேள்விகளில் வல்ல சான்றோர்கள் நிறைந்திருப்பது நல்லவை. மிக உயர்ந்ததோ அல்லது மிகத் தாழ்ந்தோ இல்லாமல், ஓராளவு அறிவு நலம் உடைய இடைத்தரமக்கள் கூடியிருப்பது, புல்லவை. கல்லாதரர்களும் கயவர்களும் வீணான குழப்பம் விளைவிப்பவர்களும் குறும்புசெய்தலேயே குறிக்கோளாக உடையவர்களும், அறிவுக்கும் பண்புக்கும் தொடர்பு இல்லாதவர்களும், கள்ளுண்ணல் முதலிய தீய பழக்கம் உடையவர்களும் கூடியிருப்பது அல்லவை.

ஒருசிலருக்குத் தம் நூல்களைத் தகுதி மிக நல்லவையில் அரங்கேற்றும் வாய்ப்பும் சிறப்பும் கிடைப்பதில்லை. கம்பநாடர், தமது ஒப்புயர்வற்ற காவியத்தினைச் சோழப் பேரரசனின் அவைக்களத்தில் அரங்கேற்ற இயலாமற் போயிற்று. அடுத்துத் தில்லைவாழ் அந்தணர்களின் முன்னிலையிலும் அரங்கேற்ற முடியவில்லை. அதனால் மனமுடைந்துபோன அவர் திருவரங்கத்திலே அரங்கேற்றலாம் என்று சென்றார். அங்கும் அனுமதி கிடைக்கவில்லை. 'நாகபாசப் படலம்' படித்து, அரவு கடித்து இறந்த அந்தணச் சிறுவன் ஒருவனை உயிர்ப்பித்து அற்புதம் நிகழ்த்திக் காட்டியும், அவரது எண்ணம் நிறைவேறவில்லை. திருவரங்கத்தில் உள்ள மேட்டழகிய சிங்கர் சந்நிதியில் ''இரணியவதைப்படலம்'' இயற்றிமுடித்து ''சிரித்தது செங்கட்சீயம்'' என்னும் பாடலைப் பாடிய பொழுது மேட்டழகிய சிங்கர் உலகமே அஞ்சிடத்தக்க வகையில் ஒருபெரும் சிரிப்புப் பேரொலியை நிகழ்த்தினார். அதன் பிறகே கம்பநாடரின் காப்பியம் அங்கு அரங்கேற்றப் பெற்றது. ஆனால் பெரியபுராணம் சோழப் பெருவேந்தன் அடிபணிந்து பணிபுரியத்தில்லை திருக்கோவின் ஆயிரக்கால் மண்டபத்தில் ஒரு சித்திரை ஆண்டு, திருவாதிரை திருநாளில் தொடங்கி, மறுஆண்டுச் சித்திரைத் திருநாளில் சீரும் சிறப்பும் பெற நிறைவேறியது. இவையெல்லாம் ஈண்டு இயைபு பற்றி எண்ணியுணர்தற்குரியது.

குறிக்கோள்மாட்சி:

ஒருநூலுக்குப் பெருமை நூலாசிரியரின் குறிக்கோள் நலத்தாலும் அமைகின்றது. பல கவிஞர்களும் புலவர்களும் ''குறிக்கோள் இலாது கெட்டேன்'' என்று அப்பர்பெருமான் அழுது அரற்றுதல் போல, ஒரு குறிக்கோளுமின்றி, சிலர் ஒரு நடைப்பிணம் போல சில காலம் வாழ்ந்திருந்து மாய்ந்து மறைகின்றனர். சிலர் பொருளுக்கு ஆசைப்பட்டுத் தம் கவிதையையோ நூலையோ இயற்றுவர். வேறுசிலர் ஓர் அரசன் அல்லது செல்வன் கேட்டுக் கொண்டதற்கு இணங்கத் தம் நூலினைப் பாடுவர். வில்லிபுத்தூர் ஆழ்வார் வக்கபாகை ஆட்கொண்டான் என்னும் சிற்றரசன் கேட்டுக் கொள்ளத் தம் பாரத நூலைப் பாடினார். புகழேந்திப்புலவர் சந்திரன்சுவர்க்கி என்பவன் வேண்டிக் கொண்டதனால் நளவெண்பா இயற்றினார். நன்னூல் ஆசிரியர் ஆகிய பவணந்தி முனிவர் சீயகங்கன் என்னும் சமணச் சிற்றரசன் வேண்டியதனால் தம் நூலை இயற்றினார். இங்ஙனமெல்லாம் இல்லாமல் உயர்ந்த குறிக்கோள்களுக்காக ஒரு கவிஞன் தன்னுடைய நூலை அல்லது கவிதையை இயற்றுதல் வேண்டும். இளங்கோவடிகள்,

''அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்று
ஆவதும்,
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்
தலும்,
ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும்
என்பதும்,
சூழ்வினைச் சிலம்பு காரணமாகச் சிலப்பதி
காரம் என்னும்பெயரால்
நாட்டுதும் யாம்ஓர் பாட்டுடைச் செய்
செய்யுள்''


என்று, தாம் தம் நூலினை இயற்றுதற்குரிய குறிக்கோளை வெளியிட்டருளினார்.

—தொடரும்.



மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள், அமெரிக்காவிலிருந்து சென்னை திரும்பி முதலமைச்சர் பதவி ஏற்றபின்னர், தருமையாதீனத்தின் சார்பில், திருநள்ளாறு கட்டளைத் தம்பிரான் தவத்திரு சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், ஆதீனத்தின் மரியாதைகளுடன் வந்து பொன்னாடை போர்த்தி மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தருமையாதீனம் திருவார் திரு. குருமகாசந்நிதானம் அவர்களின் அருளாசியினைத் தெரிவித்து மரியாதை செலுத்துதல். ஆதீனத்தின் அடியவர்கள் பலர் உடன் இருக்கின்றனர்.

 பதிவு எண். எம் 7039



ஸ்ரீ பெரும்பூதூர் அருள்மிகு ஆதிகேசவப் பெருமாள்



அருள்மிகு ராமானுஜர்



திருக்கோயில் தக்கார், ஸ்ரீமத் பரம ஹம்ஸேத்யாதி
வரத எதிராஜ ஜீயர் சுவாமிகள்



திருப்பணிக் குழு தலைவர் திரு. J. ராமசாமி நாயுடு,
செயலாளர் திரு. நா. நாகராசன்

...மான்
...க்கோளு
போல சில
...றகின்றனர்.
...தம் கவிதை
... வேறுசிலர்
...க்கட்டுக் கொண்
...ளப் பாடுவர்.
...க ஆட்

வெளியீடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600 034.
ஆசி... ந. ரா. முருகவேள், எம்.ஏ.,எம்.ஓ.எல்.
... அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.